Registered as a Newspaper

பக்கங்கள்
16+8+IV

விலை
ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 351

ஞாயிற்றுக்கிழமை 12 நவம்பர் 2023

ஐப்பசி 26 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# 14 மாவீரர் துயிலும் இல்லங்கள் சிறிலங்கா ராணுவத்தின் பிடியில்!

முல்லைத்தீவு, நவ. 12
தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் 14க்கும் மேற்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் இராணுவத்தினர் முகாம்கள் அமைத்து நிலைகொண்டுள்ளனர். தமிழ் மக்களின் வணக்கத்துக்குரிய இடங்களை விடுவித்து அவர்கள் அஞ்சலிப்பதற்கு இடமளிக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.
முல்லைத்தீவு - விசுவமடு, தேராவில் மாவீரர் துயிலும் இல்ல காணியில் இருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்று கவனவீர்ப்புப் »15

வாசகர்கள்,
விளம்பரதாரர்கள்,
நலன்விரும்பிகள்,
அபிமானிகள் அனைவருக்கும் அன்புரிமையுடன் உதயனின் உளங்கனிந்த தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.



## பாதீடு நாளை முன்வைப்பு!

# ஐ.எம்.எப். நிபந்தனைகளால் மக்கள் மீது சுமை திணிப்பு?

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
125,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
அதிகபட்ச இரகசியத்தன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் வங்கி

கொழும்பு, நவம்பர் 12

**2023** ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நாளை முன்வைக்கப்படவுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எப்.) நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்திலுள்ள இலங்கை அதற்காக வரிகளை தாறுமாறாக அதிகரிக்கவுள்ளதால் நாளைய வரவு - செலவுத்திட்டம் மக்களுக்கு பெரும் சுமையாகவே இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. »15

# 'என்னைக் கொல்ல முயற்சி'!

## அமைச்சர் ரொஷான் திடுக்கிடும் தகவல்



கொழும்பு, நவ. 12
ஜனாதிபதி செயலகத்தில் விஷம் இருக்கக்கூடும் என்பதால், தான் ஒருபோதும் அங்கு செல்லமாட்டேன்.
'நான் ஜனாதிபதியைச் சந்திப்பேன், ஆனால் ஜனாதிபதி செயலகத்துக்குச் செல்ல மாட்டேன், நான் அங்கு தண்ணீர்கூடக் »15

## தேசிய கல்வியியற் கல்லூரியில் முதன்முறையாக ஆய்வுமாநாடு

யாழ்ப்பாணம், நவ. 12
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் நாளை செயல்நிலை ஆய்வு தொடர்பான, ஆய்வு மாநாடு பீடாதிபதி கலாநிதி சுப்பிர »15

## சுகாதாரத்துறை பிரச்சினை ஒரு மாதத்துக்குள் தீர்வு

### ஜனாதிபதி உறுதியளிப்பாம்

கொழும்பு, நவ. 12
சுகாதாரத்துறையினர் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு ஒருமாத காலத்துக்குள் அரசாங்கம் தீர்வை வழங்கும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் இடையில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. »15

# இலங்கைக் கிரிக்கெட்; தடைக்கு முழுக்காரணம் கட்டுப்பாட்டுச்சபையே!

## அம்பலமாகியது உள்வீட்டு விவகாரம்;

கொழும்பு, நவ. 12
இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்கவே, ஐ.சி.சி.யால் தடை விதிக்கப்பட்டதாக 'கிரிக் இன்போ' இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது. »15



## கிளிநொச்சியில் நேற்று கொட்டித் தீர்த்தது மழை

கிளிநொச்சி, நவ. 12
கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று மாலை கடும் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்கு உள்ளானது. அத்துடன் தீபாவளிக்கான ஆடைக்கொள்வனவு மற்றும் பொருள்கள் கொள் »15

## எரிபொருள் மீதும் வற்வரி விதிப்பு

கொழும்பு, நவ. 12
வரவு - செலவுத் திட்டத்தில் வற்வரியை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதுடன், பெற்றோல், டீசல் மற்றும் நிலக்கரி மீது வற்வரி விதிக்கவும் »15

# சஞ்சீவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மழைகாலத்தில் தேங்கும் வெள்ளம்

# வீதியில் நெல் விதைத்து விவசாயிகள் போராட்டம்

**யாழ்ப்பாணம், நவ.12**

**காரைநகர் - மானிப்பாய் - யாழ்ப்பாணம் பிரதான வீதியின் மூளாயில் வீதியை இடைமறித்து வீதியில் நெல் விதைத்து நூதனமான முறையில் பிரதேசவாசிகள் கடந்த வியாழக்கிழமை காலை 8 மணியளவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



யாழ்ப்பாணம், மானிப்பாய் - காரைநகர் வீதியின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு பொருளாதார நெருக்கடி காரணமாக அவை இடைநிறுத்தப்பட்டன. ஆனைக்கோட்டை முதல் சுழிபுரம் வழக்கம்பரைவரை வீதி அண்மையில் புனரமைக்கப்பட்டது. வழக்கம்பரை முதல் பொன்னாலை வரையான வீதி புனரமைப்புச் செய்யப்படவில்லை.

பொன்னாலை மற்றும் மூளாயைச் சேர்ந்த விவசாயிகள், சிறுவர்கள், பொதுமக்கள் இணைந்து காரைநகர் - மானிப்பாய் - யாழ்ப்பாணம் பிரதான வீதியில், உழவு இயந்திரம் மற்றும் மாட்டு வண்டிலைக் கொண்டு இடைமறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'ரணில் அரசாங்கமே எங்கள் மீது ஏன் இந்தப் பாரபட்சம்!'? 'வீதி அபிவிருத்தி அதிகாரசபை அதி காரிகளே உங்களுக்கு கண் இல்லையா?', 'வழக்கம்பரை முதல் பொன்னாலைவரை வாழும் மக்கள் மந்தைகளா?' ஆகிய கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வீதியில் குளம்போல வெள்ளம் தேங்கியிருந்த இடத்தில் கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைத்து தேவாரம் பாடி ஏர் உழுவது போல ஆற்றுகை செய்து நெல் மணிகளை வீதியில் விதைத்தனர். தொடர்ச்சியாக உழவு இயந்திரங்களாலும் வீதி உழுவது போல செய்தனர்.

அங்கு கருத்து தெரிவித்த போராட்டக்காரர்கள், உள் வீதிகள் கூடப் புனரமைப்பு செய்யப்பட்டு சீராகக் காணப்படுகிறது. பாடாசலை மாணவர்கள், வயது முதிர்ந்தவர்கள், பெண்கள், சிறுவர்கள், வாகன ஓட்டுநர்கள் எனப் பலரும் இதனால் தமது அன்றாட வாழ்வியலை அச்சத்துக்குள்ளாகக் கடக்கின்றார்கள். விபத்துகளும் பதிவாகியுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபை வெகு விரைவில் புனரமைப்புப் பணிகளை முன்னெடுக்க வேண்டும். இல்லையெனில் நிச்சயமாக இவ்வீதிகளை விவசாய நிலங்களாக மாற்றுவோம் எனத் தெரிவித்தனர்.

போராட்டம் காரணமாக வீதிப் போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் பாதிக்கப்பட்டது. (ஒ-125)

# தமிழர் வாழ்வில் புதிய ஒளி வரட்டும்

முன்னாள் எம்.பி. சரவணபவன் வாழ்த்து



யாழ்ப்பாணம், நவ. 12

ஒருபோதும் சோர்ந்து விடாது, அடுத்த கட்டத்தை எப்படியாவது வெற்றி கொள்ளவேண்டும் என்கின்ற ஓர்மத்துடன் நகரும் எங்கள் வாழ்க்கைக்கு இந்தத் தீபாவளி புதிய ஒளியைத் தரட்டும் - இவ்வாறு தனது தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈ.சரவணபவன்.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:-

தற்போதைய பொருளாதார நெருக்கடிகளும் அதனால் எழுந்துள்ள சவால்களுக்கும் மத்தியில்தான் நாம் ஒவ்வொருவரும் இந்தத் தீபாவளி பண்டிகையைக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம். எமது பண்டிகைகள், கலாசாரங்கள் கொண்டாட்டங்களை நாம் எவ்வளவு நெருக்கடிகளை எதிர்கொண்டாலும் அதனைக் கொண்டாடத்தவறுவதில்லை.

எம்மவர்களின் மனவுறுதிக்கும் முன்னேற்றத்துக்கும் இது தக்கசான்று. எமது சமூகத்தை கருவறுப்பதற்காக எம்மைச் சூழ்ந்து நிற்கும் காரிருளான உயிர்கொல்லிப் போதைப்பொருள் என்ற அரக்கனை நாம் அழித் தொழிக்கவேண்டும். சமூக கூட்டுப் பொறுப்பை ஒவ்வொருவரும் ஏற்று அதனைச் செய்வோம். அந்தக் காரிருளை அகற்றி ஒளியைக் கொடுப்போம் - என்றுள்ளது.

# அல்வாய் மூதாட்டி கொலை சந்தேகநபர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ.12

அல்வாய் கிழக்கில் மூதாட்டி கழுத்து நெரித்து கொலை செய்த சந்தேகநபர்கள் மூவரையும் நாளை திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை பதில் நீதிவான் ஏ.எச். அலெக்ஸ்ராஜா நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

பழனிப்பிள்ளை தில்லைராணி (வயது- 89) என்ற மூதாட்டி கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி வீட்டில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

உடற்கூற்று மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பப்பட்ட நிலையில் கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டதாக அறிக்கை கிடைத்ததைத் தொடர்ந்து கடந்த வியாழக்கிழமை அந்த வீட்டில் இருந்த கணவன் மனைவி மற்றும் வீட்டு பணிப்பெண் ஆகியோர் நெல்லியடிப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றத்தில் சந்தேகநபர்கள் முற்படுத்தப்பட்டபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (ஒ-100)

# தீபாவளிநாள் விசேடபூசை

யாழ்., நவ. 12

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலயம் மற்றும் கண்ணகியம்மன் ஆலயத்தில் தீபாவளி திருநாள் விசேட பூசை வழிபாடு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணியளவில் இடம் பெறவுள்ளது. (ச)


1ஆம் வருட நினைவஞ்சலி



தாயின் மடியில் 04 . 10 . 1944

இறைவன் அடியில் 24 . 10 . 2022

அமரர் சரவணமுத்து கந்தசாமி

ஆண்டு ஒன்று நகர்ந்தாலும்
நம்மைவிட்டு அகலாது உங்கள் நினைவுகள்
உங்கள் நினைவுகள் வருகையில்
நிலைகுலைந்து போகின்றோம் தந்தையே!
உங்களை நினைக்காத நொடிகளில்லை
அன்பினால் பண்பினால் நட்பினால்
ஆளுமையால் விருந்தோம்பலால் கொடையால்
எங்கள் அனைவரது உள்ளங்களிலும்
குடியிருக்கும் எங்கள் தந்தையை
நாம் என்றென்றும் நினைத்திருப்போம்.

தந்தையின் ஆத்மா இறைபதமடைய பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விடத்தற்பளை, மிருசுவில்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


# தீபாவளியில் குருதித்தானம்



யாழ்ப்பாணம், நவ. 12

கோப்பாய் வடக்கு சிறுவர் மகிழ்வகத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணிவரை இடம்பெறவுள்ளது. அமரர்.அன்புராசனின் நினைவாக அவரது நண்பர்களின் ஏற்பாட்டில் இந்தக் குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதில் குருதிக்கொடையாளர்கள் [illegible] பங்கேற்று குருதிக்கொடையளிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் அரசியல் பாதுகாப்பை ஒழிக்கவே தேர்தல்முறை மாற்றம்

## ஒருபோதும் அனுமதியோம் என வினோ எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, நவ. 12**

**தமிழ் மக்களின் அரசியல் இருப்பை - பாதுகாப்பை சிதைக்கும் வகையில் மேற்கொள்ளப்படும் தேர்தல் முறைமையை மாற்றும் முயற்சிக்கு சிறுபான்மைக் கட்சிகள் ஒருபோதும் ஆதரவு வழங்காது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்த சட்ட வரைவு விவாதத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதுள்ள விகிதாசார தேர்தல் முறையை மாற்றுவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்துள்ளார்.

இது சிறுபான்மையின மக்களுக்கு அரசியல் ரீதியிலான பாதுகாப்பை இல்லாதொழிக்கும் செயற்பாடே. உள்ளூராட்சிசபையாகவோ, மாகாண சபையாகவோ, நாடாளுமன்றமாகவோ இருக்கலாம். அதற்கு சிறுபான்மையின மக்களின் பிரதிநிதித்துவம் அவசியம். தொகுதிவாரியாகவோ அல்லது தொகுதி, விகிதாசாரம் கலந்த கலப்பு தேர்தல் முறையாகவோ இருந்தால் எல்லை மீள் நிர்ணயம் அவசியம். எல்லை நிர்ணயம்செய்யும்போது எமது மக்கள் நிச்சயம் பாதிக்கப்படுவார்கள். அரசியல் தலைமைத்துவம், அரசியல் பாதுகாப்பு இல்லாமற்போகும்.

சிறுபான்மையின மக்களின் பிரதிநிதியாக நாடாளுமன்றம் வருவதற்கு முட்டுகட்டைபோடும் வகையிலேயே மீண்டும் தொகுதிமுறை பற்றிப் பேசப்படுகின்றது.

ஆகவே சிறுபான்மையின மக்களின் அரசியல் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்கும் வகையிலான கலப்பு தேர்தல் முறைக்கோ அல்லது தனியான தொகுதிவாரி முறைக்கோ சிறுபான்மைக் கட்சிகள் ஒருபோதும் ஆதரவு வழங்காது - என்றார். (ச-44)



# வடக்கின் அபிவிருத்தி முன்னேற்ற மீளாய்வு

வடக்கு மாகாணஅபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான விசேட முன்னேற்ற மீளாய்வுக் கலந்துரையாடல் இராஜாங்க அமைச்சர் ஜெகத் புஷ்பகுமார தலைமையில் கடந்த வியாழக்கிழமை யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் வடக்கு மாகாணஅபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான முன்னேற்ற மீளாய்வு, மாவட்டப் பிரதேச செயற்பாடுகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள், அதற்கான தீர்வுகள் என்பன தொடர்பாக ஆராயப்பட்டன.

நிகழ்வில் அமைச்சின் மேலதிக செயலாளர்கள் எஸ்.எம்.பியதிஸ்ஸ, ஜே .எஸ்.பிரசாத் பியசேன, பணிப்பாளர் நாயகம் கே.ஏ.எஸ். ஹேமகாந்தி மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டப் பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-66)

# கூலர் - சொகுசு பஸ் நேருக்கு நேர் விபத்து

யாழ்ப்பாணம், நவ.12

தென்மராட்சி, கொடிகாமம் பிரதான வீதியில் பயணித்த மீன் ஏற்றும் கூலர் வாகனமும் பயணிகள் சொகுசு பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் கூலர் வாகன சாரதி படுகாயமடைந்துள்ளார்.

ஏ-9 வீதி கொடிகாமம், கட்டைப்பறிச்சான் பிள்ளையார் கோவில் சந்தியில் இந்த விபத்து நேற்று சனிக்கிழமை அதிகாலை 5.50 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த மீன் ஏற்றும் கூலர் வாகனமும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த தனியார் சொகுசு பஸ்ஸும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தில் மீன் ஏற்றும் கூலர் வாகனச் சாரதி படுகாயம் அடைந்த நிலையில் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பயணிகள் சொகுசு பஸ்ஸில் பயணித்த பயணிகள் சிலருக்கு சிறுசிறு கீறல் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

விபத்து தொடர்பில் கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-100)



## வாகன இறக்குமதி; விரைவில் தீர்மானம்

ஜனாதிபதி செயலகத்தால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளைப் பெற்றுக்கொண்ட பின்னர் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். நாட்டின் வாகன சந்தையைப் பாதிக்கும் என்பதால், வாகன இறக்குமதியை அனுமதிப்பதற்கான திகதியை அறிவிக்க முடியாது என்று கூறினார். (எ-இ)

# 5 மதுபான நிறுவனங்கள் ரூ. 672 கோடி வரிமோசடி

## நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, நவ.12

ஐந்து மதுபான நிறுவனங்கள் 672 கோடி ரூபாவுக்கும் அதிகமான வரித்தொகையை செலுத்தாதுள்ளது. வரி செலுத்த தாமதமாகும் ஒவ்வொரு மாதத்துக்கு 3 சதவீத வரி மேலதிகமாக விதிக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றில் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வரி செலுத்தாமைக்காக அந்த நிறுவனங்கள் மூடப்படுமானால் அரசுக்கு செலுத்தவேண்டிய வரித்தொகையை வசூலிக்க முடியாது. அந்த நிறுவனங்களுக்கு எதிர்வரும் டிசெம்பர் 29ஆம் திகதிவரை வரியை செலுத்துவதற்குச் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன்பின்னர் அனுமதிப்பத்திர காலம் நீடிக்கப்படமாட்டாது - என்றார். (ச-இ)

# அங்கவீனர் உரிமைகளுக்கு அடுத்தாண்டில் புதிய சட்டம்

## சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, நவ.12

அங்கவீனர்களையும் சமூகப்படுத்தி அவர்களுக்கான வலுவூட்டல் செயல்முறைகளை நடைமுறைப்படுத்தவும் அவர்களிடையே மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய புதிய வரைவு கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது - இவ்வாறு ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அங்கவீனர்கள் தொடர்ந்தும் தங்கிவாழ்வோர் என்ற மனநிலையில் இருக்கவேண்டிய சமூகமில்லை என்பதே அரசின் கொள்கை. அவர்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகக் கருதக்கூடாது. சுமார் 16 இலட்சம் அங்கவீனர்கள் இதுவரை முறையாக சமூக மயப்படுத்தப்படவில்லை. ஜனாதிபதியின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனையின் பேரில் அவர்களுக்கான வேலைத்திட்டத்தை எதிர்வரும் வருடத்தில் நடைமுறைப்படுத்தவுள்ளோம்.

எம்மைப்போன்று அவர்களுக்கும் அதே உரிமைகள், தொழில்வாய்ப்பு வசதிகள் வழங்கப்படவேண்டும்.

அதற்கமைய அங்கவீனர்கள் தொடர்பான சட்டத்தை திருத்தி புதிய சட்டமொன்றைக் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலுவூட்டல் செயல்முறையுடன் அவர்களுக்கான ஓய்வூதிய முறை கட்டாயமாக்கப்படவேண்டும் என்று உத்தேச வரவு - செலவுத் திட்டத்துக்கான முன்மொழிவில் நாம் கூறியுள்ளோம்.

மேலும் மாற்றுத்திறனாளிகள் தொடர்பான பாடநெறிய பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் உள்வாங்கவும் திட்டமிட்டுள்ளோம். அதனூடாக அவர்களுக்கான தொழில்நுட்பத் திறனுடன் கூடிய உபகரணங்களைத் தயாரித்தல் உட்பட அவர்களுக்கான ஏனைய வசதிகளை ஏற்படுத்தவும் எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ச-44)

# ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையருக்குப் பதவி!

கொழும்பு, நவ.12

ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் பாதுகாப்பு உதவி உயர்ஸ்தானிகராக இலங்கைப் பெண்ணொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த ருவேந்திரினி மெனிக்திவெல என்பவரே அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர் அகதிகள் சார்ந்த பணிகளில் பல தசாப்தகால தொழில்முறை அனுபவத்தைக் கொண்டவர் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் வாழ்த்துக்கள்

# சசிகா லேணர்ஸ்

# THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

தவணை முறைக்கட்டணம் மற்றும் விரைவாக சாரதி அனுமதி பத்திரத்தை பெற்றுக்கொள்ளலாம்

Reg.No: DS882

உரிமையாளரின் தொடர்புக்கு: 0777 226 247 / 077 614 0361

email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com



**தலைமைக் காரியாலயம்**

இல. 57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்

021 221 7678

077 949 5706 / 077 320 8883

**யாழ் மத்தி (Town)**
T.P: 021 222 8004
077 998 6247
074 254 2264

**கச்சேரி நல்லூர் வீதி (யாழ்ப்பாணம்)**
T.P: 021 221 7578
077 434 3149
077 990 5414

**நெல்லியடி**
T.P: 021 226 0999
077 261 2446

**மல்லாகம்**
T.P: 021 224 3393
077 343 6622

**புன்னாலைக்கட்டுவன்**
T.P: 021 224 5001
076 384 0684

**பண்டத்தரிப்பு**
T.P: 021 225 2333
077 434 3798

**வேலணை**
T.P: 021 221 5472
077 368 9319







இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

HAPPY Deepavali

FROM

JITF 2024

14TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

19, 20, 21 - JANUARY ஜனவரி

MUTTRAWELI GROUND (NEXT TO JAFFNA FORT)

10.00 AM - 8.00 PM

PLATINUM SPONSOR DIMO THE PERFECT PARTNER

ORGANIZED BY LECS LANKA EXHIBITION

GOLD SPONSORS NIPPON CEMENT

IN ASSOCIATION WITH

Imalka: +94 77 1093792 | imalka@saexhibitions.com www.jitf.lk jitf.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பசுமை இயக்கத்தால் கறுவா மரக்கன்றுகள்

யாழ்ப்பாணம், நவ. 12

வடமாகாண மரநடுகை மாதத்தை முன்னிட்டு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தால் மாணவர்களுக்கு இலவசமாக கறுவா மரக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

முதற்கட்டமாக பலாலி வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் மாணவர்களுக்கு கடந்த வியாழக்கிழமை கறுவா மரக்கன்றுகள் கையளிக்கப்பட்டன.

பாடசாலை அதிபர் ச. விஜயகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பங்கேற்று மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.

பெருமளவு அந்நியச் செலவாணியை ஈட்டித்தரும் வர்த்தகப் பயிராக விளங்கும் கறுவாச் செய்கை அண்மைக்காலமாக வடக்கிலும் முக்கியத்துவம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-27)

## தாமரைக் கோபுரத்தில் சாகச விளையாட்டுகள்

கொழும்பு, நவ.12

தெற்காசியாவிலேயே மிக உயரமான கோபுரங்களில் ஒன்றாக விளங்கும் கொழும்பு தாமரைக் கோபுரத்தில் சாகச விளையாட்டுகளை விரைவில் அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தாமரைக் கோபுர நிர்வாகம் தெரிவித்துள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இந்த வளாகம் பொது மக்களுக்காகத் திறக்கப்பட்டது. தற்போதுவரை 1.3 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இதனை பார்வையிட்டுள்ளனர்.

இந்த வருடம் இறுதியில் 'ஸ்கைவாக்' அனுபவம் மற்றும் உணவகங்கள் திறக்கப்படும். டிஜிற்றல் கலை அருங்காட்சியகம் எதிர்வரும் ஜனவரி மாதம் திறக்கப்படும்.

அதேவேளை தாமரைக் கோபுரத்தில் கயிறு ஏறும் சாகச விளையாட்டுக்களையும் விரைவில் அறிமுகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது என்று தாமரைக் கோபுரத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பணிப்பாளருமான மேஜர் ஜெனரல் எஸ்.ஏ.பி.பி. சமரசிங்க தெரிவித்தார். (ச-இ)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகள் பஸ்களில் இனி பாதுகாப்பு கமரா கட்டாயம்

**கொழும்பு, நவ.12**
**பயணிகள் பஸ்களில் பாதுகாப்புக் கண்காணிப்புக் கமராக்களைப் பொருத்துவதைக் கட்டாயமாக்குவதற்கு நாடாளுமன்றக் குழு தீர்மானித்துள்ளது.**

அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடிய எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழுவே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

பயணிகள் பஸ்களுக்கான வீதி அனுமதிப்பத்திரம் வழங்கும்போது ஜி.பி.எஸ். தொழில்நுட்பத்தைக் கட்டாயமாக்கவேண்டும் என்றும் எரிசக்தி மற்றும் போக்குவரத்துத் துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாலக பண்டார கொட்டேகொட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். பயணிகள் பஸ்களில் பாதுகாப்புக் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த வேண்டும் என்றும், பஸ்களில் கமராக்களைப் பொருத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கூட்டத்தில் கலந்துகொண்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு குழுவின் தலைவர் உத்தரவிட்டார்.

தற்போது நாட்டிலுள்ள பெரும்பாலான அதிவேக நெடுஞ்சாலைகள் நட்டத்தில் இயங்குவதாகவும், இலாபம் ஈட்டும் அதிவேக நெடுஞ்சாலைகளின் இலாபத்தில் தான் நட்டத்தில் இயங்கும் அதிவேக நெடுஞ்சாலைகள் பராமரிக்கப்படுகின்றன என்றும் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அனைத்து அதிவேக வீதிகளிலும் கியூ.ஆர். குறியீட்டைப் பயன்படுத்திக் கட்டங்களை அறவிடுவதற்கான நடைமுறைகளை ஆரம்பிக்குமாறும் இதன்போது குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். (எ-இ)

## அரசியல் தீர்வுக்கு அவுஸ்திரேலியாவை மத்தியஸ்தத்துக்கு அழைக்கும் சாணக்கியன்

கொழும்பு, நவ.12
அவுஸ்திரேலியா இலங்கை அரசியல் தீர்வு விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் என்று அவுஸ்திரேலிய தூதுவரிடம் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கத்துக்கும் அவுஸ்திரேலியத் தூதுவர் போல் ஸ்டீபன் ஸ்ீக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த புதன்கிழமை இடம்பெற்றிருந்தது.

சந்திப்பின் போது இலங்கையின் சமகால அரசியல் தொடர்பாகவும் குறிப்பாக மயிலத்தமடு - மாதவனை பகுதிகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான முழு விவரங்களை அறியும் முகமாகவும் அதற்கான தீர்வுகளை பற்றியதாக இருந்தது.

அவுஸ்திரேலியாவும் எமது நாட்டைப்போல் அரசமைப்பை கொண்ட நாடாகும். மாநிலங்கள் போல் இங்கு மாகாணங்கள் காணப்படுகின்றன. அங்கு மற்றைய நாடுகளைப் போல் அல்லாது இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர்ந்த சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் எனப் பலர் வாழ்ந்து வருகின்றார்கள். அந்த அடிப்படையில் இலங்கை அரசாங்கம் அவுஸ்திரேலியாவை நடுநிலைமை வகிக்கும் நாடு என்ற வகையில் ஏற்றுக்கொள்ளும் என்ற ரீதியில் அவுஸ்திரேலிய அரசானது எமக்கான அரசியல் தீர்வு விடயத்தில் மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்தியிருந்தார். (ஓ-213)

## பழங்களை பழுக்கவைக்க இரசாயனங்கள் தெளிப்பு

### பூநகரி வியாபாரிகளுக்கு கடும் எச்சரிக்கை

கிளிநொச்சி, நவ. 12
பூநகரி சந்தையில் பழங்களை பழுக்க வைப்பதற்கு இரசாயனங்களைப் பயன்படுத்தியமை கண்டறியப்பட்ட நிலையில் வியாபாரிகளுக்கு சுகாதாரப் பரிசோதகர்களால் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பூநகரிப் பகுதியிலுள்ள பலசரக்கு வர்த்தக நிலையங்கள் மற்றும் பழவிற்பனை நிலையங்கள் சுகாதாரப் பரிசோதகர்களால் சோதனைக்குட்படுத்தப்பட்டன.

இதன்போது பலசரக்குக் கடைகளில் மாசடையும் வகையில் களஞ்சியப்படுத்தப்பட்ட பொருள்கள் மீட்கப்பட்டு அழிக்கப்பட்டன.

பழவிற்பனை நிலைய சோதனையில் பழங்களைப் பழுக்கவைக்கப்பயன்படுத்தப்படும் இரசாயன தெளிகருவிகள் மீட்கப்பட்டன.

அதையடுத்து பழவியாபாரிகளுக்கு கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டதுடன் பழங்களைப் பாதுகாப்பாக பழுக்கவைக்கும் முறைகள் குறித்தும் சுகாதாரப் பரிசோதகர்கள் விளக்கமளித்தனர். (ச-9)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மனதில் அதிகப்படியான உற்சாகம் பெருக்கெடுக்கும். குடும்பத்தினரின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**இடபம்:** மனதில் அவ்வப்போது குழப்பங்கள் தோன்றி மறையும். குடும்பத்தினரின் உடல்நலனில் கவனம் தேவை. தொடங்கும் காரியம் இழுபறியானாலும் அனுகூலமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு மரியாதை கிடைக்கும். மகிழ்ச்சியான செய்தி கிடைக்க வாய்ப்புள்ளது. தொல்லைகள் குறையும். இலாபமும் அதிகரிக்கும்.

**கடகம்:** குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் அவ்வப்போது தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பொறுமை அவசியம். செலவுகள் ஏற்படலாம்.

**சிம்மம்:** நாள் முழுவதும் உற்சாகமாக இருப்பீர்கள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கன்னி:** அவசரத் தேவைகளுக்காகப் பணம் வந்த வண்ணம் இருக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். கடன் வாங்காமல் சமாளித்துவிடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** தொடங்கும் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகளில் அவசரம் வேண்டாம். பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறும்.

**விருச்சிகம் :** எதிர்பார்த்த காரியம் இழுபறியானாலும் சாதகமாக முடிந்து விடும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**தனுசு:** குடும்பத்தில் தேவையற்ற சலசலப்பு ஏற்பட்டாலும், பாதிப்பு இல்லாதபடிக்கு சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடும் போது கூடுதல் கவனம் தேவை. உறவுகளால் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். சகோதரர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தொடங்குவது நல்லது. எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். நண்பர்கள் வகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு.

**மீனம்:** செயல்கள் அனைத்தும் அனுகூலமாக முடியும். துணிச்சலுடன் முடிவெடுக்கும் திறன் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

# தொழில்முயற்சிகள் செய்ய அரச காணி வழங்குங்கள்!

### குச்சவெளியில் கவனவீர்ப்பு

திருகோணமலை, நவ.12
சிறுதோட்டப் பயிர்ச்செய்கை, கால்நடை மற்றும் கோழிவளர்ப்பு உள்ளிட்ட தொழில் முயற்சிகளில் ஈடுபட அரச காணிகள் வழங்குமாறு கோரி திருகோணமலை பெரியகுளம் கிராம மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திறந்தவெளியில் சிறுகூடாரமொன்றை அமைத்து கடந்த வியாழக்கிழமை முதல் இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கையில்;

அரச காணியொன்றை வழங்குமாறு விண்ணப்பித்து நீண்டகாலமாக நாம் காத்திருக்கிறோம். இது வரை எமக்கு காணித்துண்டு வழங்கப்படவில்லை.

ஒரு இலட்சம் காணித்துண்டுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் தொழில் முயற்சிக்காக 160 காணித் துண்டுகள் கடந்த 2021 ஆம் ஆண்டு வழங்கப்பட்டபோதும் அவற்றில் 15 க்கும் குறைவான காணிகள் மாத்திரமே தொழில் முயற்சிக்காகப் பயன்படுத்தப் படுகிறது.

ஏனைய காணித்துண்டுகள் எந்தவித பராமரிப்புமின்றி காணப்படுகின்றன.



அவற்றை சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு வருகின்ற அரச காணி இல்லாதோருக்கு பகிர்ந்தளிப்பதன் மூலம் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்ய முடியும். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எமக்கு காணியைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# கிரிக்கெட்டுக்கும் அப்பால்!

இலங்கைக் கிரிக்கெட்சபைக்குள் இருக்கும் அதீத மான அரசியல் தலையீடுகள் காரணமாக, அந்தச் சபையின் உறுப்புரிமையைத் தற்காலிகமாக நீக்கி, அதன் கிரிக்கெட் நடவடிக்கைகளுக்குத் தடைவிதித்தி ருக்கின்றது சர்வதேச கிரிக்கெட்சபை. இந்தத் தடை காரணமாக, இலங்கை கிரிக்கெட் அணி உலகளவில் எந்தவொரு தொடரிலும் பங்கேற்க முடியாது. அத்து டன், இலங்கைக்குள் சர்வதேச கிரிக்கெட் தொடர்களை நடத்துவதும், சர்வதேச கிரிக்கெட்சபையின் ஆதரவுடன் இதர தொடர்களை நடத்துவதற்கும் இந்தத் தடை முட் டுக்கட்டை போட்டிருக்கின்றது. ஆனால், சர்வதேச கிரிக்கெட் சபையின் இந்தத் தடையால் ஏற்படப்போ கும் தாக்கங்கள் மற்றும் பின்னடைவுகள் கிரிக்கெட்டுக்கு மட்டுமானவையாக இருக்காது. இது பல்வேறுபட்ட விடயங்களில் பல்வேறு துறைகளில் கனதியான தாக் கத்தை இலங்கைக்குள் செலுத்தவே செய்யும்.

1996ஆம் ஆண்டு இலங்கை கிரிக்கெட் அணி உலகக்கிண்ணத்தைக் கைப்பற்றியதன் பின்னர், வெளி யுலகில் இலங்கை என்ற ஒரு தீவுநாடு தொடர்பில் பெரிதும் விவாதிக்கப்பட்டது. ஒரு கவர்ச்சிப் புள்ளியாக இலங்கை மாறியது. இதையடுத்து ஏகப்பட்ட சுற்றுலா வி கள் இலங்கைக்குள் படையெடுத்தனர். அவர்களால் மில்லியன் டொலரில் வருடாவருடம் வருவாய் ஈட்டி யது இலங்கை. இப்போது இலங்கை கிரிக்கெட்சபைக்கு விழுந்துள்ள இந்தத் தடை, இலங்கையின் அந்நிய செலாவணியில் வருவாயில் பெரும் செல்வாக்கைச் செலுத்தும், சுற்றுலாவிகள் இலங்கைக்குள் வருவதற்குச் சிந்திக்கத் தலைப்படுவார்கள், பின்னடிப்பார்கள். இத னால், சுற்றுலாவிகளால் நாட்டுக்குக் கிடைக்கவேண்டிய டொலர் கிடைக்காமற்போகும். இதன் விளைவாக, 'சர்வதேசப் பொருளாதாரச் சுழற்சி' இல்லாமல் இலங்கை திண்டாடும். ஆதலால், தடையால் ஏற்பட் டுள்ள பின்னடைவு இலங்கை கிரிக்கெட்டுக்கு மட்டு மானதல்ல, இலங்கை நாட்டுக்கும்தான்.

இதேவேளை – இந்த விவகாரத்தில் மறுபக்க மொன்றும் உள்ளது. எந்தவொரு கிரிக்கெட்சபைக்குள் அரசியல் தலையீடு திணிக்கப்படுகின்றதோ அந்தக் கிரிக்கெட்சபை மீது சர்வதேச கிரிக்கெட்சபை கடும் நிலைப்பாடுகளை எடுக்கும். ஆனால், இங்கே முறைப் பாடு வழங்கும் பிரிவு தொடர்பான சிந்தனை சர்வதேச கிரிக்கெட்சபையில் இருந்ததில்லை. இப்போது இலங்கை விடயத்திலும் அதுவேதான் நடைபெற்றிருக் கின்றது.

எந்தக் கிரிக்கெட்சபைக்குள் ஊழல் மிகுந்துவிட்டது என்றும், அது முற்றாக விரட்டப்பட வேண்டும் என்றும் இலங்கை நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டபோத அந்தத் தரப்பு (இப்போதைய கிரிக்கெட் சபை) வழங்கிய முறைப்பாடுகளின் அடிப்படை யிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் நாட்டில் நாடாளுமன்றத்தால் வாக்கெடுப்பின்றி ஏகம னதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் என்ற குறைந்த பட்ச சிந்தனைகூட இல்லாமல், கிரிக்கெட்சபை சொல் லிவிட்டதே என்ற ஒற்றைக் காரணத்துக்காக 'கோயில் மாடு' போல் தலையாட்டித் தடைசெய்திருக்கின்றது ஐ.சி.சி. மறுபக்க விசாரணை – கருத்துக்கேட்பு – அறவே இடம்பெறவில்லை. ஆக, ஐ.சி.சி.யின் கொள் கையில் உள்ள மலினப்பாட்டையும்தான் இந்தத் தடை கட்டியம் செய்கின்றது.

இலங்கையில் இப்போதுள்ள கிரிக்கெட்சபையினர் ஊழல் பேர்வழிகள். அது உள்ளங்கை நெல்லிக்கனி. இவ்வாறிருக்கையில், அந்தத் தரப்பு முறையிட்டது என்பதற்காக ஒரு நாட்டின் கிரிக்கெட்டை, ஒரு தேசத்து மக்களின் உணர்வுகளை தடைசெய்வது என்பது எவ் வாறு தகும்? எந்தக் கிரிக்கெட்சபைக்குள்தான் அரசியல் தலையீடு இல்லை? இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட் டுச்சபை, பாகிஸ்தான் கிரிக்கெட்சபை, பங்களாதேஷ் கிரிக்கெட்சபை, தென்னாபிரிக்க கிரிக்கெட்சபை இவற் றுக்குள் இல்லாத அரசியலா? தலையீடா?

## வடமாகாண மரநடுகை மாதம்

நவம்பர் 2023



"பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதைவிட அது பச்சயைாக இருப்பதே அதி உன்னதமானது." -மார்ட்டீன் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)




# தேராவில் துயிலுமில்லத்தை விடுவிக்கக்கோரி போராட்டம்



முல்லைத்தீவு, நவ.12

**புதுக்குடியிருப்பு, தேராவில் மாவீரர் துயிலுமில்ல காணியை விடுவிக்க கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை மக்கள் நேற்று முன்னெடுத்தனர்.**

போர் முடிவுக்கு வந்து 14 வருடம் கடந்த நிலையிலும் மாவீரர் துயிலுமில்லத்துக்குரிய காணி இராணுவத்தினரால் விடுவிக்கப்படவில்லை. மாவீரர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்லறைகளில் அஞ்சலி செலுத்த வேண்டும், மாவீரர் நினைவேந்தல்களை நடத்தவேண்டும். இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள இந்தக் காணி விடுவிக்கப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர்.

'கல்லறைகளை வழிபட வழிவிடு', 'கல்லறைகள் மேலிருந்து இராணுவமே வெளியேறு', 'மிதிக்காதே மிதிக்காதே... புனிதர்களை மிதிக்காதே', 'அழவிடு அழவிடு... அம்மாக்களை அழவிடு', 'விளக்கேற்றுவோம் விளக்கேற்றுவோம்... பிள்ளைகளுக்கு விளக்கேற்றுவோம்', 'கல்லறைகளை அழிப்பதும் புத்தனின் போதனையா' என்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் வேழமாலிகிதன், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-இ)

# போலி ஆவணம் தயாரித்து 136 மில்லியன் ரூபா மோசடி

கொழும்பு, நவ.12

காணி ஒன்றுக்குப் போலி பத்திரம் தயாரித்து 136 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்த நபரைக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் நிதி மற்றும் வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டா வீதியில் அமைந்துள்ள 87.5 பேர்ச்சஸ் காணிக்காக போலிப் பத்திரம் தயாரித்து விற்பனை செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் இராஜகிரிய பிரதேசத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் இராஜகிரிய பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் அளுத்கடை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

**நாளை**

**13.11.2023**
திங்கட்கிழமை
ஐப்பசி 27

சுபநேரம் : 12.07 - 01.37
ராகுகாலம் : 07.37 - 09.07

கேதாரகௌரி விரதம் முடிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களாதேஷின் போராட்டத்தால்

# சம்பியன்ஸ் கிண்ணத்திலிருந்து வெளியேற்றப்பட்டது இலங்கை!

## நேற்று ஆஸிக்கு வெற்றி




**உலகக்கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற அவுஸ்திரேலியாவுடனான ஆட்டத்தில் தோல்வியடைந்தது பங்களாதேஷ் அணி.**

எனினும் பங்களாதேஷ் அணி தன்னுடைய அபாரமான போராட்டத்தால் சராசரியைத் தக்கவைத்து புள்ளிப்பட்டியலில் எட்டாம் இடத்தைப் பிடித்தது. இதையடுத்து புள்ளிப்பட்டியலில் ஒன்பதாம் இடத்துக்குப் பின்தள்ளப்பட்ட இலங்கை அணி சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்குத் தகுதிபெறும் வாய்ப்பை இழந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, சம்பியன்ஸ் கிண்ணத் தொடரைக் கருத்திற்கொண்டு ஓட்டக்குவிப்பை திட்டமிட்டு அரங்கேற்றியது. ரன்சிட் ஹசன், லித்தன் டாஸ் இருவரும் 36 ஓட்டங்களைப் பெற்றனர். அபாரம் என்று சொல்லாவிட்டாலும் நம்பிக்கை வழங்கக்கூடிய ஆரம்பமாக இது அமைந்தது. இதன்பின்னர் களமிறங்கிய சான்ரோ மற்றும் ரௌஹிட் இருவரும் பங்களாதேஷைப் பலப்படுத்தினார்கள். சான்ரோ 45 ஓட்டங்களுடன் ரண்அவுட் செய்யப்பட்டாலும், ரௌகிட் அபாரமாக ஆடி 74 ஓட்டங்களைப் பெற்றார். மகமதுல்லா, ரஹிம், மிராஸ் மூவரும் அதிரடியாக விளையாடி முறையே 32, 21, 29 ஓட்டங்களைப் பெற்றனர். இதையடுத்து 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்களை இழந்து 306 ஓட்டங்களைப் பெற்றது பங்களாதேஷ். பந்துவீச்சில் அப்பொட், ஷாம்பா இருவரும் தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குக் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி வெறும் 12 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது ஆரம்ப வீரர் ஹெட்டை இழந்தது. அதன்பின்னர் இணைப்பாட்டம் அமைத்த வோர்ணர், மிச்செல் மார்ஷ் இருவரும் இணைப்பாட்டமாக 100 ஓட்டங்களைக் கடந்து பயணித்தனர். வோர்ணர் 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் சதம் கடந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார் மிச்செல் மார்ஷ். சிமித்தும் நின்று பிடிக்க பிறிதொரு விக்கெட்டை இழக்காமல் வெற்றிபெற்றது அவுஸ்திரேலியா.

மிச்செல் மார்ஷ் 177 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். (ம)

---

## உதயனின் பரிசுக்குவியல்

**தினம் ஒரு பரிசு 39**

**இந்தியா - நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான இன்றைய (12.11.2023) ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி எது?**

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

**மெகா பரிசு**

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரை வெல்லும் அணி எது?**

விடை : ........................................

**2023 உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் தொடர் ஆட்டநாயகன் யார்?**

விடை : ........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................
தே.அ.இல : ........................................
தொ.இலக்கம் : ........................................

- உலகக் கிண்ண கிரிக்கெட் கொண்டாட்டத்தின் பரிசுக் கூப்பன்கள் யாவும் உதயனில் பிரசுரமாகும். இந்தக் கூப்பன்களை நீலம் அல்லது சிவப்பு நிற பேனாவால் மாத்திரம் நிரப்பி அனுப்ப வேண்டும்.
- வெட்டி எழுதப்பட்ட, அழித்து எழுதப்பட்ட, பிரதியெடுக்கப்பட்ட தாளில் எழுதப்பட்ட எந்தவொரு கூப்பனும் நிராகரிக்கப்படும்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்ப முடியும்.
- தினம் ஒரு பரிசுக்குரிய (தினம் ஒரு கேள்வி) கூப்பன்கள் அன்றைய தினம் பி.ப. 4 மணிக்கு முன்னதாக அனுப்பப்படவேண்டும்.
- மெகா பரிசுக்குரிய கூப்பன் 17.11.2023 அன்று பி.ப. 4 மணிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.
- கூப்பன்கள் யாவும் **0767374444** என்ற வட்ஸப் இலக்கத்துக்கு தனித்தனியாக ( தினம் ஒரு பரிசு, மெகா பரிசு) அனுப்பிவைக்கப்படவேண்டும்.
- தேசிய அடையாள அட்டை இல்லாத சிறுவர்கள் தமது பெற்றோரின் அல்லது பாதுகாவலரின் தேசிய அடையாள அட்டை இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்ப முடியும்.
- வெற்றியாளர்களின் விவரங்கள் உலகக்கிண்ண தொடர் முடிவடைந்த பின்னர் உதயனில் வெளியிடப்படும்.

### இன்றைய ஆட்டம்

**இந்தியா** vs **நெதர்லாந்து**

இடம் : பெங்களூர்
நேரம்: பி.ப. 2.00

# பாகிஸ்தான் தோல்வி

இங்கிலாந்து அணியுடனான ஆட்டத்தில் 93 ஓட்டங்களால் பாகிஸ்தான் அணி தோல்வியைச் சந்தித்தது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடி 50 பந்துப் பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 337 ஓட்டங்களைக் குவித்தது. ஸ்ரோக்ஸ் 84 ஓட்டங்களைக் குவித்தார். ஹரிஸ் ரவூப் 3 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலளித்து ஆடிய பாகிஸ்தான் அணி 43.3 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 244 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. அஹா சல்மான் 51 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார். டேவிட் வில்லி 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

உலகக் கிண்ணத் தொடரிலிருந்து இரு அணிகளும் வெளியேறினாலும், 2025ஆம் ஆண்டு சம்பியன்ஷிப்புக்குத் தகுதி பெற்றுள்ளன. (ஒ-5)



## தினம் ஒரு பரிசு நாள் 37 இன் வெற்றியாளர்கள்

| | | | |
|---|---|---|---|
| கே.சஷ்விகன் | - கொடிகாமம் | ற.திஷாரன் | - ஆசிகுளம் |
| சி.ஜெயராணி | - மண்பிட்டி | நி.றொசாந்தினி | - வைரப்புளியங்குளம் |
| பொ.கஜேந்திரா | - யாழ்ப்பாணம் | அ.டில்ருக்சன் | - வற்றாப்பளை |
| சு.அரவிந்தக்ஷன் | - உடுவில் | ஏ.அரவிந்தன் | - பேசாலை |
| மா.ஜனோசன் | - வண்ணார்பண்ணை | ஜே.விபூஷன் | - இருபாலை |
| இ.ராஜசந்திரன் | - கண்ணபுரம் | என்.நந்தகுமார் | - வதிரி |
| பி.துஷானி | - தெல்லிப்பளை | எல்.சத்யபாலன் | -கொய்யாத்தோட்டம் |
| தி.சுபந்திஷ் | - சண்டிக்குளி | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியியலாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் ஜாதகங்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளன. மிகப்பொருத்தமான ஜாதகங்கள் எம்மால் தெரிவுசெய்து உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

(CS 26913)A-1


## மரண அறிவித்தல்



### சுப்பிரமணியம் இராமநாதன்
**(ஓய்வுபெற்ற மலேரியா தடுப்பு உத்தியோகத்தர்)**

அராலிமேற்கு வட்டுக்கோட்டையை பிறப்பிடமாகவும் தாவளை வட்டுக்கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இராமநாதன் நேற்று (11.11.2023) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் வள்ளியம்மை தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொலிஸ் கந்தையா பூரணம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், ராஜபூபதி, றஞ்சிதமலர், சின்னம்மா, ஞானம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவகுமார், சியாமளா, சியகலா, சியலதா, சியசலா ஆகியோரின் அன்பு தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் இடம்பெற்று, பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**தாவளை, வட்டுக்கோட்டை கிழக்கு, குடும்பத்தினர்.**

(CR 409911)A-1

## மரண அறிவித்தல்



### நாகலிங்கம் முத்துலிங்கம்

நாரந்தனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் சரவணையை புகுந்த இடமாகவும் கொண்ட நாகலிங்கம் முத்துலிங்கம் நேற்று (11.11.2023) சனிக்கிழமை காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற நாகலிங்கம் கண்மணிப்பிள்ளை தம்பதியரின் புதல்வனும், காலஞ்சென்ற வல்லிபுரம் மாரிமுத்து தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்புக் கணவரும், ஜெயந்தியின் (கௌரி) அன்புத் தந்தையும், யா/நாரந்தனை கணேச வித்தியாலயத்தின் ஆசிரியரும், காலஞ்சென்றவர்களான சொர்ணம்மா, கந்தசாமி, ஏகாம்பரம், இராசேந்திரம்பிள்ளை, திலகவதி அம்மா, அஸ்வினி, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அவயம்பா, தங்கம்மா செல்லம்மா, விஸ்வலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2023) முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**மு.ஜெயந்தி (மகள்)**
**T.P:076 215 1568**

(CS 26912)A-1

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 - 11 - 1931

இறப்பு 10 - 11 - 2023

### சோமசுந்தரம் சிவஞானசுந்தரம்

பருத்தித்துறை தும்பளையை பிறப்பிடமாகவும், பொன்னாலையை வதிவிடமாகவும், தற்போது யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் வசித்து வந்தவருமான சோமசுந்தரம் சிவஞானசுந்தரம் அவர்கள் நேற்றுமுன்தினம் (10-11-2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வைரமுத்து தங்கம் தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற தங்கச்சியம்மாவின் அன்புக் கணவரும், விஜயலக்சுமியின் (சிங்கப்பூர்) சகோதரரும் சசிதேவி, விஜயராணி, ஜெயராணி, காலஞ்சென்ற மனோகரன் மற்றும் கமலராணி, ஸ்ரீகாந்தன், சுமணா, அபிராமி ஆகியோரின் அன்புத் தந்தையும், விக்னேஸ்வரன் (காந்தி), யோகேந்திரலிங்கம், சற்குணநாயகி, பரஞானம், காலஞ் சென்ற உமையாள் மற்றும் சுரேஸ், உதயகுமார் ஆகியோரின் மாமனாரும், மாதங்கி, ஜனார்த்தனன், சுதர்சனன், மனோஜ், சில்வியா, பரந்தாமன், ஷேவிதா, தீபிகா, ஸ்ரீசாயகா, ஸ்ரீசயன், அஜந்தினி, தர்சனா ஆகியோரின் பேரனும், ஸ்ரீஅகராதிரா, ஸ்ரீவைஸ்ணவன் ஆகியோரின் பூட்டனும், காலஞ்சென்றவர்களான கதிரேசம் பிள்ளை, ரோகினிம்மா, நடராஜா, தியாகராஜா, குலசேகரம்பிள்ளை உருத்திரன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற கு.பொ. சிவகுருநாதன் (நாராயணதாசன்) மற்றும் சின்னம்மா, தி.பரமேஸ்வரி, சிவயோகம், உ.பரமேஸ்வரி ஆகியோரின் சகலனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2023) திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பொன்னாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**160, பலாலி றோட்,**
**கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**077 996 4011, 077 611 3624**

(CS 52827) (AK-1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 - 04 - 1936

மறைவு 11 - 11 - 2023

### கந்தன் கதிராமன்

08ஆம் வட்டாரம் நயினாதீவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தன் கதிராமன் அவர்கள் நேற்று (11-11-2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தன் வைரவிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பர் பூரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கம்மாவின் அன்பு கணவரும், காலஞ்சென்ற லோகேஸ்வரன் மற்றும் குகனேஸ்வரன் (மருந்துக் கலவையாளர்), நிமலேஸ்வரன் (UK), தயாளினி, ஜெகதீஸ்வரன், பிரதீஸ்வரன் (பிரதேச சபை ஊழியர்), லோகேஸ்வரி (ஆசிரியை), சுரேஷ்வரன் (தாதிய உத்தியோகத்தர்), ரமேஸ்வரன் (சாரதி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தயாநிதி (ஆசிரியை), புஸ்பராணி (UK), முருகதாஸ், தயானி, சிவதாசன் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், மதுரா (UK), துரிசனா (UK), பவித் (UK), அபிரா, யதுசன், உஷாந்த், தேருஷா, டனுசாந்த், அபிநயன், பூவிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**8ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

**தகவல்: குடும்பத்தினர்**
**077 507 7510,**
**077 433 9855**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபத் திருநாளில் ஆதரவற்றோருக்கு உதவுவோம்

உலகில் சாந்தி சமாதானம் அமைதி நிலவ தீபாவளித்தினத்தில் பிரார்த்திப்பதோடு எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

நரகாசுரனின் சிந்தனைகள் எமது மனங்களில் குடிகொள்ளக்கூடாது என்பதை ஞாபகமூட்டும் வகையில் தீபாவளித்திருநாளை ஆண்டுதோறும் கொண்டாடிவருகின்றோம்.

கிருஷ்ணன் நரகாசுரனை வதம் செய்ததும் இராமபிரான் வனவாசத்தை நிறைவு செய்துகொண்டு அயோத்திக்கு வருகைதந்ததும் மகாபலிச் சக்கரவர்த்தி ராஜாதி ராஜாவாக முடிசூடிக்கொண்டதும் இந்த நாளிலேயாகும். இத்தகைய பெருமைவாய்ந்த நாளில் அதிகாலை எழுந்து எண்ணெய் தேய்த்து சுடுநீரில் முழுகி புத்தாடை அணிந்து தீபங்களை வரிசையாக ஏற்றி வழிபடுவது வழமையாகிறது.

ஆலய வழிபாட்டில் ஈடுபடுவதோடு உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச்சென்று இனிப்புப் பண்டங்களை உண்டு மகிழ்வதும் நம்மவர்மரபு. ஆதரவற்றவர்களுக்கு எம்மாலியன்ற உதவிகளைச் செய்து அவர்களோடு கூடி மகிழ்வதால் எமக்கு இறையருள் கிடைக்குமென்பது திண்ணமாகும். அனைவருக்கும் ஆடல்வல்லானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக.

**ஈசான சிவ சக்திகிரீவன்**
தலைவர்
இந்து சமயப் பேரவை
யாழ்ப்பாணம்.

## அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும்

உலகெங்கும் உள்ள தமிழர்கள், இந்துக்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளில் தீபாவளி முக்கியமான இடம்வகிக்கிறது. இன்றைய நாள்களில் எமக்குத் தேவையான விடயம் அமைதி.

ஒவ்வொரு மனிதனுக்கும் தேவையான விடயம் அன்பு, மன்னித்தல், புரிந்துணர்வு, பிழைகளை ஏற்றுக்கொள்ளுதல், ஏனையவர்களை மதித்து நடத்தல், சகோதரத்துவம் இவையே. மனிதநேய ஒருமைப்பாட்டை தமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வாழ்வதற்குப் பண்டிகைகள் துணைபுரிகின்றன.

இன்றைய தினத்தில் ஒவ்வொரு மனிதருள்ளும் இருக்கும் தீய எண்ணங்கள், குணம் என்பன நீங்கி ஒளி பொருந்திய மன எண்ணத்தில் அனைவர் வாழ்விலும் இன்பமுண்டாகட்டும். அனைவர் மனதிலும், வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ இத் தீபத்திருநாளில் ஓர் வழி கிடைத்திட வேண்டும் என வாழ்த்துகிறோம்.

**சிவஸ்ரீ கு.வை.க.வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு,

**சிவஸ்ரீ. ச. சாந்தரூப குருக்கள்.**
செயலாளர், இந்துக் குருமார் அமைப்பு.

## நீதிக்கான சமூகத்துக்காக அனைவரும் இணைவோம்



இந்த தீபாவளி திருநாளில் நாம் பெறும் ஒளியின் மூலம் ஒருவருக்கொருவர் மற்றும் நீதிக்காக ஒரு சிறந்த எதிர்காலத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப நாம் அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

இந்து பக்தர்களின் இதயங்களில் ஒளிமயமானதும் மகிழ்ச்சியும் நிரம்பிய தீபாவளியைக் கொண்டாடும் இலங்கை இந்து சமூகத்துக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்!

தீபாவளி திருநாளின் தீபங்கள் நம் இல்லத்தில் உள்ள இருளை நீக்கி, வெளிச்சம் கொடுப்பதுபோல், நம் இதயங்கள் அன்பு, கருணை, ஒற்றுமை ஆகிய உணர்வுகளால், உண்மையாகப் பிரகாசித்தால், தீபாவளிக்கொண்டாட்டம் மனிதாபிமானமாக இருக்கும் என்பது எமது நம்பிக்கையாகும்.

இருளை ஒளியால் வெல்லவேண்டும், தீமையை நன்மையால் வெல்லவேண்டும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம்புறக் கணிப்பைக் களையவேண்டும் என்ற நம்பிக்கையே, ஒளியின் திருநாளான தீபாவளிக் கொண்டாட்டம் நம் அனைவருக்கும் கொண்டுவரும் செய்தியாகும்.

ஒற்றுமை மற்றும் உண்மையின் பண்புகளை புதியபரிமாணத்துக்கு உயர்த்தி இந்த தீபாவளித் திருநாளில் நாம் பெறும் ஒளியின் மூலம் ஒருவருக்கொருவர் மற்றும் நீதிக்காக ஒரு சிறந்த எதிர்காலத்தையும் சமூகத்தையும் கட்டியெழுப்ப நாம் அனைவரும் உறுதியாக இருக்க வேண்டும்.

மோசடி, ஊழல், திருட்டு ஆகியவற்றை நிராகரித்து, உண்மைக்காகவும் நன்மைக்காகவும் நின்று, மக்களின் எதிர்காலத்துக்காக நேர்மையாகவும், உண்மையாகவும், மனிதப் பண்புடனும், பரிபூரண இதய சுத்தியுடனும் உழைக்கும் தலைவர்களிடமிருந்து நம் நாட்டின் அரசியலை ஒளிரச் செய்வதற்கு இந்தத் தீபாவளியின் தீபங்கள் காரணமாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன். நீங்கள் அனைவரும் வளமான எதிர்காலத்தை நோக்கி அடியெடுத்து வைப்பதற்கான சரியான பாதைக்கான வழிகாட்டியாக இந்தத் தீபாவளியின் தீபங்கள் விளக்கட்டும் - என்றுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிநிலைத்து நிம்மதியாக வாழ தீபாவளி அருள் பாலிக்கட்டும்

கலாநிதி ஆறு.திருமுருகன்.
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை

இவ்வுலகம் இறைவனின் படைப்பு. எல்லோரும் இன்புற்று வாழ்வதற்கு இறைவன் நல்ல இயற்கையைப் படைத்தான். மண்ணில் வாழும் மனிதர்கள் பிறவியின் மகிமையை உணர்ந்து நல்லவண்ணம் வாழவேண்டும். அதர்மத்தின் வழியில் நின்றவர்கள் அழிந்துபோவார்கள். அதனை உணர்த்துகின்ற திருநாளே தீபாவளி. நரகாசுரன் என்ற அசுரன் பலரை வருத்தினான். அருள் கொடுத்த இறைவன் அறத்தின்பால் நின்று அவனை அழித்தான். வாழும் மனிதர்கள் ஒவ்வொருவரும் கடவுள் தந்த வாய்ப்புகளைக் கருத்திற்கொண்டு நன்றியோடு வாழவேண்டும். பிறருக்கு உதவவேண்டும். ஆணவத்தால் பிறரை வருத்தக்கூடாது. அகந்தை என்னும் இருளில் இருந்து நாம் வெளியே வரவேண்டும். ஒளியேற்றிக் கொண்டாடும் தீபாவளி உயர்ந்த கருத்தை விளக்கி நிற்கிறது.

உலகில் உயர்ந்த தர்மம் நிலைக்கவேண்டும். அநியாயமாக போர்களின் வலுவால் ஒன்றுமறியா அப்பாவிக் குழந்தைகள் அல்லலுறுவதைக் காண்கிறோம். எங்கள் மண்ணில் நீதிநியாயத்துக்கு ஆபத்து வந்துவிட்டது. இறைதீர்ப்பு ஒன்று உண்டு என்ற நம்பிக்கையோடு நாம் வாழ்கிறோம். எப்பவோ ஒருநாள் தர்மம் நிலைக்கும் அதனை அனைவரும் எதிர்பார்ப்போம். தீபத்திருநாளில் அனைவரும் திருக்கோவில்களுக்குச் சென்று பிரார்த்திப்போம். நீதிநிலைத்து நிம்மதியாக அனைவரும் வாழ தெய்வங்களை மன்றாடுவோம். உற்றார், உறவினர், நண்பர்களுக்கு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து அவர்களின் நல்லாதரவைப் பெறுவோம். ஆனந்தமாக அனைவரும் வாழ எனது இதயபூர்வமான ஆசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் நல் வாழ்த்துக்கள்



பூரணி
நகை மாடம்
தங்கப்பவுண் நகை வியாபாரம்



பாரம்பரிய கலைநயத்துடன்
தங்க ஆபரணங்களை ஓடர் செய்து
பெற்றுக் கொள்ளுங்கள்
46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 3121

அனைவருக்கும் இனிய தீபத்திருநாள் வாழ்த்துக்கள்
சிறி மீனாட்சி
நகை அகம்
Sree Meenakchi
Nagai Aham





இல.183. கஸ்தூரியார் வீதியில் இயங்கிவந்த
எமது ஸ்தாபனம் அதற்கு அருகாமையில்
இல. 177 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
என்ற முகவரியில் புதுப்பொலிவுடன்
இயங்குகிறது என்பதனை அனைத்து
வாடிக்கையாளர்களுக்கும்
அறியத்தருகின்றோம்.
இல.177 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6109



அ.கிருபாகரன்
-அதிபர்-
அனைவருக்கும்
இனிய தீபத்திருநாள்
வாழ்த்துக்கள்

கிருபா லேணர்ஸ்
කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர
கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.





தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| சுன்னாகம் 021 224 2022 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 021 320 1818 | முழங்காவில் 021 300 6544 |
| விஸ்வமடு 021 320 1515 | மன்னார் 023 225 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டைதீவு குளக்கட்டு கியூடெக் புனரமைப்பு!

யாழ்ப்பாணம், நவ.12

கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தின் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு செயற்றிட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்ட மண்டைதீவு குளக்கட்டு கால்வாய் வான்கதவு விவசாயிகளிடம் கையளிக்கப் பட்டது.

இந்த நிகழ்வு கியூடெக்- கரித்தாஸ் இயக்குநர் யோசப்பாலா தலைமையில் அண்மையில் இடம் பெற்றது.

பலவருடமாக சிதைவடைந்து காணப்பட்ட இந்தக் குளக்கட்டின் வான்கதவைச் சீரமைத்துத் தருமாறு மண்டதீவு விவசாய சம்மேளனம் விடுத்த கோரிக்கைக்கமைய கியூடெக் நிறுவனம் புனரமைத்துக் கையளித்துள்ளது. நிகழ்வில் யாழ்.மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகப் பங்கேற்று குளத்தின் வான் கதவு திறப்புப் பலகையைத் திறந்துவைத்தார். (ச-20)

# மணல் ஏற்றிய சாரதிகள் கைது

கிளிநொச்சி, நவ. 12

அனுமதிப் பத்திரத்துக்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் 4 டிப்பர்களும் அதன் சாரதிகளும் கல்லாறு மற்றும் புளியம் பொக்கணைப் பகுதிகளில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற சுற்றிவளைப்பின்போது தர்மபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-113)

# குடிதண்ணீர் விநியோகம் கிளிநொச்சியில் மட்டுப்பாடு

## நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தெரிவிப்பு

கிளிநொச்சி, நவ. 12

கிளிநொச்சி மாவட்டத்துக்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் விநியோகம் இன்றுமுதல் மட்டுப்படுத்தப்படுகிறது என்று தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.


கிளிநொச்சி குளத்துநீரில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் நீரை சுத்திகரிக்க ஏற்படும் தாமதம் காரணமாக குடிதண்ணீர் விநியோகம் மட்டுத்தப்படுகிறது. அதன்படி கிளிநொச்சி - டிப்போச் சந்தி, பரந்தன், பூநகரி, பொன்னகர் ஆகிய நீர்த்தாங்கிகளிலிருந்து நீரைப் பெறும் கிராமங்களுக்கு நீர் விநியோகம் மட்டுப்படுத்தப்படுகிறது.

பூநகரி பிரதேசத்துக்கு தினமும் பிற்பகல் 3மணி முதல் இரவு 10 மணி வரைக்கும், பரந்தன் நீர் தாங்கியிலிருந்து நீரைப் பெறுகின்ற பரந்தன், உமையாள்புரம், தட்டுவன்கொட்டி, ஆனையிறவு பிரதேசங்களுக்கு தினமும் காலை 8 மணி முதல் முற் பகல் 11 மணி வரைக்கும், பொன்னகர் நீர்த் தாங்கி யிலிருந்து நீரைப் பெறுகின்ற பொன்னகர், பாரதி புரம், மலையாளபுரம், கிராமங்களுக்கு தினமும் காலை 7 முதல் முற்பகல் 10 வரைக்கும், கிளிநொச்சி டிப்போச் சந்தி நீர்த்தாங்கியிலிருந்து நீரைப் பெறுகின்ற கரைச்சி பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராமங்களுக்கு தினமும் காலை 7 மணி முதல் பிற்பகல் 3 மணி வரைக்கும் நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும்.

கிளிநொச்சி குளத்தின் நிலைமை வழமைக்குத் திரும்பும் வரை இந்த நடவடிக்கை செயற்படுத்தப்படும் என்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது.

(ச-113-214)

# மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 04 . 1937

மறைவு 08 . 11 . 2023

## சரவணமுத்து சிவலோகநாதன் (சிவா)

(இளைப்பாறிய இலங்கை போக்குவரத்து சபை சாலை பரிசோதகர் கோண்டாவில், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்)

உடையார் ஒழுங்கை கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கந்தரோடை மற்றும் பிறவுண் வீதியை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவலோகநாதன் கடந்த (08.11.2023) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சிவக்கொழுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், லோகேஸ்வரியின் (சின்னக்கிளி) பாசமிகு கணவரும், சுகன்யா (சுதா - பிரான்ஸ்), சிவகுமார் (பிரான்ஸ்), சிவபாலன் (பாலன் - யாழ். மாநகர சபை), குகப்பிரியா (பிரியா - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சரவணபவன் (பிரான்ஸ்), பாரதி (பிரான்ஸ்), சாந்தநாயகி, திலீபநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீபன் சதிஸ் - பிரியா, சில்வன் சந்துரு, சஞ்சீவ் சுந்தர், ஹரிஸ், பாணு, சரண், சிவரூபன், கௌதமன், ஜனுக்ஷன், லூட்சிகா, சுவிந்தன், இந்துஜன் ஆகியோரின் பேரனும், அயனின் பூட்டனும், பரமேஸ்வரியின் உடன்பிறந்த சகோதரனும், மதிவதனசோதியின் உடன்பிறவாச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான கௌரி (பெரிய கிளி), லோகேந்திராசா, அம்பலவாணர் ஆகியோரின் மைத்துனரும், தயாளன், காலஞ்சென்ற கார்த்திகா மற்றும் மயூரன், அமுதினி, ராமமூர்த்தி, கோமதி, முகுந்தன் ஆகியோரின் மாமனாரும், திருமகளின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பின் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

185/4, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்
சுகன்யா - +3362 656 3738
சிவகுமார் - +3362 582 3686
சிவபாலன் - 077 645 2239
குகப்பிரியா- +3376 949 1537

(cr 40971) (N.1)

# புலி பாய்ந்த கல்லில் முளைக்கும் தென்பகுதியினரின் வாடிகள்

முல்லைத்தீவு, நவ. 12

கரைதுறை பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கொக்குளாய் வடக்குக்கும் நாயாறுக்கும் இடைப்பட்ட புலிபாய்ந்த கல் பகுதியின் தரை மற்றும் கடற்பகுதிகளை அபகரிப்பதற்கான திட்டங்கள் முழு வீச்சில் இடம் பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தென்னிலங்கை மீனவர்கள் சுமார் நான்குக்கு மேற்பட்ட வாடிகளை சட்டவிரோதமான முறையில் அமைத்து புலி பாய்ந்த கல் கடற்பரப்பை முற்றுமுழுதாக அபகரிக்க முயற்சிக்கின்றனர். நான்கு வாடிகளிலும் சுமார் 16 பேர் வரை தங்கி அன்று தொழில் செய்து வரும் நிலையில் குறித்த வாடிகளில் மாது விருந்துகள் இடம்பெற்றதற்கான ஆதாரங்களும் காணப்படுகின்றன.

முல்லைத்தீவை பூர்விகமாக கொண்ட மீனவர்கள் பரம்பரை பரம்பரையாக தொழில் செய்து வரும் கடற்பகுதியும் அதனோடு சேர்ந்த சுமார் 100 ஏக்கர் காணியையும் தெற்கைச் சேர்ந்தவர்களை குடியமர்த்துவதற்காகான ஏற்பாடுகள் பிக்குவின் கண்காணிப்பில் இடம்பெற்றுவருகின்றன.

பரம்பரையாக தொழில் செய்து வந்த முல்லைத்தீவு மீனவர்கள் குறித்த கடற்பகுதியில் வாடிகள் அமைப்பதற்கு உரிய அனுமதிகளை சமர்ப்பித்த போதும் அதிகாரிகள் இழுத்தடிப்புச் செய்து வருகின்றனர். சட்டவிரோதமான முறையில் வாடிகளை அமைத்த தெற்கு மீனவர்களுக்கு எச்சரிக்கை கடிதம் ஒட்டப்பட்டும் அதனை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஒ-20)

வடிவமைப்பாளர் தேவை
Photoshop (போட்டோசொப்)
அல்லது CorelDraw
தொடர்புகளுக்கு:
077 165 9845

SHOW MONEY
UK, AUSTRALIA, CANADA, USA
NEWZEALAND, FINLAND, IRELAND, SWEDEN




0710404773 (JAFFNA)
+44 7500 967636 (LONDON)
இன்றே அழையுங்கள் உங்கள் அனைத்து STUDENT VISA SHOW MONEY
தேவைகளுக்கும் மிக குறைந்த கட்டணங்களில்
முற்றிலும் நம்பகமான, ரகசியதன்மையுடன்
BEETA CONSULTANT K.K.S ROAD, KONDAVIL

# மரண அறிவித்தல்



## நாகேஸ் அன்னலெட்சுமி

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் தற்போது இல.90, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகேஸ் அன்னலெட்சுமி நேற்று (11.11.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏகாம்பரம் யோகம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற நாகேசின் (மார்க்கண்டு) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நடராசா, சண்முகநாதன், குணரெத்தினம், தங்கராசா, ருக்குமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், லோகசுந்தரி, காலஞ்சென்ற சகுந்தலாதேவி, பரமேஸ்வரி, சரஸ்வதி, சிங்கராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சிவராசா, உலகேஸ்வரி (பாசம்) இரத்தினராசா, ஆனந்தராசா, காலஞ்சென்ற நாகேஸ்வரி, கோணேஸ்வரி (சித்தி), கணேசராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தமலர் (கங்கா), நீதிராசா, விஜயகலா, மலர்விழி, சதீஸ்குமார், கோசலா ஆகியோரின் அன்பு மாமியும், இந்துஷா, ஆரூரன், செந்தூரன், நீதிகா, நிசாந்தன், நிறோஜன், அனோஜன், விதுஷன், சகானா, நிதர்ஷா, சுரேனுகா, துஷியந்தன், தரணிகா, நிலக்ஷா, சிவானுஜன், கோபிதன், டசானி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், பரந்தாமன், சகானாவின் அன்பு பேர்த்தியும், துருவன், ஸ்வேதா ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2023) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு நடைபெற்று, தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 1124 145

(CR 40984) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட்டை மேம்படுத்த உடன் திட்டங்கள் வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் அழுத்தம்



கொழும்பு, நவ.12

**மாறிமாறி குழுக்களை அமைத்து சூதாட்டத்தல் ஈடுபடாமல், கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கான திட்டத்தை அரசு உடன் நாடாளுமன்றத்தில் முன்வைக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ.**

கிரிக்கெட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தொடர்பில் நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சித் தலைவர் இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை கிரிக்கெட் சபையில் நிலவி வரும் ஊழல், மோசடி மற்றும் திருட்டுகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சர் இடைக்கால குழுவொன்றை நியமித்துள்ளார்.

இவ்வாறு குழுக்களை நியமிப்பதுடன் நின்றுவிடாது, பாடசாலை, நகரம், சங்கம், மாவட்டம் மற்றும் மாகாண மட்டங்களில் கிரிக்கெட்டை அபிவிருத்தி செய்வதற்கான தனது வேலைத்திட்டத்தை இவ் வாரத்துக்குள் அமைச்சரும், அரசும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கவேண்டும்.

அத்துடன், விளையாட்டுத்துறை அமைச்சரால் நியமிக்கப்பட்டுள்ள இடைக்கால குழுவின் பணிகளை மேற்பார்வையிடுவதற்கு அமைச்சரவை உபகுழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார். இது மிகவும் நகைப்புக்குரிய விடயம் என்பதுடன் குழு சூதாட்டமும் ஆகும்.

ஆளுமைகள் மற்றும் ஊழல், மோசடி குற்றச்சாட்டுகள் இல்லாதவர்கள் கிரிக்கெட் நிர்வாகத்தில் இருக்க வேண்டும்.

இவ்விடயத்தில் விளையாட்டுத்துறை அமைச்சர் ஒருகருத்திலும், ஜனாதிபதி வேறொரு கருத்திலும் இருந்தால் மீண்டும் நெருக்கடியான சூழ்நிலை உருவாகி பிரச்சினை பெரிதாகும் - என்றார். (ஒ-44)

# புதிய விளையாட்டுச் சட்டம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிப்பு

கொழும்பு, நவ.12

தற்போதுள்ள விளையாட்டுச் சட்டத்துக்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சட்டத்தை அறிமுகம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர் குழு தனது அறிக்கையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பித்துள்ளது.

தற்போதுள்ள சட்டத்தை முழுமையாக மாற்றுவதற்கு நடைமுறையிலிருக்கும் நீதிக்கட்டமைப்பு மற்றும் நிர்வாகக் கட்டமைப்பு ஆகியவற்றில் முழுமையாக மாற்றத்தை ஏற்படுத்த தேசிய விளையாட்டு மேம்பாட்டு அதிகாரசபையொன்றை நிறுவ வேண்டியதன் அவசியம் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதிகாரசபையில் 11 உறுப்பினர்கள் உள்ளடங்கவேண்டும்.

உத்தேச தேசிய விளையாட்டு அதிகாரசபையின் காலம் 4 வருடங்களாகும். அதற்காக பெயரிடப்படும் அல்லது உத்தியோகபூர்வ அதிகாரத்தால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய அனைத்துப் பதவிகளுக்கானவர்களை நியமிப்பதற்கு விளையாட்டுத்துறை அமைச்சரின் வாயிலாக அரசமைப்புச் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் உள்ளிட்டவையும் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் முறைப்பாடுகள் மற்றும் சர்ச்சைகளைத் தீர்க்கும் அதிகாரத்துடன் கூடியதாக 10 நடுவர்கள் அடங்கிய விளையாட்டு முறைப்பாடுகளை நிவர்த்திப்பதற்கான நீதிமன்றம் ஒன்றையும் நிறுவுதல் தொடர்பிலும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. மேற்படி பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் விளையாட்டுச் சட்ட கட்டமைப்பிலும் நிர்வாகக் கட்டமைப்பிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தமுடியும் என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (சு-இ)

# மேலைத்தேச நாகரிக மோகத்தால் தமிழ்ப் பண்பாட்டை கடாசுகிறோம்

## யாழ்.மாவட்டச் செயலர் ஆதங்கம்

யாழ்ப்பாணம், நவ.12

மேலைத்தேய கலாசாரத்தைப் பின்பற்றி எமது கலைகளை-பண்பாடுகளை- வரலாற்றுத் தொன்மைகளை - நாம் இழந்து வருகின்றோம். எங்களுடைய கலாசாரத்தை அவமதிப்பவர்களாக நாமே நடக்கின்றோம். பண்பாடு அழிந்துபோனால் அந்த இனம் அழிந்து போனதற்குச் சமன் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் - இவ்வாறு தென்மராட்சியில் இடம்பெற்ற பண்பாட்டு பெருவிழாவில் பங்கேற்று உரையாற்றுகையில் யாழ்.மாவட்டச் செயலர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஓரினத்தை இல்லாமற்செய்வதற்கு அல்லது பலவீனப்படுத்துவதற்கு செய்யக்கூடிய தந்திரமான ஒரே செயல் அவர்களின் பண்பாட்டை அழிப்பதே.

வெளிநாடுகளிலுள்ள ஈழத்தவர்கள் எங்களுடைய பண்பாட்டின் கலாசாரத்தைப் பாதுகாக்க அரும்பாடுபட்டு வருகின்றனர்.

ஆனால், நாமோ இங்கே மாறான போக்கிலே போய்க் கொண்டிருக்கின்றோம். இங்கே கொண்டாடப்படும் பல்வேறு வைபவங்களில் இதனைக் காணலாம். தமிழர்கள் தங்களுடைய கலாசாரத்தைப் பற்றி சிந்திப்பதே இல்லை. யாரோ ஒருவர் செய்ததைப் பின்பற்றிக் கொண்டு அதன்பின்னே செல்கின்றோம்.

இத்தகைய விடயங்களால் எமது பண்பாட்டையும் கலை அம்சங்களையும் இழக்கும் நிலைக்கு ஆளாகி வருகிறோம்.

எங்களுடைய பண்பாடு உலகம் போற்றும் பண்பாடு என்பதை மறந்துவிடக்கூடாது. பண்பாடு அழிந்து போனால் அந்த இனம் அழிந்து போனதற்குச் சமன். எமது பண்பாட்டைப் பாதுகாப்பதும் அதனை எதிர்கால சந்ததியினருக்கு அளிப்பதும் எமது கடமையாகும்- என்றார். (ச-159)

## பளுதூக்கல் போட்டி




# நடேஸ்வரா மாணவன் தேசியத்தில் சாதனை

யாழ்ப்பாணம், நவ.12

தேசியமட்ட பளுதூக்கல் போட்டியில் 17 வயதுப் பிரிவில் நடேஸ்வராக் கல்லூரி மாணவன் இரண்டாமிடத்தைப் பெற்று சாதனையீட்டியுள்ளார்.

இலங்கை பளுதூக்குதல் சம்மேளனத்தால் இந்த ஆண்டுக்கான சம்பியன்ஷிப் போட்டி அண்மையில் நடத்தப்பட்டது.

இதில் 17 வயதுப் பிரிவில் நடேஸ்வராக் கல்லூரி சார்பில் பங்கேற்ற லஜிந்தன் 58 கிலோ எடை மற்றும் 75 கிலோ எடை என மொத்தமாக 133 கிலோ எடையைத் தூக்கி 2 ஆம் இடத்தை தனதாக்கியுள்ளார். (ச-100)

## வடக்கு வீரர்களின் கடினபந்து



# வெற்றிவாகை சூடியது 'மன்னார் ஏஜ சுப்பர் கிங்'

யாழ்ப்பாணம், நவ. 9

வடக்கு மாகாண விளையாட்டு வீரர்களை உள்ளடக்கி 40 வயதுக்குட்பட்டவர்களுக்காக நடத்தப்பட்ட லீக் முறையிலான கடினபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் வெற்றிவாகை சூடியுள்ளது மன்னார் 'ஏஜ' சுப்பர் கிங் அணி.

வடமாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வீரர்கள் ஏலமுறையில் தெரிவு செய்யப்பட்டு யாழ். மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தச் சுற்றுப் போட்டி இடம்பெற்றது.

இதில் புள்ளிப்பட்டியலில் முதலிரண்டு இடங்களைப் பிடித்த மன்னார் 'ஏஜ' சுப்பர் கிங்ஸ் அணி மற்றும் கிளிநொச்சி புல்ஸ் அணி இறுதி போட்டிக்குத் தகுதிபெற்றன.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கிளிநொச்சி புல்ஸ் முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய மன்னார் 'ஏஜ' சுப்பர்கிங்ஸ் அணி 17.2 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

போட்டியின் ஆட்டநாயகனாக சிறப்பாக துடுப்பெடுத்தாடி 58 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்த சட்டத்தரணி இளங்குமரன் தெரிவுசெய்யப்பட்டார்.

அதிக விக்கெட்டுகளை கைப்பற்றிய மன்னாரைச் சேர்ந்த பர்னாந்து அருள் சிறந்த பந்து வீச்சாளராகவும் அதிக ஓட்டங்களைக் குவித்த சட்டத்தரணி மணிவண்ணன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ச-20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நந்திக் கொடி ஏற்றிட்டாரராம் ரணில் அதற்கு நன்றி கூறுகின்றது சிவசேனை

இந்துக்களுக்கு இலங்கை அரசமைப்பில் முன்னுரிமை கொடுக்கச் சிவசேனை கோருகிறோம். அந்தக் கோரிக்கையை ஏற்பதற்கான கட்டியம் கூறுகிறார் ஜனாதிபதி. தன் அலுவலகத்தில் நந்திக்கொடியை ஏற்றினார். இலங்கையில் ஏறத்தாழ 30 இலட்சம் இந்துக்கள் வாழ்கிறோம். இலங்கை அரசுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நன்றி சொல்கிறோம். இலங்கை இந்துக்கள் நன்றி சொல்கிறோம் என இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்றுச் சனிக்கிழமை மாலை அவர் வெளியிட்டுள்ள ஊடகச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று தீபாவளி நாள். இந்துக்களின் விழா நாள். இந்துக்கள் அனைவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் ஒளி சேரும் நாள். இந்துக்களின் கொடி நந்திக்கொடி. விடுதலை பெற்ற இலங்கையின் வரலாற்று நாள். கடந்த ஆண்டு இதே தீபாவளி நாள். ஜனாதிபதி அலுவலகத்தில் நந்திக் கொடிகள் பறந்தன. ஜனாதிபதி ரணிலுக்கு இந்துக்கள் நன்றி சொன்னார்கள்.

நல்லூரில் அரசு வளாகத்தில் நந்திக் கொடி 400 ஆண்டுகளுக்கு முன்பு பறந்தது. அதே நந்திக்கொடி கடந்த ஆண்டு தீபாவளி விழா நாளிலும், இந்த ஆண்டு தீபாவளி விழா நாளிலும் கொழும்பில் இலங்கை ஜனாதிபதி வளாகத்தில் அரசின் ஆட்சி வளாகத்தில் பறக்கிறது - என்றுள்ளது. (அ-ஒ-66)

### 14 மாவீரர்...

போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. அதில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார். (அ-ஒ-19)

### ஐ.எம்.எப்...

இலங்கை வங்குரோத்து அடைந்துள்ள நிலையில், முன்வைக்கப்படும் பாதீடு என்பதால் பொருளாதாரத்தை மேம்படுத்துவதை இலக்காகக்கொண்ட முன்மொழிவுகள் பெரும்பாலும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பாக சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் பிரகாரம் சில நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான தகவல்களை பாதீட்டு உரையில் ஜனாதிபதி விளக்கமளிப்பார். புதிய சில வரிகளும் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. அதாவது இருப்பவர்களிடம் பறித்து, இல்லாதவர்களுக்கு சுமைகளை அதிகரிக்காத வகையிலான ஏற்பாடுகளும் உள்ளன என்று ஆளுங்கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார். அத்துடன், அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு அறிவிப்பும் வெளியாகவுள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் வரவு - செலவுத் திட்ட உரை மாத்திரமே நாளை நடைபெறும்.

மறுநாள் நவம்பர் 14ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 7 நாள்கள் ஒதுக்கீட்டுச் சட்டவரைவின் (வரவு - செலவுத்திட்ட) இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெறவுள்ளது. வரவு - செலவுத்திட்ட இரண்டாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. அதனையடுத்து, குழுநிலை விவாதம் நவம்பர் 22ஆம் திகதி புதன்கிழமை முதல் டிசெம்பர் 13ஆம் திகதி புதன்கிழமை வரை ஞாயிறு தினங்கள் தவிர்ந்து 19 நாள்கள் இடம்பெறவுள்ளது. அதற்கமைய, 2024 நியதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்ட மூன்றாம் மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு டிசெம்பர் 13ஆம் திகதி புதன்கிழமை மாலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. (அ-ஒ-44)

### தேசிய...

மணியம் பரமானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் வரலாற்றில் முதன்முதலாக நடைபெறும் ஆய்வுமாநாடாக இது அமைந்துள்ளது. வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் த.மங்களேஸ்வரன் இவ் ஆய்வுமாநாட்டின் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கின்றார். திறந்த பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை கல்வித்துறை பேராசிரியர் திருமதி ச.குகமூர்த்தியால் ஆய்வு மாநாட்டு பேருரை நிகழ்த்தப்படவுள்ளது. ஆய்வு மாநாட்டின் தொழில்நுட்ப அமர்வுகளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறைத்தலைவி கலாநிதி ஜெயலட்சுமி இராசநாயகம், கல்வி முதுமானி கற்கைநெறி இணைப்பாளர் கலாநிதி ஆ.நித்திலவர்ணன், இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்வித்துறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி இராஜினி சுப்பிரமணியசர்மா ஆகியோர் வழிநடத்த உள்ளனர்.

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், விசேடகல்வி, ஆரம்பக்கல்வி, சித்திரம், நடனம், சங்கீதம் ஆகிய துறைசார் பாடங்களை உள்ளடக்கியதாக ஆய்வுச் சமர்ப்பிப்புகள் இடம்பெறவுள்ளன. இக்கல்லூரியில் உள்ளகப் பயிற்சியை கடந்த ஆண்டு நிறைவு செய்த ஆசிரியர்களால் ஆய்வுச் சமர்ப்பிப்பு இடம்பெறவுள்ளது.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிலும் உள்ளகப் பயிற்சி ஆசிரிய மாணவர்களின் பிரதான செயற்கூறாக செயல்நிலை ஆய்வு இடம்பெறுகிறது. அனைத்து தேசிய கல்வியியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களுக்கும் இச் செயல்நிலை ஆய்வு மாநாடு மிகவும் பயனுடையதாக அமைகின்றது. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் ஆய்வுச் சமர்ப்பிப்புகள் இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழகம், திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வி நிறுவகம் ஆகிய உயர் நிறுவனங்களைச் சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் கல்வியியலாளர்களின் ஒத்துழைப்புடன் ஆய்வு மாநாடு மிகச் சிறப்பான முறையில் திட்டமிடப்பட்டுள்ளன.

பீடாதிபதி கலாநிதி சு.பரமானந்தம் சிந்தனையில் உதித்த இவ் ஆய்வு மாநாடானது, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் தொடருறு கல்விப் பிரிவின் கீழ் இயங்கும் ஆய்வு அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பு விரிவுரையாளர் பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் ஒழுங்கமைத்துள்ளார். (அ-ஒ-இ)

### சுகாதாரத்துறை...

சுகாதாரத்துறையினர் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகள் பற்றி இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது. (அ-ஒ-இ)

### கிளிநொச்சியில்...

வனவுக்காக கடைகளுக்கு வந்த மக்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். கிளிநொச்சி நகர் பகுதிகளில் உள்ள பிரதான வீதிகள் மற்றும் உள்ளூர் வீதிகளில் மழை நீர் குறுக்கறுத்து பாய்ந்து ஓடியது. (அ-ஒ-113)

### எரிபொருள்...

முன்மொழியப்பட்டுள்ளது. இதன் காரணமாக அடுத்த ஆண்டு ஜனவரியிலிருந்து எரிபொருள்களின் விலை அதிகரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் அடுத்தாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் வற்வரியை அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. தற்போது 15 சதவீதமாக இருக்கும் வற்வரி 18 சதவீதமாக அதிகரிக்கப்பட உள்ளது. இந்த வரி உயர்வால் பெற்றோல், டீசல் விலை மேலும் 10 சதவீதம் அதிகரிக்கப்படலாம் என அரச நிதிக்குழுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

### 'என்னைக்...

குடிக்கமாட்டேன், அது விஷமாக இருக்கலாம்' என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை கிரிக்கெட் தொடர்பிலான தற்போதைய நிலைமைகளை வெளிப்படுத்த விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க விசேட செய்தியாளர் மாநாட்டை நேற்று நடத்தினார்.

இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க கிரிக்கெட் தடை செய்யப்பட்டதாக தெளிவாகப் புலனாகிறது. கொழும்பு ஹோட்டல் ஒன்றில் இலங்கைக் கிரிக்கெட் தடை செய்யப்பட்டமைக்கு மதுபோதை ஊடாக மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதாகத் தகவல். நாட்டுக்குத் துரோகம் செய்யும் ஒரு குழு உள்ளது. நீதிமன்றத் தடை நீங்கினால், அர்ஜுனா கொஞ்ச நாள் கிரிக்கெட்டை மீள உருவாக்கிவிடுவார். இலங்கையில் உள்ள அனைத்து கிரிக்கெட் சங்கங்களும் எனது அதிகாரத்தால் கலைக்கப்படும். சில சங்கங்களுக்கு வாழ்நாள் தடை விதிக்கப்படும். தீய நோக்கத்தில் எங்களை ஏன் தடை செய்தார்கள் என்று ஐ.சி.சி.யை கேட்க வேண்டும். நாங்கள் ஐ.சி.சி. யிடம் முறையிடுவோம், ஆனால் இதைத் தீர்க்க தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். எனது அதிகாரத்தில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றால், நான் இதைச் செய்வேன்.

பாதாள உலகக்குழுக்கள் என் உயிரைப் பறிக்க நிறையப் பணம் செலவழிக்கும், எனது பாதுகாப்பை அதிகரிக்கச் சொன்னேன், ஆனால் இதுவரை தீர்வு வழங்கப்படவில்லை. கிரிக்கெட் அமைப்புக்கு வரம்பற்ற அதிகாரம் எப்படி கிடைத்தது என்று எனக்கு ஒரு கேள்வி உள்ளது. நாங்கள் ஐ.சி.சி.யிடம் பேசினோம். ஆனால், அவர்கள் பதிலளிக்கவில்லை. இது எங்களுக்குத் தெரிவிக்காமல் செய்யப்பட்டது. குறைந்தபட்சம் குற்றச்சாட்டுகளை அனுப்பியிருக்கவேண்டும் - என்றார். (அ-ஒ-இ)

### தடைக்கு...

தற்போது, இந்தியா சென்றுள்ள இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கான குழுக் கூட்டத்தில் பங்கேற்றுள்ளதாக கிரிக்இன்போ இணையத்தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேபோல், அகமதாபாத்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. கூட்டத்திலும் அவர் பங்கேற்க உள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014 - 2015 காலப்பகுதியில் இடைக்கால கிரிக்கெட் குழு ஒன்று இலங்கையில் செயற்பட்டபோது, அது சர்வதேச கிரிக்கெட் பேரவையால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக அந்த இணையத்தளம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ஒ-இ)

**வேலைக்கு ஆள்கள் தேவை**
யாழ் நகரில் உள்ள கல்வி நிலையம் ஒன்றிற்கு கணக்கு பார்ப்பதற்கு A\L படித்த பெண்கள் தேவை.
CS 26865 (AK-1)
076 351 0092

**விற்பனைக்கு**
முட்டையிடும் கினிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு
மெமோறியல் லேன் மானிப்பாய் J/137, கிராம சேவகர் அலுவலகத்திற்கு அருகில்
076 634 8343

**முகாமையாளர் தேவை**
யாழ் மாவட்டத்தில் தீவுப் பகுதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அம்மன் ஆலயத்திற்கு முகாமையாளர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிடம், உணவு வசதிகள் கொடுக்கப்படும்.
தகைமை உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 788 7830
(cs.26880 (AK.1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

01. இணுவில். இந்து. கௌரவகுலம் (V). 1990. அனுசம். Quantity Surveyor, அவுஸ்ரேலியா மணமகனுக்கு மணமகள் தேவை.
02. சுதுமலை. இந்து. கௌரவகுலம் (V). 1975. மிருகசீரிடம். BA, Graduate, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
03. கந்தர்மடம். இந்து. கௌரவகுலம் (V). 1989. உத்தராடம். MSc, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
04. தெல்லிப்பளை. இந்து. கௌரவகுலம் (V). 1988. உத்தரம். BSc., Civil Engineering, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
05. கரவெட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1988. திருவோணம். Customer Advisor, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
06. கொக்குவில். இந்து. கௌரவகுலம் (V). 1987. சித்திரை. Londan A/L Dip.in IT, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
07. சுருவில். இந்து. கௌரவகுலம் (V). 1987. அச்சுவினி. Msc, அவுஸ்ரேலியா மணமகனுக்கு மணமகள் தேவை.
08. தெல்லிப்பளை. இந்து. கௌரவகுலம் (V). 1987. புனர்பூசம். BSc., Civil Engineer, Singapore மணமகனுக்கு மணமகள் தேவை.
09. நீர்வேலி. இந்து. கௌரவகுலம் (V). 1986. அத்தம். Dip in Edu, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728

## மணமகள் தேவை

01. சங்கானை. இந்து. கௌரவகுலம் (K). 1992. விசாகம். BA (Hons) Accountant, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
02. சுன்னாகம். இந்து. கௌரவகுலம் (K). 1996. மிருகசீரிடம். B Eng. Software Engineer, Australia மணமகனுக்கு மணமகள் தேவை.
03. பளை. இந்து. கௌரவகுலம் (K). 1988. அனுசம். Inventory officer, Canada மணமகனுக்கு மணமகள் தேவை.
04. தெல்லிப்பளை. இந்து. குருகுலம். 1996. சித்திரை. Post graduate in Management, Newzealand Govermement officer, Newzealand மணமகனுக்கு மணமகள் தேவை.
05. மயிலிட்டி. இந்து. குருகுலம். 1981. அத்தம். Accountant, USA மணமகனுக்கு மணமகள் தேவை.
06. யாழ். இந்து. குருகுலம். 1983. பரணி. Sales Assistant, UK மணமகனுக்கு மணமகள் தேவை.
07. கோப்பாய். இந்து. கௌரவகுலம் (V). 1988. பூரட்டாதி. MBA, கனடா மணமகனுக்கு மணமகள் தேவை.
08. யாழ். இந்து. கௌரவகுலம் (V). 1980. உத்திரட்டாதி. IT Degree, Accountant மணமகனுக்கு மணமகள் தேவை.
09. தெல்லிப்பளை. இந்து. கௌரவகுலம் (V). 1989. அனுசம். Graduate, Human Resource Analyst, USA மணமகனுக்கு மணமகள் தேவை.

S.Sharma J.P Astrologer
Whatsapp - 077 803 8193
Phone - 077 539 3728


# பெரமுன புதிய தலைவர் சம்மேளனத்தில் தெரிவு?

கொழும்பு, நவ. 12

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் இரண்டாவது தேசிய சம்மேளனம் சுகததாஸ உள்ளக அரங்கில் எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதி பிரமாண்டமாக நடைபெறவுள்ளது. கட்சியின் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைவர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலர் கரம் கோர்த்து பங்கேற்கவுள்ளனர். இதன்போது மொட்டுக்கட்சிக்குப் புதிய தலைவர் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

(ச-44)


## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS26723)(J-1) 076 701 3060

## கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை மானிப்பாய்

பொது சத்திரசிகிச்சை நிபுணர்
DR.S. மதிவாணன்
MBBS, MD SURGERY, MRCS (ENG),
FELLOWSHIP IN VASCULAR IN GENERAL SURGERY (UK)
CONSULTANT SURGEON
BOARD CERTIFIED IN GENERAL SURGERY WITH VASCULAR INTEREST

திங்கள் மற்றும் சனிகிழமைகளில் 4.30 PM

சத்திர சிகிச்சை மற்றும் ஆலோசனை வழிகாட்டல்

முதல் 10 சத்திரசிகிச்சை ஆலோசனைகளும் (Consultation Channeling) இலவசமாக நடைபெறும்

விசேட குருதிக்குழாய் சத்திரசிகிச்சை கிளினிக்
- ★ ஆறாத புண்களுக்கான சிகிச்சை
- ★ கால் இரத்த நாள்(வரிக்கோஸ்) வீக்கத்திற்கான சிறப்பு சிகிச்சை
- ★ கால் வீக்கத்திற்கான சிகிச்சை
- ★ நீரிழிவுநோயின் பின்னர் கால்களை பரிசீலித்தலும் தீர்வு வழங்குதலும்.

பொது சத்திரசிகிச்சை
- ★ மார்பு கட்டிகள், நீர் கட்டிகள்
- ★ வயிற்று நோவு
- ★ தைரெயிட் பிரச்சனைகள்
- ★ பித்தப்பை உபாதைகள்
- ★ கேணியா
- ★ மலவாசல் இரத்தக்கசிவுகளுக்கான ஆலோசனைகளும் தீர்வுகளும்.

முன் பதிவுகளுக்கு : 077 066 1031 ☎ 021 225 5157

## காணி விற்பனைக்கு

GOLDEN Real Estate

யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A-9 வீதி முகப்புடன் 42 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

- ✻ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- ✻ **நிலப்பரப்பு,** நன்னீரூற்று
- ✻ 18 அடிப்பாதையுடன்
- ✻ சித்த மருத்துவமனைக்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- ✻ யாழ். பஸ்நிலையத்திலிருந்து 6 KM தூரம்
- ✻ நல்ல சூழல். குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- ✻ நன்னீர் ஊற்று நிலம்
- ✻ தரகர் தேவையில்லை.
- ✻ **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 - மாலை 6.00 மணிவரை.

தொடர்பு: 076 057 0354
077 623 4204
076 755 8606

(CS 26936) A-1

## வீடு வாடகைக்கு

மு/ புதுக்குடியிருப்பு கைவேலி, திம்பிலி வீதியில் (பிரதான வீதியில் இருந்து 500m) இணைந்த குளியலறை 3 படுக்கை அறை (Bedrooms) மற்றும் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்குண்டு.

CS 26935 (AK-1)

075 166 2617

## மணமகன் தேவை

யாழ் இந்து (V) படித்த மணமகளுக்கு 35 வயதிற்குட்பட்ட கௌரவமான குடும்பத்தை சேர்ந்த படித்த மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள்.

Whatsapp - +6597539583
ctmbsg@gmail.com

## காணி, கடை, கட்டடத்துடன் காணி விற்பனைக்கு உள்ளன

1. பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து வடக்கு பக்கமாக 100 மீற்றர் தூரத்தில் பிரதான வீதியில் அமைந்துள்ள காணி 5 1/4 பரப்பும் பாரிய களஞ்சியமும் சேர்த்து விற்பனைக்கு உள்ளது.
2. K.K.S. வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள களஞ்சிய வசதியுடன் கூடிய கடை விற்பனைக்கு உள்ளது.
3. A-9 வீதி, திருமுறுகண்டியில் பிரதான வீதியுடன் அமைந்துள்ள ஒரு ஏக்கர் காணியும் பாரிய கட்டடம் உணவகம் என்பன விற்பனைக்கு உள்ளது.

தொடர்புகளுக்கு:- 077 3866 250

(CR 40948) A-1

## கணித வகுப்பு

கணிதம்
A.K யசிந்தன்
**தரம் 6 புலமைப்பரிசில் பரீட்சை**
எழுதிய மாணவர்களுக்கான
**பிரிவு II ஆரம்பம் (15.11.2023)**

- K.K.S வீதி (பன்றிக்கோட்டு பிள்ளையார் கோயிலுக்கு முன்)
- 17, சிவிவாசகம் வீதி

077 188 2518

## தேவை

கிளிநொச்சியிலுள்ள மாட்டுப் பண்ணை ஒன்றிற்கு ஆண் / பெண் நன்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.

(Family விரும்பத்தக்கது)

* சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

077 538 1642

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இராசபாதை வீதியில் 06 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

நிலப்பரப்பு

- ➡ பிரதான இராசபாதையும் G.P.S. விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- ➡ 18 அடி பாதையுடன்.
- ➡ 4 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ➡ திருமண மண்டபங்கள் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் வீடுகள், கட்டுவதற்கு உகந்த இடம்.
- ➡ குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி
- ➡ நன்னீர் ஊற்று.
- ➡ இக் காணியில் இருந்து கல்வியங்காடு பிரதான சந்தை 1 1/2 km.
  திருநெல்வேலி பிரதான சந்தை 1 1/2 km.
  நல்லூர் கந்தசாமி ஆலயம் 2 km.
- ➡ திருநெல்வேலி நொதேன் வைத்தியசாலை 2 km.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

பார்வையிடும் நேரம்:-
காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

தொடர்புகளுக்கு:- ஜெயம்
077 814 7389
077 986 5457

(CS 26820) A-1

## நரம்பியல் புனர்வாழ்வு மையம் மானிப்பாய்

வேலை வாய்ப்பு

- ✻ தாதியர் (Nurse)
- ✻ தாதிய உதவியாளர் (Nurse Assistant)
- ✻ முகாமைத்துவ உதவியாளர் (Management Assistant)
- ✻ சுத்திகரிப்புத் தொழிலாளி (Labour)

/முன் அனுபவம் விரும்பத்தக்கது
சம்பளம் நேர்காணலின் போது தீர்மானிக்கப்படும்

Green Memorial Hospital, Manipay ☎ 0212256990 © 0770163515


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, இல. 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றுள்ளோர்கள்
தாய் மானம் காக்க என்றே தம்மையே தந்துள்ளோர்கள்
ஊர் வாழ வேண்டும் என்றே உன்னத ஆர்வம் கொண்டோர்
ஏராளமான துயர் எண்ணங்கள் தாங்கி நின்றோர்!

சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 ஐப்பசி 26 ஞாயிற்றுக்கிழமை (12.11.2023) சிகரம்: 168

# அலப்பறை கிளப்புறோம் : யாழ்ப்பாணத்தின் சுவை மாறுகின்றதா?

○ நிலாந்தன்



கடந்த நான்காம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் ஹோட்டலில் ஒரு விருந்து இடம்பெற்றது. "அலப்பறை கிளப்புறோம்" என்ற தலைப்பில் ஒழுங்கு செய்யப்பட்ட "டிஜே பார்ட்டி"அது. அந்த நிகழ்வை குறித்து யாழ். மாநகரசபை நிர்வாகமும் கச்சேரியும் ஹோட்டல் நிர்வாகத்தோடு தொடர்புகொண்டு கேட்டிருக்கின்றன. அந்த நிகழ்வை ஒழுங்குபடுத்தும் "Shuttle Vibe" என்ற கொழும்புமைய நிறுவனத்தோடு கதைக்குமாறு கூறி அந்த நிறுவனத்தின் தொடர்பிலக்கத்தை ஹோட்டல் நிர்வாகம் கொடுத்திருக்கிறது. நிகழ்வில் "டிஜே" இசை வழங்குநரோடு சிலர் தொலைபேசியில் எடுத்துப் பேசியிருக்கிறார்கள். மோட்டார் சைக்கிளில் ஹெல்மெட் அணிந்தபடி அவருடைய வீட்டுக்குச் சென்ற இருவர் மிரட்டியிருக்கிறார்கள்.

பொலிஸ் பாதுகாப்போடு அந்த நிகழ்வை நீங்கள் நடத்தினாலும் நிகழ்வு முடிந்த பின் நீங்கள் வெளியே வரத்தான் வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது. எனினும் நிகழ்வு குறித்த தினத்தில் நடந்திருக்கிறது.

அந்த நிகழ்வில் மொத்தம் 100க்கும் குறையாதவர்கள் பங்குபற்றியதாகவும் அவர்களில் எட்டுப் பேர்களே பெண்கள் என்றும் ஹோட்டல் நிர்வாகம் கூறுகின்றது. அந்த எட்டுப் பேர்களில் இரு பெண்கள் தமது துணைவர்களோடு வந்தார்கள் என்றும், இருவர் சகோதரிகள் என்றும், நால்வர் ஒரே உறவு வட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. அங்கு மது பரிமாறப்பட்டுள்ளது. ஆனால் போதைவஸ்து பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படுவது பிழையான தகவல் என்றும் ஹோட்டல் நிர்வாகம் கூறுகின்றது.

அந்நிகழ்வை எதிர்ப்பவர்கள் இரண்டு நோக்கு நிலைகளிலிருந்து அதை எதிர்க்கிறார்கள். முதலாவது பண்பாட்டு நோக்கு நிலையில் இருந்து. இரண்டாவது அரசியல் நோக்கு நிலையில் இருந்து. அதாவது இது மாவீரர் மாதம் என்பதனால் இதுபோன்ற நிகழ்வுகளை ஒழுங்கு செய்யக்கூடாது என்று.

மாவீரர் வாரம் இம்மாத இறுதியில் வருகிறது. மாதத்தின் முதல் வாரத்தில் தீபாவளி வருகிறது. கடந்த வாரம் முழுவதும் யாழ். நகரத்தின் தெருக்களில் ஜனங்கள் நிரம்பி வழிந்தார்கள். ஆனால் அதற்காக தீபாவளியைக் கொண்டாடுபவர்கள் மாவீரர் நாளை அனுஷ்டிக்க வரமாட்டார்கள் என்பதல்ல. , எனவே 'டிஜே பார்ட்டியில்' ஆடிக் களித்திருப்பவர்கள் நினைவுகூரமாட்டார்கள் என்று எடுத்துக்கொள்ளத் தேவையில்லை.

பொதுவாக ஒரு மக்கள் கூட்டம் அப்படித்தான் இருக்கும். முதலாவதாக அது மகிழ்ந்திருக்க விரும்பும். ஆடக் கிடைத்த சந்தர்ப்பங்களையும் பாடக்கிடைத்த சந்தர்ப்பங்களையும் அனுபவிக்கக்கிடைத்த சந்தர்ப்பங்களையும் யாரும் இழக்க விரும்புவதில்லை. அதே சமயம் தங்களுக்காக உயிர் நீத்தவர்களை அவர்கள் மறந்துவிடுவதுமில்லை. ஜனங்களை, அவர்களை அவர்களாக விளங்கிக்கொள்ளவேண்டும். அவர்களுடைய ஆசாபாசங்கள்; விருப்பு வெறுப்புக்கள்; சின்னச்சின்னச் சந்தோசங்கள்; சலனங்கள்...போன்ற எல்லாவற்றுக்குள்ளாலும் விளங்கிக்கொள்ளவேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தை இதைச் செய்யாதே என்று கட்டளையிட முடியாது. அவ்வாறு கட்டளையிடுவது ஒரு போர்க்காலத்தில் சாத்தியமாக இருக்கலாம். ஆனால் ஆயுத மோதல்களற்ற ஒரு காலகட்டத்தில் அதை எப்படிச் செய்வது?

தீபாவளியை, வருசப் பிறப்பைக் கொண்டாடுமாறு; ஆடி அமாவாசையை, சித்திராப் பௌர்ணமியை அனுஷ்டிக்குமாறு யாரும் மக்களுக்குக் கட்டளையிடுவதில்லை. நல்லூர் கோயிலுக்கு மடுத் தேவாலயத்துக்கு போகுமாறு யாரும் மக்களுக்குக் கட்டளை இடுவதில்லை. துர்க்கா மணி மண்டபத்தில் நடக்கும் சுழலும் சொற்போர்களுக்கு, விவாத மேடைகளுக்கு மக்களை யாரும் வாகனம் விட்டு ஏற்றிக்கொண்டு போவதில்லை. இவற்றையெல்லாம் சனங்கள் தாமாகவே செய்கிறார்கள். ஏனென்றால் அவையனைத்தும் மதப் பண்பாட்டினடியாக, நம்பிக்கைகளினடியாக மக்கள் மயப்பட்ட விடயங்கள். எனவே நினைவுகூர்தலை மக்கள் மயப்படுத்துவது எப்படி என்பதுதான் இங்குள்ள பிரச்சினை.

> **ஒரு மக்கள் கூட்டம் எதை ரசிக்க வேண்டும்? எதை ருசிக்க வேண்டும்? எதைக் எப்பொழுது கொண்டாட வேண்டும்? எப்படிக் கொண்டாட வேண்டும்? எப்பொழுது கொண்டாட வேண்டும் போன்ற விடயங்களில், மக்களைப் பொருத்தமான இடங்களில் வழிநடத்தத் தேவையான கலை, பண்பாட்டுத் தரிசனங்களை கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கொண்டிருக்க வேண்டும்.**

நினைவுகளை; நினைவுகளின் அடியில் மண்டிக்கிடக்கும் துக்கத்தை; கோபத்தை எப்படி அரசியல் ஆக்கசக்தியாக மாற்றுவது என்று சிந்திக்கும் எல்லாக்கட்சிகளும், அரசியல் செயற்பாட்டாளர்களும் நினைவு கூர்தலை எப்படி மக்கள் மயப்படுத்துவது என்று சிந்திப்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

கலை இலக்கியங்கள், திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் போன்றன மக்கள் மகிழ்ச்சியாக இருக்க விரும்புவதைக் காட்டுகின்றன. எனவே பொருத்தமான விதங்களில் மக்களை மகிழ்விப்பதற்குரிய கலை, பண்பாட்டுத் தரிசனத்தை கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கொண்டிருக்கவேண்டும். பூகோள மயமாதலின் விளைவாக, தொழில்நுட்பப் பெருக்கத்தின் விளைவாக சமூகங்களின் ருசி, ரசனைகள் மாறி வருகின்றன. டிஜே பார்ட்டி எனப்படுவது அவ்வாறான ஒன்றுதான்.

டி.ஜே. என்பது டிஸ்க் ஜோக்கி எனப்படும் ஆங்கில வார்த்தையின் சுருக்கம். அதன் பொருள், ஒரு விருந்தில் அல்லது பொதுமக்கள் கூடும் இடங்களில் சுவாரசியமாக பாடல்களை இசைப்பது. அதற்கேற்ப ஆடுவது. 1935இல் ஓர் அமெரிக்கர் அதை அறிமுகப்படுத்தினார். 1943இல் முதலாவது டிஜே பார்ட்டி இங்கிலாந்தில் இடம்பெற்றது.

தமிழ்ப்பகுதிகளில் டிஜே இசை என்பது ஏற்கனவே உள்ள சினிமா பாடல்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஆடுவதற்கு ஏற்றாற்போல ரீமேக் செய்வதுதான். அதில் குறிப்பாக தாளம் தூக்கலாகக் கேட்கும். டும்டும்டும் என்று. அது இதயத்தில் அறைவது போலிருக்கும். ஆனால் அதற்கு ஒரு தலைமுறை ஆடுகிறது. இளையவர்கள் மட்டுமல்ல நடுத்தர வயதினரும் சேர்ந்து ஆடுவார்கள்.

ஆடுவது நல்லது. அது உடலிறுக்கத்தையும் மன இறுக்கத்தையும் நீக்கும். ஈகோவைத் தளர்த்தும். அது ஒரு நல்ல உடற்பயிற்சியும் மனப் பயிற்சியும் ஆகும். ஆனால் எதற்கு ஆடுகிறோம்? எப்பொழுது ஆடுகிறோம்? எங்கே ஆடுகிறோம் ? பெரும்பாலான இளையோர் ஒன்றுகூடல்களில் டிஜே ஆட்டம் இருக்கும். அங்குள்ள ஒலி பெருக்கிகள் அதிரும் பொழுது அது காதுக்கு இதமாக இருக்கிறதா அல்லது மனதுக்கு இதமாக இருக்கிறதா என்பதைக் குறித்து யாருக்கும் கவலையில்லை. ஆடுவதற்கு ஓர் இசை தேவை அவ்வளவுதான். அதேசமயம் எமது நரம்புகளும் காதுகளும் மரத்துப்போய் விட்டன எதையும் அது காட்டுகின்றதா? நல்ல இசையை கேட்கும் காதும் நல்ல இசையை ரசிக்கும் மனமும் மரத்துக் கொண்டு போகின்றனவா? அது ஒரு ருசி மாற்றம். ரசனை மாற்றம். இதுபோல இன்னுமொரு மாற்றத்தை இங்கு சுட்டிக்காட்டலாம். கரஞ்சுண்டல் வண்டில் என்பது நமது சிறுபிராய ஞாபகங்களோடு சேர்ந்து வருவது. பெற்றோல்மாக்ஸ் விளக்கின் ஒளியில் மணியொலித்தபடி இரவுகளில் எமது தெருக்களில் அது வரும். அதை லாலா மிட்டாய் வண்டில் என்றும் அழைப்பதுண்டு. உறைப்பும் புளிப்பும் கலந்த, சூடு பறக்கும் கரஞ்சுண்டலின் பிறப்பிடம் வட இந்தியா என்று கூறப்படுகிறது. அதில் பயன்படுத்தப்படும் கடலை இடத்துக்கிடம் வேறுபடுவதாக விடயம் தெரிந்தவர்கள் கூறுகிறார்கள். ஆனால் இப்பொழுது நமது திருவிழாக்களில் கரஞ்சுண்டல் கிடைப்பது அரிது. நல்லூர் திருவிழாவில் கடைசி மூன்று நாட்களில்தான் கரஞ்சுண்டல் கிடைப்பதுண்டு. பதிலாக ஸ்பெஷல் என்ற ஒன்று விற்கப்படுகிறது. கொஞ்சம் மரவள்ளிச் சீவல்; கொஞ்சம் பகோடா: சில சிறிய உருண்டையான கடலை வடைகள்; சிறிய புளித்த கோதுமை மா வடைகள்; அவித்த நூடில்ஸ்.... என்று பலதையும் பத்தையும் ஒரு தட்டில் போட்டு அதன் மீது சிறிதளவு கரஞ்சுண்டலைக் கொட்டி ஏதோ ஒரு குழம்பை ஊற்றித் தருவார்கள். அதுதான் ஸ்பெஷல். ஆனால் மொறு மொறுவென்று

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாணவர் போராட்டமும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும்

அ.நிக்ஸன்

இந்தியப் பொதுத்தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தோல்வியடைந்து ராஜீவ் காந்தி பதவியிழந்த பின்னர் பிரதமராகப் பதவியேற்ற பி.வி.சிங் தலைமையிலான பா.ஜ.க. அரசாங்கம் 1989ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் இருபதாம் திகதியன்று இந்தியப் படைகளை இலங்கையில் இருந்து வெளியேறுமாறு உத்தரவிட்டிருந்தது. அதற்கு அடுத்தநாள் இருபத்தோராம் திகதி மனித உரிமைச் செயற்பாட்டாளரும் யாழ். பல்கலைக்கழக உடற்கூற்றியல் மருத்துவருமான கலாநிதி ரஜனி திரணகம இனந்தெரியாத ஆயுதக் குழு ஒன்றினால் படுகொலை செய்யப்பட்டார்.

ரஜனி திரணகம ஆரம்பத்தில் விடுதலைப்புலிகளுடன் நெருக்கமாகச் செயற்பட்டுப் பின்னர் விலகியிருந்தார். 1980களில் வடக்கு- கிழக்கில் செயற்பட்ட தமிழ் ஆயுதக் குழுக்களின் மனிதவுரிமை மீறல்களை இவர் வெளிப்படுத்தியுமிருந்தார். யாழ். நகரில் உள்ள இவருடைய வீடு இந்திய இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டுப் பல ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்டதாக கொழும்பில் இருந்து வெளிவந்த தினமுரசு பத்திரிகையில் அற்புதன் எழுதியிருந்தார்.

ரஜனியின் 'முறிந்த பனை' என்ற நூல் இந்திய இராணுவம், இலங்கை அரசபடைகள், புலிகள் மற்றும் தமிழ் ஆயுதக் குழுக்களின் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் மற்றும் நீதிக்கு மாறான செயற்பாடுகள் பற்றி பகிரங்கமாக எடுத்துரைத்திருந்தது. புலிகளைமாத்திரம் 'முறிந்த பனை' என்ற நூல் விமர்சிக்கவில்லை. இதனால் ரஜனி திரணகமவின் படுகொலைக்கு யார் காரணம் என்பதில் இதுவரை சந்தேகம் நிலவியபோதும், விடுதலைப் புலிகளே இந்தக் கொலையைச் செய்தனர் என்று அவரது குடும்பம் உள்ளிட்ட பலரும் நம்புகின்றனர்.

மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) சங்கம் 1988இல் உருவாக்கப்பட்டது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் என்ற தேசிய அமைப்பின் ஒரு பகுதியாகச் செயற்படுவதே இந்தச் சங்கத்தின் பிரதான நோக்கமாக இருந்தது.

ரஜனி திரணகமவின் மரணத்தின் பின்னர் இந்த அமைப்பு பேராசிரியர்களான ராஜன் கூல், தயா சோமசுந்திரம் மற்றும் கோபாலரட்ணம் சிறிதரன் ஆகியோரால் தொடர்ந்தும் இயக்கப்பட்டது. ஆனால் எங்கிருந்து செயற்படுகிறார்கள் என்று தெரியாமலேயே இந்தச் சங்கத்தின் அறிக்கைகள் அன்று வெளிவந்து கொண்டிருந்தன. 2009ஆம் ஆண்டு மே மாதம் போர் இல்லாதொழிக்கப்பட்ட பின்னரான சூழலில் 2010இல் இந்தச் சங்கம் முடக்கப்பட்டுள்ளதாக தேடலுக்கான இணையத் தளங்களில் தற்போதும் காணப்படுகிறது. 'சிறுபான்மையினரின் எதிர்காலத்துக்கான சில அடிப்படைக் கேள்விகள் மற்றும் ஜனநாயகத்தை அழித்தல்' என்ற தலைப்பில் இந்தச் சங்கம் தனது அதிகாரபூர்வ இணையத்தளத்தில் 2010ஆம் ஆண்டு ஜூன் 11ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கையோடு சங்கத்தின் பணி பற்றிய தகவல்கள் எதுவுமில்லை.

மனித உரிமை செயற்பாட்டாளர் என்ற பெயரில் இயங்கிய கோ.சிறிதரன், ராஜன் ஹூலுடன் யாழ். பல்கலைக்கழகத்தில் இணைந்தபோது மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தை வழி நடத்துவதில் முன்னின்றவர். இருவரின் செயற்பாடுகளும் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் விடுதலை பற்றிய தவறான பார்வைக்கு இட்டுச் சென்றது என்ற விமர்சனங்களே அன்று அதிகமாக எழுந்தன. ஈழத்தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் ஐக்கிய இலங்கைக்குள் நிறைவேற்றப்படலாம் என்ற கருத்தையும் இருவரும் முதன்மைப்படுத்தினர். இந்தச் சங்கம் 1998ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி மனித உரிமை மீறல்கள் பற்றி நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் இலங்கை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலும் நடந்த கொலைகள், அச்சுறுத்தல்கள் மற்றும் ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் பற்றிய அந்த அறிக்கையில்புலிகள்மீதுதான் அதிகளவில் குற்றம்சுமத்தப்பட்டிருந்தது. இதுபோன்று தொடர்ச்சியாக வெளியிடப்பட்ட அறிக்கைகள் சர்வதேச மனித உரிமைகள் நிறுவனங்களால் நல்ல வரவேற்பைப் பெற்றன.

இந்தப் பின்னணியில் 2001ஆம் ஆண்டில் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா, இந்த ஆசிரியர் சங்கம் பற்றிய சாதகமான அதாவது 'இலங்கைத்தீவின் மனித உரிமைப் பாதுகாவலர்கள்' என்ற ஒப்புதல் ஒன்றை வழங்கியிருந்தார். இந்த நிலையில் 2007ஆம் ஆண்டு ராஜன் ஹூல் மற்றும் சிறிதரன், ஆகியோர் மனித உரிமைகள் பாதுகாவலர்களுக்கான மார்ட்டீன் என்னல்ஸ் விருதைப் பெற்றனர். (1993இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த பிரித்தானிய விருது மனித உரிமைப் பாதுகாப்புக்கான நோபல் பரிசு என்றும் அழைக்கப்படுகின்றது.)

ஈழத் தமிழர்களின் அரசியல் விடுதலையை நியாயப்படுத்தி எழுதி வரும் நெதர்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் பீற்றர் ஷாக், மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் முற்றுமுழுதாக விடுதலைப் புலிகளுக்கு எதிரானது என்றும் இலங்கை ஒற்றை ஆட்சி அரசை நியாயப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருவதாகவும் குற்றஞ்சுமத்தியிருந்தார். ரஜனி திரணகமவின் 'முறிந்த பனை மரம்' என்ற நூல் பற்றிக் கருத்துரை எழுதிய அவுஸ்திரேலியாவில் வாழும் சிங்கள மூத்த சட்டத்தரணியான பிரையன் செனவிரட்ன இந்தச் சங்கம் விடுதலைப் புலிகளுக்கு எதிரானதாகவே மாறிவிட்டதாகக் கவலை வெளியிட்டிருந்தார். பேராசிரியர்களான ராஜன்கூல், தயா சோமசுந்திரம் மற்றும் சிறிதரன் ஆகியோர் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசியர் சங்கம் என்ற பெயரில் வெளியிடும் அறிக்கைகள் அனைத்தையும் இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகளுக்கும் தமிழர்களின் அரசியல் விடுதலைக்கு எதிராகவும் பயன்படுத்தி வருவதாகவும் இவர் சுட்டிக்காட்டியிருந்தார். அத்துடன் தமிழ் மக்களுக்கு எதிரான இலங்கை இராணுவத்தின் படுகொலைகளை குறிப்பாக இராணுவத்தின் மனித உரிமை மீறல் செயற்பாடுகளை இந்தச் சங்கம் பாராட்டுவதாக அமைந்துள்ளது எனவும் பிரையன் செனவிரட்ன குற்றம் சுமத்தியிருந்தார்.

### துளிர்விடுகின்றது துரோக அரசியல்

வெறுமனே விடுதலைப் புலிகளை பாசிசவாதிகள் என்று குற்றம் சுமத்துவதாகவும் எந்தக் கோட்பாட்டு அடிப்படையும் இல்லாத 'உணர்வுவாத குணாதிசயங்கள்' என்றும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். எனவே பிரயன் செனவிரட்ன பேராசிரியர் பீற்றர் ஷரக் ஆகியோரின் வாதத்தின்படி புலிகளை பாசிச அமைப்பு என்று கூறுவது அறிவார்ந்த விமர்சனம் அல்ல என்று தெரிகிறது.

குறிப்பாக, ஒருபுறம் மனித உரிமை மீறல் செயற்பாடுகளில் ஈடுபடும் இலங்கை இராணுவத்தையும் அதன் உயர் அதிகாரிகளையும் பாராட்டிக் கொண்டு மறுபுறும் அரசியல் விடுதலைக்காகப் போராடும் புலிகளை பாசிசவாதிகள் என்று கூறுவதும் அறிவார்ந்த விமர்சனம் அல்ல. இந்த நிலையில் கோட்பாட்டு ரீதியான கருத்தியல்களை ஆராயாமல் எடுத்த [illegible] புலிகளை பாசிஸ்ட் என்று பொது வெளியில்கூறுவதற்குப்பின்னால் துரோக அரசியல் மீண்டும் துளிர் விடுவதுபோல் தென்படுகிறது.

யாழ். பல்கலைக்கழகத்தில் இவரை உரையாற்ற அனுமதித்துப் பின்னர் கருத்துரையில் உரிய நியாயங்களை மாணவர்கள் சுட்டிக் காட்டியிருக்கலாம். ஆனால் அது தடுக்கப்பட்டதால் இப்போது அரசியல் விவகாரமாகியுள்ளது. ஆனாலும் புலிகள் பாசிஸ்ட் என்றால் முதலில் பதிலளிக்க வேண்டியவர்கள் ரெலோ, ஈ.பி.ஆர்.எல். எப்., புளொட் போன்ற இயக்கங்கள் தான். தற்போது இவர்கள் ஜனநாயக அரசியலில் ஈடுபட்டு வருகின்றனர். 2001இல் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பின்னர் புளொட் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் 2002இல் வன்னிக்குச் சென்று புலிகளைச் சந்தித்திருந்தன. ஆகவே புலிகள் பாசிஸ்ட்டா? இல்லையா? என்று அவர்கள் தான் முதலில் பொறுப்புக்கூறவேண்டும். ஏனெனில் 1986இல் இடம்பெற்ற சகோதரப் படுகொலைகளுக்குப் பின்னர் முதற்றடவையாக இந்த இயக்கங்கள் விடுதலைப் புலிகளோடு முரண்பாட்டில் உடன்பாடாக 2002ஆம் ஆண்டு பெப்ரவரியில் இருந்து ஒன்றிணைந்து செயற்பட்டு வந்தன. 2009க்குப் பின்னரான சூழலிலும் தமிழ்த்தேசியம் வேறு, புலிகள் வேறு என்று பிரிக்க முடியாத அளவுக்கு தமிழ்த்தேசியக் கொள்கை மக்களிடம் வியாபித்திருக்கிறது. தமிழ்த் தேசிய அரசியலில் புலிகள் பிரிக்க முடியாத 'ஆழப் பதிந்த குறியீடு'.

### புலிகள் மலினப்படுத்தப்படுவதே விமர்சனங்களின் நோக்கம்

1988இல் உருவாக்கப்பட்ட மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், 200க்குப் பின்னரான சூழலில் இலங்கை ஒற்றையாட்சி அரசின் இன ஒடுக்கல் செயற்பாடுகளை வெளிப்படுத்தியிருக்கவேண்டும். ஆனால் 2010இல் தன்னுடைய பணியை நிறுத்திக்கொண்டதன் மூலம் விடுதலைப் புலிகளை மாத்திரம் மலினப்படுத்தும் நோக்கிலும் அதற்காகத் தமிழர்களின் மனித உரிமை விவகாரத்தைக் கையிலெடுத்து அறிக்கைகள் வெளியிட்டிருக்கின்றன என்பதும் இங்கே பட்டவர்த்தனமாகிறது.

ஆகவே கெவின் பாஸ்மோர் கருத்தின் உட்கிடக்கையாக ஓர் இனத்தின் அரசியல் விடுதலையை ஒடுக்குமுறை செய்யும் அரசுகளிடம் மனித உரிமைச் செயற்பாடுகள் என்ற போர்வையில் அடகுவைக்கும் சங்கங்களையும் பாசிஸ்ட்டுகள் என்று வரையறை செய்யலாமா என்ற கேள்வி எழுகின்றது. புலிகள் பாசிஸ்ட்டுகள் என்று கடந்த பதினான்கு வருடங்களின் பின்னர் மீளவும் புதுப்பித்துக்கொண்டு வரும் ஆங்கிலம் தெரிந்த சில தமிழ் மாற்றுக் கருத்தாளர்கள், 2010இல் நிறுத்தப்பட்ட மனித உரிமைகளுக்கான யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் நீட்சியாக வேறொரு தளத்தில் வருகிறார்களா அல்லது வேறு ஏதேனும் அரசியல் பின்புலம் உள்ளதா என்பதை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமானது. சுவஸ்திகாவின் உரை தடுக்கப்பட்டதால் யாழ். பல்கலைக்கழக ஆசியர் சங்கம் கண்டித்து வெளியிட்ட அறிக்கைக்கு எதிராக மாணவர்கள் வியாழக்கிழமை நடத்திய போராட்டம் சுமுகமாக முடிவுற்றுள்ளது. அறிக்கை வாபஸ் பெறப்பட்டுப் 'புலிகள் பாசிஸ்ட்' என சுவஸ்திகா கூறிய கருத்தை ஏற்க முடியாதெனவும் சங்கம் மீள வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது.

ஆகவே தனிப்பட்ட நபர்களின் கருத்துச் சுதந்திரத்தில் மாத்திரம் கவனம் எடுக்காமல் பல்கலைக்கழகத்துக்குள் இடம்பெறும் வேறு சில மறுப்பு அல்லது தேவையற்ற இராணுவ விசாரணை விவகாரங்களிலும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் கவனம் எடுத்திருந்தால் இந்த அறிக்கை வாபஸ்பெறும் நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதைச் சங்கம் புரிந்துகொள்ள வேண்டும். அதேநேரம் மாணவர்களும் உணர்வு ரீதியாக மாத்திரமல்லாது அறிவுபூர்வமாகவும் செயற்பட வேண்டும் என்பதற்கும் இது நல்ல எடுத்துக்காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழைமையின் தோள்களில் நின்று புதுமையை வரவேற்கவேண்டும். காலத்திற்கேற்ப பொருத்த மற்றவற்றை நீக்கிப் பொருத்தமானவற்றைக் கைக்கொள்ள வேண்டும். இலக்கியத்துக்கும் இது பொருந்தும். எந்த மாற்றம் வந்தாலும் சமூகப்பயன்பாடும், உண்மையின் நிதர்சனமும், சாதுரியமான கதைசொல்லலும், மானிட நேயமும் விரவிய இலக்கியப் படைப்புகளே காலத்தை வென்று வாழக்கூடியவை

# மரபில் திளைத்தபின்னரே புதுக்கவிதை படையுங்கள்

## அறிவுறுத்துகின்றார் இலக்கிப் பேராளுமை கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு

**கலாநிதி செல்லையா திருநாவுக்கரசு** பன்முகத் திறமைகள் கொண்ட ஒரு தவிர்க்க முடியாத ஆளுமை. தீவகத்தின் அல்லைப்பிட்டிக் கிராமத்தில் 1950ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 24ஆம் திகதி செல்லையாஇலட்சுமி மகனாகப் பிறந்தவர். ஓர் ஆசிரியராக இருந்த அவர் தற்போது இலக்கியவாதியாக மிளிர்ந்து கொண்டிருக்கின்றார். எழுத்துத் துறையில் பெயர்சொல்லும் விதமாக - நேர்த்தியான முறையில் அவருடைய படைப்புகள் அமைந்துள்ளன. அவருடனான நேர்காணலிது.

நேர்கண்டவர்:
வெற்றிவேல் சக்திவேல்

**கே: எழுத்துத் துறையில் உங்களுடைய முயற்சிகள், இலக்கியப் பயணத்தின் தொடக்கம், மற்றும் இந்தத் துறையில் நீங்கள் சந்தித்த சவால்கள் தொடர்பில் கூறமுடியுமா?**

எனது பத்து வயதிலிருந்தே வாசிப்பு மீது அதீத ஆர்வம் இருந்தது. உறவினர்கள் வாங்கும் இந்திய, இலங்கை ஏடுகளை விரும்பிப் படிப்பேன். இளைஞனாய் இருந்த காலத்தில், அயலவரும் உறவினருமான கவிஞர் அல்லை க.வ.ஆறுமுகம், நல்ல நூல்களின் வழி என்னை ஆற்றுப்படுத்தினார். முதன்முதலில் 1972ஆம் ஆண்டு 'சுதந்திரன்' இதழில் எனது கவிதை வெளிவந்தது. கவிஞர் காசி ஆனந்தனை மன்னாரில் வைத்து படையினர் கைதுசெய்து சிறையில் அடைத்தமை பற்றிய கவிதையது. இளமைத்துடிப்பும் இனவுணர்வும் சேர அந்தக் கவிதையை எழுதியனுப்பினேன்.

'படையினை ஏவியே பைந்தமிழ்க் கவிஞனைச் சிறையினுக் கனுப்புதல் நலனோ?தூய
பௌர்ணமி நிலவினில் பகவான் புத்தனும் பாரினுக் கருளிய பலனோ?' என்றவாறாக அக்கவிதையின் சிலவரிகள் அமைந்தன. இந்த முயற்சியின் பின்னர் நிறையக் கவிதைகள், நாடகங்கள், நாட்டிய நாடகங்கள், கட்டுரைகள் போன்றவற்றை எழுத முடிந்தது.

மற்றவர்களுக்காகப் பலவற்றை எழுதிக் கொடுத்துள்ளேன். தேவைப்பட்டபோது சிறப்புமலர்களில் கட்டுரைகள் எழுதினேன். ஆசிரிய சேவையில் இணைந்த பின் மாணவர்களுக்காக நிறைய எழுதவேண்டியிருந்தது. நான் வீட்டிலிருந்து சுயமாகவே படித்து க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் கலைத்துறைக்குத் தோற்றிச் சித்தி பெற்றேன். அதனையடுத்து வெளிவாரியாகச் சுயமாகக் கற்றுப் பேராதனைப் பல்கலைக்கழக இளங்கலைமாணிப் பரீட்சையில் சித்திபெற்றேன். 1985ஆம் ஆண்டு வவுனியா பனிக்கர் மகிழங்குளம் பாடசாலையில் ஆசிரியராகப் பொறுப்பேற்றேன். போர்க்காலத்தில் பலநூறு மாணவர்களை உருவாக்கியுள்ளேன்.

'மதுராதகனம்' என்ற நாட்டிய நாடகத்தை நான் எழுதி இசையாசிரியை மூலம் பழக்குவித்து நாடகப் போட்டிக்கு அனுப்பி, மாவட்டரீதியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டோம். ஐந்தரை ஆண்டுகளின் பின் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஆசிரியரானேன். இந்துக் கல்லூரி மாணவர்கள் இலக்கிய அமைப்பொன்றை உருவாக்கி 'அறிவாயுதம்' என்ற சஞ்சிகையைச் சில இதழ்கள் வெளிக் கொண்டு வந்தனர்.

**கே: ஓர் இலக்கியவாதியாக, முதுகலைமாணிப் பயணத்தில் நீங்கள் பலநூறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளீர்கள் என்பதை அறிவோம். அதை விவரிக்க முடியுமா?**

ஆம், முதுகலைமாணிக்கான பயணத்தில், தேடலில், ஆவணப்படுத்தலில் நான் எதிர்கொண்ட நெருக்கடிகள் சொல்லி மாளாதது. 1990ஆம் ஆண்டு தீவகத்தில் ஏற்பட்ட படையெடுப்பு எங்களை நிராதரவாக்கியது. காலங்காலமாக நான் தேடி வைத்திருந்த பத்தாயிரம் நூல்களும் ஏடுகளும் அழிக்கப்பட்டன. உடைந்தே போனேன். பல தடவைகள் இடம்பெயர வேண்டியேற்பட்டது. பல இடங்களில் வாழவேண்டியேற்பட்டது. எனது முதுகலைமாணி ஆய்வுக்கட்டுரைகள் அழிக்கப்பட்டன. 1991இன் பிற்பகுதியில் மீண்டும் ஊரைவிட்டு வெளியேறும் நிலையேற்பட்டது. இத்தனையையும் தாண்டித்தான் நான் முதுகலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டேன்.

எனது முதுகலைமாணிப்பட்ட ஆய்வானது பேராசிரியர் அ.சண்முகதாஸின் மேற்பார்வையில் 'ஈழத்தமிழ் இலக்கியத்தில், தேசிய இனங்களுக்கிடையிலான பிரதிபலிப்பு' என்ற தலைப்பிலானது. 'டானியலின்' எழுத்துகள் என்ற தலைப்பில் பேராசிரியர் அ.சண்முகதாஸின் மேற்பார்வையில் ஆய்வுசெய்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 'கலாநிதி' பட்டத்தையும் பெற்றுக்கொண்டேன். இந்த ஆய்வுக்கு பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுப்பரிசு கிடைத்தது. இது நூலாக வெளிவந்து வடகிழக்கு மாகாணச் சாகித்யப் பரிசையும், இலங்கை இலக்கிய பேரவையின் பரிசையும் பெற்றுக் கொண்டது.

**கே: படைப்புலகில் (இலக்கியம்) நீங்கள் மேற்கொண்ட இலக்கிய முயற்சிகள் தொடர்பில் கூறமுடியுமா?**

பல்கலைக்கழக கலைமாணி, முதுகலைமாணிப் பட்டங்களுக்காக நான் பயின்று கொண்டிருந்தபோது நான் எழுதிய பல்துறைப்பட்ட கட்டுரைகள், கவிதைகள் என்பன அவ்வப்போது வெளிவந்து கொண்டிருந்தன. பாடசாலைகளின் சிறப்பு மலர்களுக்குள் கட்டுரைகள் வழங்கியுள்ளேன். எனது அரசியல், கல்வி, சமயம், சமூகம், சினிமா சார்ந்த கட்டுரைகளின் தொகுதியாக எண்ணங்களும் வண்ணாங்களும், எண்ணல்களும் எழுத்துக்களும் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. மனப்பூக்கள் என்ற கவிதைத்தொகுதி 2018இல் வெளியானது.

எண்ணங்களும் வண்ணங்களும் நூலுக்கு வடமாகாணப் பண்பாட்டு அமைச்சின் விருதும், இலங்கை இலக்கியப் பேரவை விருதும் கிடைத்தது 'எண்ணல்களும் எழுத்துக்களும்' நூலுக்கு எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் தமிழியல் விருது கிடைத்தது. 2018இல் சென்னையில் வெளியிடப்பட்ட ஆய்வு நூல் 'உருமலை தந்த கவிமலை' ஆகும். இது தோழமை பதிப்பக வெளியீடு. எனது உறவினரும் ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் உதவியாசிரியருமான திரு.எஸ்.கே.காசிலிங்கம் இதன் வெளியீட்டை இரு நூலாக நிறுவனங்களின் உதவியுடன் நடத்தியிருந்தார். இந்த நூல் 700க்கும் மேற்பட்ட பக்கங்களைக் கொண்ட ஆய்வு. எனது 40 ஆண்டு கால உழைப்பு.

அத்துடன், சுமார் ஆயிரத்து 200 பக்கங்களிலான 'தமிழ் வளர்த்த தீவகச் சான்றோர்கள்' என்னும் எனது இலக்கியப்படைப்பு சுவிஸ், பிரான்ஸ், இங்கிலாந்து நாடுகளில் வெளியிடப்பட்டது. இலங்கை அரசின் சாகித்ய விருதை 2021ஆம் ஆண்டுக்காகப் பெற்றுக்கொண்டது. இதுவரை எனது ஒன்பது பாடநூல்கள் வெளியாகியுள்ளன. தமிழ்ச் செய்யுள்களின் தொகுப்பு (1995), க.பொ.த. உயர்தரம் தமிழ் (2009), தமிழ் இலக்கியத் தொகுப்பு 1011 (2015), க.பொ.த. உயர்தரம் தமிழ் 12 (2017), க.பொ.த. உயர்தரம் தமிழ் 13 (2018) தமிழ்9(2018) வரலாறு 10(2018) சைவநெறி 10 (2015) கல்வியியற் கோட்பாடுகள் (2015) (கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கத்துடன் இணைந்து எழுதியது) ஆகிய நூல்களே இவையாகும். இதுவரை 23 நூல்கள் எனது படைப்புகளாக வெளியாகியுள்ளன.

**கே: உங்களை வழிப்படுத்திய ஆசிரியர்கள் தொடர்பில்....?**


ஊர்பற்றி தலைமையாசிரியர் க.சோமசுந்தரம், திருமதி பு.சோமசுந்தரேசன், திருமதி பொ.ஆச்சிமுத்து, கவிஞர் தில்லைச்சிவன் பண்டிதர் பொ.ஜகநாதன், பொ.தியாகராசா போன்றவர்கள் என்னை அறிவூட்டி வளர்த்தெடுத்தவர்கள். வேலணை மத்தியகல்லூரியில் தமிழாசானான பண்டிதர் க.இராசையா, அம்பிகாபதி கந்தையா, பொ.கேதாரநாதன், திருமதி தி.கேதாரநாதன்,

08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டாம் பூச்சி

பா.பாலாஜினி, பளை



| | |
|---|---|
| பெயர் | லீனா |
| பிறந்த திகதி | 1996.04.14 |
| பிறந்த நேரம் | காலை09.33 |
| வயது | 27 |
| உயரம் | 5அடி 6அங்குலம் |
| நிறம் | மாநிறம் |
| தகுதி | விஞ்ஞானப் பட்டதாரி |

லீனா சேலை கட்டினாள். பொட்டு வைத்தாள். கூந்தலில் பூ வைத்துக் கொண்டாள். காற்சலங்கைகளை மீண்டும் ஒரு முறை சரிபார்த்துக் கொண்டாள். கண்ணாடி பார்த்து விட்டு திரும்புகையில் ஜன்னலோரமாக ஒரு பட்டாம்பூச்சி க. சிறிய சிறகுகளை விரித்தபடியே பறந்து கொண்டிருந்தது.

சஞ்சீவி சிறுகதை

சோதிடரைப் பார்த்து வினயமாக சொல்லிக் கொண்டிருந்தாள் பாமா. "இஞ்ச பாருங்கோ ஒண்டும் சரிவரேல சரிவரேல எண்டு சொல்லாமல் கொஞ்சம் வடிவா தேடுங்கோவன். உங்களிட்ட தானே நிறைய பேரோட சாதகம் எல்லாம் வாறதா சொல்லுது சனம்".

பாமா சொன்னதைக் கேட்டு கொடுப்புக்குள் சிரித்துக் கொண்ட சோதிடர் கனகசபை, "இஞ்ச பாரம்மா நானென்ன உன்ர பெட்டையின்ரயை சும்மா வைச்சுக் கொண்டிருக்கிறனே? டொக்டர் மாப்பிளை கிடைக்கிறதெண்டால் லேசுப்பட்ட வேலையில்லை" என்றார் இழுத்தபடியே.

"என்ன வேலையெண்டாலும் பரவாயில்லை இனி காலம் போகுது . டொக்டர் மாப்பிளைக்கு அவளுக்கு பலனில லைப் போல கிடக்கு. நீங்கள் என்ன வேலையெண்டாலும் பாருங்கோண்ண" சலித்துக் கொண்டாள் பாமா.

"கொஞ்ச சாதகங்கள் கிடக்குத்தான் ஒருக்கா அதுகளை பொருத்திப் பாப்பம். வெளியூர் மாப்பிள்ளை எண்டாலும் சரி தானே பிள்ளைக்கு?" கனகசபை கேட்டார்.

"வெளியூரெண்டா எதைச் சொல்லுறீங்கள்? வெளிநாட்டை தானே? ஏன் அண்ண பிள்ளைக்கு வெளிநாட்டு யோகம் இருக்கோ எண்டு ஒருக்கா பாத்து சொல்லுங்கோவன். " பாமாவின் கெஞ்சலை மறுக்க முடியாது தனது பழைய காலக் கண்ணாடியை எடுத்து மாட்டிக் கொண்டு லீனாவின் வாழ்க்கை முழுவதையும் சிறைப்படுத்திக் கொண்டிருந்த அந்த சதுரப் பெட்டிகளில் ஏதோ கணக்குகளை போட்டுக் கொண்டே சில நிமிடங்களை கழித்தார் கனகசபை. "பிள்ளை பாமா, உன்ர மோள் அதிர்ஷ்டக்காரியடி. வெளிநாட்டு யோகம் தாண்டி அவளுக்கு. நீ யோசிக்காதை நான் அவளுக்கு வெளிநாட்டுச் சம்பந்தம் ஒண்டு பிடிச்சுத் தாறன்" என்று மகிழ்ச்சியடையச் செய்தார்.

கனகசபைக்கும் ஆசை தான் பாமாவின் மகளுக்கு நல்ல ஒரு வரன் பார்த்து கொடுக்க வேண்டுமென்று. டொக்டர் மாப்பிள்ளை சம்பந்தம் எல்லாமே வருவதும் போவதுமாக இருக்கிறதே தவிர ஒன்றும் சரிவருவதாகத் தெரியவில்லை. கனகசபைக்கும் இந்த விடயத்தில் லேசாக அலுப்புத் தட்டியிருந்தது தான். ஆனால் என்ன. வேலையாக இருந்தாலும் ,வெளியூரெண்டாலும் சம்மதம் தான் என்று பாமா சொன்ன பிறகு சற்று ஆர்வம் ஏற்பட்டிருக்கின்றது. ஏற்கனவே உள்ள வேறு ஜாதகங்களுடன் பொருத்திப் பார்க்கலாமே என்ற ஆதங்கம் தான்.

கனகசபையோ.பாமாவோ ஆதங்கப்பட்டுக் கொள்ளுமளவுக்கு லீனா ஒன்றும் குறைந்தவளில்லை. லக்கினத்தில் சுக்கிரன் உச்சமாகி அமர்ந்து அசுப கிரகங்களின் பார்வை தொடர்பு எதுவுமே இல்லாமல் இருப்பதனால் அவள் அழகானவள் தான். பார்ப்பவரை எல்லாம் பளிச்சென்று சுண்டியிழுக்கும் ஒருவிதமான கவர்ச்சி எப்போதுமே அவளிடம் குடிகொண்டிருக்கும். அகன்ற நெற்றி , உயர்ந்து பின் தாழ்ந்து நிற்கும் புருவங்கள், கருஅடர் நிற இமைகள் அதனுள்ளே உருண்டு விளையாடும் இரு வெண்முத்துக்கள், நாசிக்குக் கீழே மலர்ந்து கிடக்கும் இரு இதழ்கள். அதில் எப்போதுமே நர்த்தனமாடும் ஒற்றைப் புன்னகை. கழுத்துக்கு கீழே....... வேண்டாம் என் கதைக்கு இவ்வளவும் போதும். மிகுதியை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்.

கிரக பலனோ அல்லது அவளது சுபாவமோ தெரியவில்லை. வரன் சரியாகி வந்தால் லீனா வேண்டாமென்பதும் லீனா சம்மதித்தால் வரன்கள் விலகிப் போவதுமாக மாறி மாறி குழம்பிக் கொண்டேயிருக்கின்றன.

லீனாவுக்கு பூக்களைப் பிடிக்கும். மரங்கள் சேமித்து வைத்திருக்கும் இலைகளைப் பிடிக்கும். மழைபொழிகையில் வரும் மண்வாசம் பிடிக்கும். மனிதர்களை விடவும் மிருகங்களுடனும் பறவைகளுடனும் பேசப் பிடிக்கும். அமானுஷ்யங்களைப் பிடிக்கும். எல்லாவற்றுக்கும் மேலாக சுஜாதாவின் எழுத்துக்களைப் பிடிக்கும். அவரின் எழுத்துக்கள் மேல் அத்தனை பற்றுதல் அவளுக்கு.

எப்போதும் போலவே லீனா இன்றைக்கும் அழகாகத் தான் இருந்தாள். ஆனால் கொஞ்சம் பரபரப்பாக இருந்தாள். விரித்து வைத்திருந்த புத்தகமொன்றின் சில வரிகளை மட்டுமே மீண்டும் மீண்டும் படித்துப் பார்த்த அவள் சில நிமிட இமை மூடல்களின் பின்னர் வீட்டை விட்டு சற்றுத் தொலைவிலமைந்திருந்த மரங்களடர்ந்த காட்டுப் பக்கமாக நடக்கத் தொடங்கியிருந்தாள். லீனா வெளியில் செல்வதைக்கண்டு பின்னாலே ஓடி வந்த அவள் தம்பி "அக்கா எங்க போறாய் பூச்சி பிடிக்கவோ?" என சத்தமாகக் கேட்டான். "ஓமடா போறதும் வாறதுமாக வந்து விடுகிறேன்" என்றவாறே நடக்கத் தொடங்கியிருந்தாள் அவள். உண்மையில் அவள் செல்வது பூச்சி பிடிக்க அல்ல. பூச்சிகளை பிடித்து ஆய்வு செய்யும் பழக்கமும் அவளிடம் இருக்கத்தான் செய்தது. ஆனால் இன்றைக்கு அவள் புதுவிதமான பரிசோதனை ஒன்றை செய்வதற்காகச் செல்கிறாள். கடந்த சில நாட்களாகவே மாலை வேளையில் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் இந்தப்பகுதியில் ஒருவித மர்மமான இரைச்சல் சத்தத்துடன் ஏதோ ஒன்று செல்வதாக அவள் உணர்ந்திருக்கின்றாள். அந்தச் சத்தம் தரைக்கும் வானத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் இருந்து தான் வருகின்றது. ஆனால் லீனா ஒருபோதும் அதைப் பார்த்ததேயில்லை. சில நேரங்களில் அது பறவையாகவோ அல்லது ஏதேனும் மிருகமாகவோ கூட இருக்கலாம். அதனால் ஆபத்து கூட ஏற்படலாம். ஆனால் அதை பார்த்துவிட வேண்டுமென்ற ஆவலை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

வழமையான அதே இடம், அதே நேரம், மாலை4மணி 55 நிமிடம். லீனா தான் எடுத்துச் சென்ற கமராவை சரிசெய்து தயாராக வைத்திருந்தாள். நாலாபுறமும் வேகமாகச் சுற்றிப் பார்த்தாள். மரக்கிளை ஒன்றின் மறைவில் தன்னை மறைத்துக் கொண்டாள். சில நொடிகளின் பின் அந்த இரைச்சல் சத்தம் கேட்கத் தொடங்கியது. சத்தம் வந்த திசையில் லீனா துல்லியமாக கமராவை திருப்பிக் கொண்டாள். அவள் உடல் பயத்தில் சில்லிட்டுக் கொண்டது. நாசிக்கு கீழே அமைந்திருந்த அந்த இரு இதழ்களும் பயத்தில் உலர்ந்துவிட்டிருந்தன. மோசமான பார்ப்பதற்கே அருவருப்பான உருவமொன்று இரைச்சலுடன் வந்தது. சுற்றும் முற்றும் எதையோ தேடிய அது பின்னர் உரத்துச் சிரித்தது. மூச்சுக் கூட விட மறந்து லீனா உறைந்து போயிருந்தாள். எப்படி அந்த உருவம் மறைந்தது. தான் எப்படி வீடு வந்து சேர்ந்தேன் என்றே ஞாபகமில்லாத அளவுக்கு ஒரே ஓட்டமாக வந்து சேர்ந்திருந்தாள். இரவு முழுவதும் தூக்கமேயில்லை. தனது கமராவில் பதிவாகியிருந்த அந்த நிகழ்வையே மீண்டும் மீண்டும் பார்த்துக் கொண்டிருந்தாள். சந்தேகமேயில்லை. கதையில் படித்தது போல இரசாயக் கழிவுகளில் இருந்து தோன்றிய மனிதனாக தான் இருக்க வேண்டும். அதனால் தான் அவன் நடந்து வருகையில் அப்படியொரு இரைச்சல் சத்தம் கேட்டிருக்கின்றது. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் இரசாயனக் கழிவுகளில் இருந்து கூர்ப்பின் வழி இரசாயன மனிதர்கள் தோன்றுவார்கள் என்றும் அவர்களால் பூமி மிகப்பெரும் ஆபத்தினை எதிர்கொள்ளுமென்றும் அவள் படித்திருக்கின்றாள். இரவு முழுவதும் இப்படியான சிந்தனைகளிலேயே கழித்து விட்டிருந்தாள்.

இரவு விடிந்திருந்தது. பாமா உற்சாகமாக தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள். "ஓமண்ணை. ஓமண்ணை வெளிநாட்டுக்கு போக ஓமெண்டும் பிள்ளை. கேக்கிறனெண்டு குறை நினைக்காதேங்கோ அண்ணை. இரண்டு பேருக்கும் வசியப் பொருத்தம் இருக்குத் தானே?" வினயமாக கேட்டாள். மறுபக்கத்தில் கனகசபையின் பதிலால் திருப்தியடைந்த பாமா, "எனக்கு உங்களில நல்ல நம்பிக்கையண்ணை. நீங்கள் வடிவா பாத்திருப்பீங்கள்

நீங்கள் அவைக்கு சரி எண்டு சொல்லி விடுங்கோ .எப்ப எண்டாலும் பிள்ளையை பாக்க வரட்டும் அவை. அவளுக்கென்னண்ண குறை" சிரிப்புடன் சொல்லிக் கொண்டிருந்தாள்.

லீனா மாலை 4மணி 55 நிமிடத்துக்காக காத்துக் கொண்டிருந்தாள். கமராவையும் தன்னுடன் பத்திரப்படுத்திக் கொண்டாள். "பிள்ளை. இனி கண்டபடி வெளியில போகாதயடி .அவங்கள் எப்ப எண்டாலும் வரலாம். நீ அங்க இங்க எண்டு திரியிறது நல்லா இல்லை" என்ற பாமாவின் மன்றாட்டையும் மீறி "அம்மா, ஆய்வு செய்யிறதுக்கும் அதுக்கும் என்னம்மா சம்பந்தம் ?"என்றவாறே காட்டுப் பக்கமாக சென்றுவிட்டிருந்தாள். லேசாக மழை வேறு தூற ஆரம்பித்திருந்தது. அடர்ந்த காட்டுப் பகுதி இன்னும் சற்று அதிகமாகவே இருள் அப்பியிருந்தது.

(08 ஆம் பக்கத் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்



கு. ஆத்மிகா,
தரம் -6
யா/ புனித தெரேசாள் கல்லூரி



ம.நிதேஷ்
தரம் 5A
யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்.



பி.சஞ்ஜேய்,
தரம் -2
யா/ கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை.



அபிசா
தரம் - 4
மு/பாண்டியன்குளம் ஆரம்ப பாடசாலை

## நெல்சன் மண்டேலா



தென்னாபிரிக்க தந்தை என்றழைக்கப்படும் காலஞ் சென்ற நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கையின் முக்கிய சம்பவங்கள்.

சிறுபான்மை வெள்ளையினத்தினரின் ஆட்சிக்கு எதிராக நீண்டகாலப் போராட்டத்துக்குப் பின்னர், தென்னாபிரிக்காவின் முதல் கறுப்பின அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் நெல்சன் மண்டேலா.

இளம்பருவத்தில், நெல்சன் மண்டேலாவுக்கு குத்துச் சண்டையில் ஆர்வமிருந்தது. " குத்துச்சண்டை ஒரு சமத்துவமான விளையாட்டு. குத்துசண்டை நடக்கும் மேடையில், மனிதர்களின் தரம், வயது, நிறம் மற்றும் அவர்களின் பணம் இவைகளெல்லாம் ஒரு பொருட்டே இல்லை, என்று அவர் தனது சுய சரிதையான 'சுதந்திரத்தை நோக்கிய நீண்ட நடைபயணம்' ( லாங் வாக் டு ப்ரீடம்) என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார். உலகளாவிய ஒரு பிரச்சார இயக்கத்தின் முகமாக நெல்சன் மண்டேலா மாறினார்.

1990ல், சுமார் இருபது ஆண்டுகள் சிறையில் கழித்த பின்னர் நெல்சன் மண்டேலா விடுதலையானார்.

உலகின் மிகவும் விரும்பப்பட்ட தலைவராக மட்டுமல்லாமல், அவர் ஒரு நாகரீக உடைகள் அணிவதிலும் நாட்டமுடையவராக அறியப்பட்டார். அவர் அணிந்து கொண்ட பளிச்சென்று தெரியும் நிறத்திலான சட்டைகள் பிரசித்தம். மற்ற தலைவர்களிடம் இல்லாத இரு குணங்கள் அவரிடம் இருந்தன. பணிவு மற்றும் தன்னைத் தானே பார்த்து தன்னிடம் இருக்கும் குறைகளைப் பற்றி கிண்டலடித்துக்கொள்வது.

## ஒத்தகருத்து சொற்கள்



அன்பு- நேயம்
அச்சம்- பயம்
அருவி - ஆறு
அற்புதம்- புதுமை
அடவி- காடு
அழகு- எழில்
அவனி- பூமி
அறம்- தருமம்
இறப்பு- மரணம்
ஒளி- வெளிச்சம்
ஒலி - சத்தம்
கர்வம்- ஆணவம்
கீர்த்தி- புகழ்

## ஐவகை நிலங்கள்

மலையும் மலை சார்ந்த இடமும்
**குறிஞ்சி**
காடும் காடு சார்ந்த இடமும்
**முல்லை**
வயலும் வயல் சார்ந்த இடமும்
**மருதம்**
கடலும் கடல் சார்ந்த இடமும்
**நெய்தல்**
மணலும் மணல் சார்ந்த இடமும்
**பாலை**

## நேர்மை



வியாபாரி ஒருவன் ஒட்டகம் வாங்க சந்தைக்குப் போனான். ஒட்டக வியாபாரியிடம் பேரம் பேசி ஒட்டகத்தை வாங்கினான். வீட்டுக்கு வந்ததும் தன் வேலையாளை அழைத்து ஒட்டகத்தைக் கொட்டிலில் அடைக்கச் சொன்னான். அதற்கு முன்பாக ஒட்டகத்தின் மேலிருந்த சேணத்தை அவிழ்க்க முயன்றான். அவனால் முடியவில்லை. வேலையாளை அழைத்து சேணத்தை அவிழ்க்கச் சொன்னான். ஒட்டகத்தின் மீதிருந்த சேணத்தை அவிழ்த்த வேலையாள், "பொத்' என ஏதோ கீழே விழுவதைக் கண்டு எடுத்துப் பார்த்தான். அது ஒரு சிறிய பொக்கிஷப் பை. பிரித்தான். வியப்பில் அவன் கண்கள் விரிந்தன. நவரத்தினக் கற்கள் தகதகவென மின்னின. அதை முதலாளியிடம் காண்பித்தான்.

உடனே வியாபாரி, "அந்தப் பையை இப்படிக் கொடு. உடனே அந்த ஒட்டக வியாபாரியிடம் கொடுக்கணும்" என்று சொல்லிப் புறப்பட்டான். பணியாளோ, "ஐயா இது யாருக்கும் தெரியப் போவதில்லை. இது இறைவனின் பரிசு. நீங்களே வைத்துக் கொண்டால் என்ன?" என்றான்.

வியாபாரி அவன் சொன்னதைக் கேட்காமல் புறப்பட்டுப் போனான்.

ஒட்டக வியாபாரியிடம் நடந்ததைச் சொல்லி அந்தப் பொக்கிஷப் பையைக் கொடுத்ததும் நன்றியோடு வாங்கிக் கொண்டவன், அதை வியாபாரியிடம் கொடுத்து, "உங்கள் நேர்மையை நான் மெய்ச்சுகிறேன். தங்களுக்கு ஏதேனும் பரிசளிக்க விரும்புகிறேன். இதிலிருந்து உங்களுக்குப் பிடித்தமான கற்கள் சிலவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று நீட்டினான்.


அதற்கு அந்த வியாபாரியோ சிரித்துக்கொண்டே, "உங்களிடம் இந்தப் பொக்கிஷத்தைத் தரும் முன்பே இரண்டு விலையுயர்ந்த ரத்தினங்களை நான் எடுத்து வைத்துக் கொண்டேன்" என்றான்.

உடனே ஒட்டக வியாபாரியோ கற்களை எண்ணிப் பார்த்தான். எதுவுமே குறையவில்லை. சரியாக இருந்தது கண்டு குழம்பினான்.


உடனே அந்த வியாபாரி, "நான் சொன்ன இரண்டு ரத்தினங்கள்... எனது நேர்மை, எனது சுயமரியாதை" என்றான் கம்பீரமாக.

நேர்மையாளனாக வாழ்வது பெரிய விஷயமல்ல. தவறு செய்யக்கூடிய சந்தர்ப்பமும், வாய்ப்பும் கிடைத்தாலும் அப்போதும் நேர்மையாக வாழ வேண்டும்.

## வழிகாட்டுவோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 2024 பட்ஜெட்டின் சோகக் கதையாக சம்பள உயர்வு!

○ குருமன்காட்டாள் வன்னிகா

அரச ஊழியர்கள் குறைந்தபட்சம் இருபதாயிரம் சம்பள உயர்வை கோரும் நிலையில், அடுத்த ஆண்டுக்கான (2024) வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் எவ்வளவு சம்பளம் உயர்த்தப்படலாம் என்பது தொடர்பான விகிதங்களைத் தீர்மானிப்பதற்கான "விரிவான பகுப்பாய்வு" நிதி அமைச்சினால் தற்போது மேற்கொள்ளப்படுகிறது. இதனை நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய கொழும்பில் உறுதிப்படுத்தியுள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இம்மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், தற்போதைய பொருளாதாரச் சூழலைக் கருத்தில் கொண்டு அரசாங்க மற்றும் தனியார் துறை ஊழியர்கள் தங்களது சம்பளத்தைக் குறைந்தபட்சம் இருபதினாயிரத்தால் அதிகரிக்க கோருகின்றனர்.

அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதியும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க தெளிவாக கூறியுள்ளாரென நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அதன்படி, சம்பள உயர்வு நிச்சயம் நடைபெறும் என்றும் ஆனால் அதற்கான அளவுகளை நிர்ணயம் செய்வதற்கான 'விரிவான அலசல்' தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் கூறினார்.

"நம் நாட்டில் 1.4 மில்லியன் அரசு ஊழியர்களும், 600,000 ஓய்வூதியதாரர்களும் உள்ளனர். அவர்களின் சம்பளத்தை 100 ரூபா உயர்த்தினாலும் கூட, அரசுக்கு ஆகும் செலவு மிக அதிகம். எனவே இதை எப்படிச் செய்வது என்பது குறித்து தீவிர அலசல் செய்ய வேண்டும். ஆயினும், நாம் அனைவரும் கடந்த காலத்தில் இருந்த கடினமான சூழ்நிலையில், அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள் மிகவும் முற்போக்கானவை. தனியார் துறை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு தனியார் துறையிடம் கோரிக்கை விடுக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளார். ஜனாதிபதி விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்துக்கு அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. ஒவ்வொரு அமைச்சுக்குமான செலவினத் திட்டங்களை வகுத்துள்ள ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை முன்வைப்பது 2024ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தை முன்வைப்ப தற்கான முதல் கட்டமாகும். அரச ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்புக்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க அண்மையில் உறுதியளித்தார்.

2024ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான விவாதத்தை 26 நாட்கள் நடத்துவதற்கு நாடாளுமன்ற அலுவல்கள் குழு தீர்மானித்துள்ளது. இதன்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13 ஆம் திகதி திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் நவம்பர் 14ஆம் திகதி தொடங்கி நவம்பர் 21ஆம் திகதி வரை ஏழு நாட்களுக்கு நடத்தப்படும். அதன்பின், நவம்பர் 22 ஆம் திகதி தொடங்கி டிசெம்பர் 13 ஆம் திக வரை 19 நாட்களுக்கு ஒத்திவைப்பு விவாதம் நடைபெறும்.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு டிசம்பர் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளதுடன் அன்றைய தினம் மாலை 06.00 மணிக்கு இறுதி வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

2022 இல் அரசாங்கத்தின் வரி மற்றும் வரியல்லா வருமானம் 1979 பில்லியன் ரூபவாகும். அதில் அபிவிருத்தி மற்றும் மூலதனச்செலவுகள் மாத்திரம் 4472 பில்லியன் ரூபாவாகும். வருமானத்துக்கும் செலவு க்குமிடையில் தாங்கமுடியாத இடைவெளி (துண்டுவிழும் தொகை) உள்ளது. இதற்காக 2493 பில்லியன் ரூபா கடனாகப் பெறப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதாயின் வரிகளை அதிகரித்து அதற்கான நிதியைத் திரட்டுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். ஆயினும் மீண்டும் அரச ஊழியர்கள் உள்ளிட்ட மக்கள் மீதே இந்த வரிச் சுமை விழும். அதாவது அரச ஊழியர்களைப் பொறுத்தவரை எதிர்பார்க்கப்படும் சம்பள அதிகரிப்பு என்பது இடது தோளின் சுமையை வலது தோளுக்கு மாற்றுவதாகத்தானிருக்கும்.

அடுத்த ஆண்டு இலங்கையில் ஏதாவது ஒரு தேர்தலாவது நடக்கும். அதற்கான வாக்கு வங்கியைச் செப்பனிடும் நோக்கமும் இந்த பட்ஜெட்டுக்கு மறைமுகமாகவுள்ளது.



# ஊர்ப்புதினம்

13

○ இராகவன்



பாகம் 2

ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரருக்கு பின் மண்டையிலயும் இரண்டு கண்ணிருக்கு எண்டு நான் போனகிழமை சொல்லியிருந்தனான். அதுக்கு ஒரு முக்கியமான காரணமிருக்கு. அதென்னவெண்டால் அவர் வகுப்புக்குள்ள வந்ததுமே கடந்த வகுப்பில என்ன படிப்பிச்சதெண்டு முன்வரிசையிலயிருக்கிற ஓராளின்ர நோட்ஸ் கொப்பியை வாங்கிப் பாத்திட்டுத் தொடர்ந்து படிப்பிப்பார். படிப்பிச்சு முடிய அந்தப் பகுதியில சில கணக்குகள் குடுப்பார். குடுக்கிற கணக்கையெல்லாம் கரும்பலகையில வரிசையாய் எழுதுவார். அங்கைதான் விசயமிருக்கு. அவர் கரும்பலகையில கணக்கு எழுதிக்கொண்டிருக்கிற நேரத்தில சில பொடியள் பிராக்குப் பாக்கிறதும் குழப்படி விடுகிறதும் நடக்கும். திரும்பி நிண்டு கரும்பலகையில கணக்குகளை வரிசையாய் எழுதுற ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரருக்கு நாங்கள் பிராக்குப் பாக்கிறதும் குழப்படி விடுறதும் எங்கை தெரியப்போகுது? எண்ட எண்ணத்தில திருவிளையாடல் செய்யிற பொடியளின்ர கதைகந்தலாய்ப் போகும். அவர் கணக்குகளையெல்லாம் எழுதி முடிச்சுத் திரும்பேக்குள்ள எல்லாப் பொடியளும் நல்லபிள்ளையளாயிருந்து நோட்ஸ் கொப்பியளில கணக்குகளை எழுதிக் கொண்டிருப்பாங்கள்.

ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரர் அப்ப என்ன செய்வார் எண்டால் மணிக்கூட்டைக் கழட்டி மேசையில வைப்பார். (அவர் ஆரும் பொடியளுக்குக் கன்னத்தைப் பொத்தி மின்னப் போறார் எண்டால் முதல்ல மணிக்கூட்டைத்தான் கழற்றிவைப்பார்) அடுத்து அச்சொட்டா அவர் கரும்பலகையில கணக்கெழுதிக் கொண்டிருக்கேக்குள்ள பிராக்குப்பாத்தாக்களுக்கும், குழப்படிவிட்ட ஆக்களுக்கும் வரிசையா கன்னத்தைப் பொத்தி மின்னுவார். அது முடியத் திரும்பவும் மணிக்கூட்டை எடுத்துக் கட்டிக்கொண்டு கணக்குகளைச் செய்த பொடியளின்ர நோட்ஸ் கொப்பியள வாங்கித் திருத்துவார். அவரில இன்னொரு நல்ல பழக்கமுமிருக்கு. வகுப்பிலயிருக்கிற சகலற்றை கொப்பியளையும் வாங்கிப்பாத்துத் திருத்திப்போட்டுத்தான் அடுத்த 'ரொப்பிக்குக்குப்' போவார். சரி இப்ப நாங்கள் விசயத்துக்கு வருவம்.

ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரருக்குப் பின் மண்டையிலயும் இரண்டு கண்ணிருக்கு எண்ட சங்கதி பரவலாகி, பொடியள் எல்லாங் கெடிக்கலத்திலயிருந்தாங்கள். ஆனால் வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில இருப்பான்தானே? அப்பிடியொரு வல்லவன் தான் 'பூச்சி'. பூச்சியின்ர சொந்தப் பெயர் புவனச்சந்திரன். பெயர் கொஞ்சம் நீளமாயிருந்ததால எல்லோரும் அவனைப் பூச்சியெண்டுதான் கூப்பிடுவம். அவன்தான் ஏயெம் ஜெபரத்தினம் மாஸ்ரருக்கு பின்மண்டையில கண்ணுமில்ல ஒரு மண்ணுமில்லையெண்டு கண்டு பிடிச்சவன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இது ஈரானின் கச்சேரி!

○ ஸபர் அஹமட்

சில மாதங்களுக்கு முன்பு ஈரானுக்குள் நுழைந்து யூசுப் சஹாப்தி என்ற ஈரானி[illegible]க் கைது செய்து வாக்குமூலம் ஒன்றை வெளியிட்டிருந்தது மொஸாட். சைப்ரஸில் வாழும் இஸ்ரேலியக் கோடிஸ்வரர் ஒருவரை, ஈரானின் இரகசியப்படையின் ஆணைப்படி தீர்த்துக்கட்ட வந்ததாக்வும் திட்டம் சொதப்பியதால் மீண்டும் ஈரான் திரும்பியதாக வும் அதில் சொல்வார் யூசுப்.

இதன் பின்னர் யூசுப்புக்கு என்ன ஆனது என்று தெரியவில்லை. மேற்கத்தேய மீடியாக்கள் ஓயாமல் மூன்று நாட்கள் இதைத்தான் பேசிக் கொண்டிருந்தன. மிகப்பெரும் அளவில் 'வைரலான' வாக்குமூலம் அது. ஈரான் பெரிதாக இந்த விவகாரத்தில் கருத்துகளை அள்ளித் தெளிக்கவுமில்லை, பிரதிபலிப்பைக் காட்டவுமில்லை. இத்தற்கு முன்னைய காலங்களில் மொஸாடின் ட்ரோன் தாக்குதல்களில் தன் அணு விஞ்ஞானிகளை இழந்தபோதும் அப்படித்தான். கல்லடிபட்ட நாய் போலக் குரைக்காமல் 'எல்லாவற்றுக்கும் நேரம் வரும்' என்று மணிரத்னம் 'ஸ்டைலில்' சுருக்கமாகச் சொல்லிவிட்டு அடங்கியிருந்தது.

ஒக்ரோபர் ஏழாம் திகதி இஸ்ரேலில் ஹமாஸ் கச்சேரியை ஆரம்பித்து வைத்து ஒரு மாதம் பூர்த்தியாகிவிட்டது. மிரண்டுபோன இஸ்ரேல் கண்டபடி குண்டுகளை வாரி இறைத்துக் கொண்டிருக்கிறது. கொத்துக்கொத்தாகப் பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள்தான். காஸாவே ஒரு மயானமாகக் காட்சி அளிக்கிறதுதான். ஆனால் இஸ்ரேலால் இந்தப்போரில் வெல்ல முடியவில்லை. பல மில்லியன் டொலர் பெறுமதியான யுத்த டாங்கிகளையும், நூற்றுக்கணக்கான வீரர்களையும் இழந்து தவிக்கிறது. வரலாறு காணாத இஸ்ரேலின் போரியல் இழப்பின் மறைகரம், நேர்கரம் எல்லாமே ஈரான்தான். இப்போது ஈரானின் முறை. 'ஹிட்லர் காலத்தில் நடந்த பேரழிவுக்குப் பிறகு இப்படி ஒன்றைச் சந்திக்கிறோம்' என்றெல்லாம் பேட்டி கொடுக்கிறார்கள் இஸ்ரேலிய அதிகாரிகள். ஈரான் நேரடியாக சம்பந்தப்படாமல் எட்டுத் திக்கிலும் உள்ள தன் தசைகளை ஆட்டுவித்துக் கொண்டிருப்பதுதான் இங்கே விசேடம். காஸாவில் ஹமாஸ், லெபனானில் ஹிஸ்புல்லாவும், ஹமாஸின் லெபனான் பிரிவும், யேமனில் ஹதிகள் என்று இந்த யுத்தத்தில் இறங்கி இருப்பவர்கள் எல்லாம் ஈரானின் நகல்கள்தான். நேரடி யுத்தம் அப்படி இருக்க, பொழுது போகாவிட்டால் ஈராக்கில் இருக்கும் அமெரிக்கப் படைத்தளத்தை யாராவது தாக்குகிறார்கள். அல்லது சிரியாவில் இருந்து ரொக்கட் ஏவிப் பார்க்கிறார்கள். நன்கு கவனித்தால் இன்னொன்று விளங்கும். ஹமாஸைத் தவிர மற்றத் தரப்புக்கள் எல்லாம் ஷியாக்கள். ஷியா தேசங்கள். ஆனால் மத உட்பிரிவு மோதல்களையும் உணர்ச்சியையும், முரண்பாடுகளையும் களைந்துவிட்டுப் பொது எதிரியை அடி என்பதுதான் இங்கே சுலோகம் போலும். யார் குத்தியாவது அரிசியாக வேண்டும் என்பதுதான் சித்தாந்தப் பின்புலமாக இருத்தல் வேண்டும்.

இஸ்ரேல் என்பது பேட்டையில் தேவை இல்லாமல் வளர்ந்த கள்ளிச் செடி என்று எல்லா அரபுத் தலைவர்களுக்கும் நன்கு தெரியும். அவர்களும் 1948, 1967, 1973 என்று பிரம்மாண்ட யுத்தங்களும், இடைப்பட்ட வருடங்களில் சிறிய, நடுத்தர யுத்தங்களையும் செய்து களைத்துப்போய் இருக்கின்றார்கள். அமெரிக்காவை மீறி இஸ்ரேலை ஒன்றுமே செய்ய முடியாது என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் இம்முறை யாருமே ஈரானின் ஆட்டத்துக்கு குறுக்கே வரவில்லை. 'நீ நடத்து ராஜா' என்று சொல்லிவிட்டுக் காலை வாராமல் இருப்பதும் சமூகத் தொண்டுதானே. பலஸ்தீனில் நடப்பது மதப்பிரிவுச் சண்டையோ, மதச் சண்டையோ அல்ல. 'ஆட்டையைப் போட்ட' நிலத்தை மீட்கும் போராட்டம் என்ற அறிவு இருந்தால் தான் இவற்றைப் புரிந்துகொள்ள நம்மால் முடியும்.



# அலப்பறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும் மரவள்ளிச் சீவலுக்குள், பொரித்த சிறிய கடலை வடைக்குள் ஏதோ ஒரு பெயர் தெரியாத குழம்பை ஊற்றினால் என்ன நடக்கும்? மொறுமொறுவென்று இருப்பது இழகிப் போய்விடும். அதற்குள் கரஞ்சுண்டலையும் கலக்க எல்லாமே பதம் கெட்டுவிடும். ஓர் உணவின் சுவையை அதன் பௌதீகப் பண்பிலிருந்து பிரிக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு தின்பண்டத்தினதும் தனித்துவமான பௌதீகப் பண்பைக் கெடுத்து ஒன்றடிமன்றடியாக எல்லாவற்றையும் ஒன்றாக்கி விடுவது சுவையாக இருக்குமா? ஆனால் அதைத்தான் புதிய சுவை என்று கூறி விற்கிறார்கள். சனங்களும் விரும்பிச் சாப்பிடுகிறார்கள். அது ஒரு ருசி மாற்றம்; ரசனை மாற்றம். டிஜே பார்ட்டியைப் போலவே, அதுவும் யாழ்ப்பாணத்தின் மாறிவரும் சுவையைக் காட்டுகின்றதா? எங்களுடைய செவிகள் ஏன் மரத்துப்போயின? எங்களுடைய சுவை நரம்புகள் ஏன் மரத்துப் போயின? நெஞ்சை உதைக்கும் இசைக்கு எப்பொழுது ஆடப் பழகினோம்? ஒரு சமூகத்தின் புலன்கள் மரத்துப்போய் கூருணர்வு மழுங்கிப் போனால் பிறகு என்ன நடக்கும்? அதை ஏனைய சமூகங்கள் இலகுவாக வேட்டையாடி விடும். அல்லது தோற்கடித்து விடும்.

இது யாழ்ப்பாணத்துக்கு மட்டுமல்ல, உலகம் முழுவதுமான பூகோளமயமாதலின் விளைவுகளில் ஒன்று. இவ்வாறு மாறிவரும் ருசி ரசனைகளைக் கவனத்தில் எடுத்துத்தான் கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கலை பண்பாட்டு இயக்கங்களும் தமது படைப்புகளை உருவாக்க வேண்டியிருக்கிறது. போர்க்காலங்களில், குறிப்பாக ஒரு ஆயுதப் போராட்டத்தின் விளைவாகத் தோன்றிய ஒரு கருநிலை அரசு நிலத்தைக் கட்டுப்படுத்திய காலகட்டத்தில், மாவீரர் நாளை ஓர் அரச நிகழ்வாக அனுஷ்டித்து வந்தது. ஆனால் இப்பொழுது மனங்களைக் கட்டுப்படுத்தினால்தான் நிலங்களைக் கட்டுப்படுத்தலாம். அரசியலை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கலாம். எனவே மாறிவரும் அரசியல், பொருளாதார, தொழில்நுட்பச் சூழலுக்குள் தமிழ் மக்களுடைய மனங்களை எப்படிக் கவர்வது என்று கட்களும் செயற்பாட்டாளர்களும் குடிமக்கள் சமூகங்களும் சிந்திக்க வேண்டும். அதற்கு வேண்டிய கலை பண்பாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்கவேண்டும்

ஒரு மக்கள் கூட்டம் எதை ரசிக்க வேண்டும்? எதை ருசிக்க வேண்டும்? எதைக் எப்பொழுது கொண்டாட வேண்டும்? எப்படிக் கொண்டாட வேண்டும்? எப்பொழுது கொண்டாட வேண்டும் போன்ற விடயங்களில், மக்களைப் பொருத்தமான இடங்களில் வழிநடத்தத் தேவையான கலை பண்பாட்டுத் தரிசனங்களை கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் கொண்டிருக்க வேண்டும். மாணவர்கள் மத்தியில் எதை விவாதப் பொருளாக மாற்றுவது என்பதனை கல்விச் சமூகம் தீர்மானிக்க வேண்டும். நாட்டில் எத்தனை தமிழ் கட்சிகளிடம் மாணவ அமைப்பு உண்டு? எத்தனை தமிழ் கட்சிகளுக்கு பல்கலைக்கழகங்களில் மாணவ அமைப்பு உண்டு? அண்மை நாட்களாக சமூக வலைத்தளங்களில் விவாதப் பொருட்களாத மாறியிருக்கும் விவாத மேடைகள், டிஜே பாட்டிகள் போன்றவை யாவும் தமிழ் மக்களுக்கு ஒரு விடயத்தை உணர்த்துகின்றன. நீதிக்காகப் போராடும் ஒரு சமூகம், தனக்கு வேண்டிய கட்டமைப்புகளை உருவாக்கத் தவறிய வெற்றிடத்தில்தான் இவ்வாறெல்லாம் நடக்கின்றன. கலை பண்பாட்டு அமைப்புக்கள், மாணவ அமைப்புகள் போன்றன அவ்வாறான தேச நிர்மாணத்துக்குரிய கட்டமைப்புகள்தான். ■

நீங்களும் எழுதலாம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

- சிறுகதை
- பத்தி எழுத்து
- கட்டுரை
- கவிதை
- ஓவியம்

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க காத்திருக்கிறோம்.
உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி

சஞ்சீவி
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மழை அங்கியை எடுத்துவர மறந்து விட்டிருந்தாள். சில நிமிடங்கள் கழிந்திருக்கும். தூறலாக ஆரம்பித்த மழை பெரிதாகியிருந்தது. முழுதாக நனைய ஆரம்பித்திருந்தாள் லீனா. அதே நேரம் கைக்கடிகார அலாரம் நேரம் 4 மணி 55 நிமிடமென்பதை நினைவுபடுத்தி விட்டு அமைதியாகியது. லீனா எதிர்பார்த்தது போலவே அந்த இரைச்சல் சத்தம் கேட்டது. சில நொடிகளில் அச்சத்தம் மேலும் அவளுக்கு நெருக்கமாகியது. கமராவினூடாக சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்த லீனா, சற்றும் எதிர்ப்பார்க்காத வகையில் பின்னாலிருந்து இரண்டு கைகள் அவளது இடுப்பை சுற்றிக் கட்டிக் கொண்டன. "ஏய் விடு என்னை" சலாரென திரும்பி தன்னை விடுவித்துக் கொண்ட லீனா, அந்த இரசாயன மனிதனையும் அவன் குரலையும் கேட்டு நம்ப முடியாது திகைத்துபோனாள். "பரவாயில்லையே வெகு லாவகமாக என்னிடமிருந்து தப்பித்துக் கொண்டாய் .யார் நீ? எதற்காக தினமும் என்னை பார்க்க வருகின்றாய்"

வெகு இலகுவாக வந்தன அவன் வார்த்தைகள். லீனா பயப்படவில்லை. "என்னுடைய இடத்தில் வந்தது நீயல்லவா? யார் நீ? எதற்காக இங்கு வருகிறாய்?"

"நான் அயற்பூமி மனிதன். பெயர் லாம்ஸன். பட்டாம்பூச்சிகளை ஆய்வு செய்வதற்காக இங்கே வருகிறேன். எங்கள் பூமியில் பட்டாம் பூச்சிகள் இல்லை. இப்பட்டாம்பூச்சிகள் எங்கள் பூமியை மேலும் அழகுபடுத்தும் என நாங்கள் நம்புவதால் இவற்றை எங்கள் பூமியிலும் இனம்பெருக்க முயற்சிக்கிறோம்" சிரித்தபடி கூறினான் அவன். லீனா தன் கண்களை அகல விரித்தபடியே அவன் சொல்வதை நம்ப முடியாமல் திணறினாள்.

அவள் திணறுவதை ரசித்தபடியே அவன் இன்னும் பேசிக் கொண்டிருந்தான். "நீ அழகாக இருக்கின்றாய். மழை உன்னை இன்னமும் அழகாக்கியிருக்கின்றது. ஓர் அழகான பட்டாம்பூச்சியைப் போல நீ எனக்குத் தெரிகின்றாய். . பூமியின் மனிதர்கள் பொல்லாதவர்கள் என்றல்லவா சொல்வார்கள். உன்னைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே" என்றான். "அது இருக்கட்டும் நீ மீண்டும் எப்போது உங்கள் பூமிக்கு செல்வாய்? என்னை அழைத்து செல்ல முடியுமா? பார்க்க ஆவலாக இருக்கிறேன்" ஆர்வத்துடன் கேட்டாள் லீனா.

"எங்கள் பூமிக்கு வருவதற்கு சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. நீ உன்னைப்பற்றிய அனைத்து விபரங்களையும் எனக்கு சொல்லிவிடு. நான் அனுமதி பெற்றுவிட்டு அழைத்துச் செல்கின்றேன்" சாதாரணமாகக் கூறினான் அவன்.

லீனா இனம்புரியாத ஓர் மகிழ்வுடனிருந்தாள். புதிய பூமி எப்படியிருக்கும்? புதிய மனிதர்கள் எப்படியிருப்பார்கள்? எப்போது அந்த மனிதன் என்னை அழைத்துச் செல்வான்? அதே எண்ணமாகவே இருந்தாள். "பிள்ளை, வெளிக்கிடன் கெதியா வரப்போகினமல்லே. மாப்பிள்ளை உன்னை பாத்திட்டு ஓமெண்டிடோணும், வடிவா சாறியக் கட்டி வெளிக்கிடு" பாமா புறுபுறுத்தபடியே அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருந்தாள்.

லீனா சேலை கட்டினாள். பொட்டு வைத்தாள். கூந்தலில் பூ வைத்துக் கொண்டாள். காற்சலங்கைகளை மீண்டும் ஒரு முறை சரிபார்த்துக் கொண்டாள். கண்ணாடி பார்த்து விட்டு திரும்புகையில் ஜன்னலோரமாக ஒரு பட்டாம்பூச்சி.... சிறிய சிறகுகளை விரித்தபடியே பறந்து கொண்டிருந்தது. கடிகாரத்தில் நேரம் 4மணி 55நிமிடம். லீனா வீட்டை விட்டு வெளியேறி காட்டுப்பக்கமாக ஓடத்தொடங்கியிருந்தாள். கால் முளைத்த பட்டாம்பூச்சி ஒன்று போவதைப் போல் இருந்தது அது.

| | |
|---|---|
| பெயர் | லாம்ஸன் |
| பிறந்த திகதி | கணிக்கவில்லை |
| திறந்த நேரம் | கணிக்கவில்லை |
| வயது | கணிக்கவில்லை |
| தகுதி | இயற்கை விஞ்ஞானி |

வாழ்க்கை சதுரங்களுக்குள்ளோ வட்டங்களுக்குள்ளேயோ அடைக்கப்படவில்லை. அது சுதந்திரமானது. ஆனாலும் லீனாவுக்கு வெளிநாடு செல்லப் பலன் ஒன்று இருந்திருக்கிறது தான்.

# மரபில்....

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)



போன்ற பலரும் ஞாபகத்துக்குரியவர்கள். இன்னும் பலரிருக்கிறார்கள். படைப்புக்கள் பலவற்றை எனது குரு பண்டிதர் க.இராசையாவுக்கே சமர்ப்பணம் செய்திருந்தேன்.

**கே: எழுத்துத்துறை தவிர்ந்த இதர கலைத்துறை முயற்சிகள் தொடர்பில்...?**

எழுத்துத்துறையை விட நாடகத்துறையில் எனக்குச் சிறு வயதிலிருந்தே ஆர்வமுண்டு. அல்லை க.வ.ஆறுமுகரின் அடையாள அட்டை, இதுதான் உலகம், பெண்ணாக மாறினால், புரட்சிக்கல்வி, ஐயோ இராசாவே முதலான நாடகங்களிலும், சோதிவேற்பிள்ளையின் கடமையின் எல்லை, காதற்பலி மலர்ந்த வாழ்வு போன்ற நாடகங்களிலும், பெண் வில்லன் நகைச்சுவை பாத்திரங்கள் ஏற்று நடித்துள்ளேன். சில நாடகங்கள் யாழ்ப்பாணம் திறந்த வெளியரங்கிலும் மேடையேறின. பல ஊர்களிலும் இவை நடிக்கப்பட்டன. மதத்தம்பி இசை நாடகத்தை இருமணித்தியால இசை நாடகமாகச் சுருக்கி எழுதி மண்கும்பான் பிள்ளையார் ஆலய முன்றிலில் மேடையேற்றினேன். 70 வயது அண்ணாவியர் பூதத்தம்பியாகவும் அழகவல்லியாக நானும் நடித்தோம். சில சமூக நாடகங்களை எழுதி மேடையேற்றியுள்ளேன். பாடசாலை மாணவர்களுக்காகவும் நாடகங்கள் எழுதியுள்ளேன். நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் துணைச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளேன். பட்டிமன்றங்கள், கவியரங்குகள் தொடர்பிலும் எனக்கு ஆர்வமுண்டு.

**கே: உங்களது ஆசிரியத்துவப்பணி தொடர்பில் விவரிக்க முடியுமா..?**

25 ஆண்டுகால ஆசிரியத்துவம் என்னுடையது. அதில் இரு வருடங்கள் நல்லூர்க் கல்விக்கோட்ட முதன்மை ஆசிரியராகவும், ஐந்தரை வருடங்கள் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க.பாடசாலையிலும், சுமார் 3 வருடங்கள் இரு தடவைகளில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும், இடம்பெயர்ந்தபோது கிளி, மத்திய கல்லூரியில் மூன்றாண்டுகளும் பணிசெய்துள்ளேன்.

பதினொன்றரை ஆண்டுகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகவும், மேலும் ஓராண்டு பகுதிநேர விரிவுரையாளராகவும் எனது பணி தொடர்ந்தது. தேசிய கல்வி நிறுவகத்தின் யாழ்ப்பாணம் பிராந்திய நிலையத்தில் 15 ஆண்டுகள் (20002015) வரிவுரையாளராகவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்துவ துறையில் 1994 ,1995 காலப்பகுதியில் வருகை விரிவுரையாளராகவும் ,இப்பல்கலைக்கழக பட்டப்பின் கற்கைப்பீடத்தில் தமிழை முதுகலை மாணிப் பட்டத்துக்காகக் கற்கும் மாணவர்களுக்கு பகுதி நேர விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளேன். பாடசாலை மாணவர்க்கான கருத்தமர்வு, செயலமர்வுகளிலும் எனது பங்களிப்பு இருந்தது.

**கே: விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் தொடர்பில்...?**

நூல்களுக்காகக் கிடைத்த விருதுகளை ஏற்கனவே கூறியுள்ளேன். அவற்றை விட அரசாலும், அங்கீகரிக்கப்பட்ட உயர் நிறுவனங்களாலும் இதுவரை ஒன்பது விருதுகளைப் பெற்றுள்ளேன். கலாபூஷணம் (கல்விகலாசார அமைச்சு), கலைவாதிரி (வேலணை பிரதேசசெயலகம்), கலைஞானச்சுடர் (நல்லூர்ப் பிரதேச செயலகம்), நற்றமிழ் காவலர் (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி தமிழ்ச் சங்கம்), ஞானவியன்மணி (வேலணை மத்திய கல்லூரி), நாவலர்விருது (அகில இலங்கைக் கம்பன் கழகம்), தமிழ்புலமையாளர் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை), சைவப்புலவர் (அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்) உள்ளிட்ட விருதுகள் கிட்டியுள்ளன.

**கே: தமிழிலக்கிய செல்நெறியில் நவீனத்துவம், பின் நவீனத்துவம், கட்டமைப்பு வாதம், முதலானவை பற்றிய தங்களது கருத்து யாது?**

கைத்தொழிலாதிக்கம், முதலாளித்துவம் போன்றவற்றின் விளைவுகள் காலத்துக்குக் காலம் இலக்கியப்போக்கிலும் பல இலக்கியங்களைக் கற்பித்துள்ளன. தற்போதைய தகவல் தொடர்பு யுக வளர்ச்சியும் புதுப்புது இலக்கியக் கோட்பாடுகள் கொள்கைகள் பற்றிப் பேசுகின்றது. பழையான கழிதலும் புதியன புகுதலும் வழுவலகாலவகையினானே என்பது நாமறிந்ததே. ஆனால் பழைமையின் தோள்களில் நின்று புதுமையை வரவேற்கவேண்டும். காலத்திற்கேற்ப பொருத்தமற்றவற்றை நீக்கிப் பொருத்தமானவற்றைக் கைக்கொள்ள வேண்டும். இலக்கியத்துக்கும் இது பொருந்தும். எந்த மாற்றம் வந்தாலும் சமூகப்பயன்பாடும், உண்மையின் நிதர்சனமும், சாதுரியமான கதைசொல்லலும், மானிட நேயமும் விரவிய இலக்கியப் படைப்புகளே காலத்தை வென்று வாழக்கூடியவை

**கே: அனுபவமுள்ள எழுத்தாளர், ஆசிரியர் என்ற வகையில் தற்போதைய இளம் படைப்பாளிகளுக்கு தாங்கள் கூறும் அறிவுரை யாது?**

நெருக்கடியாயிருந்தாலும் நேரம் ஒதுக்கி நிறைய வாசியுங்கள். அதனூடுபெறும் அனுபவத்தைக்கொண்டு எழுதுங்கள். மரபுக்கவிதையைச் சிரமப்பட்டேனும் கற்றபின் புதுக்கவிதையை எழுதுங்கள். அப்போது தான் உங்கள் கவிதை வளமூட்டும். வைரமுத்து, அப்துல் ரகுமான், மேத்தா, முருகையன், புதுமைபித்தன் இரத்தினதுரை ஆகியோர் மரபில் திளைத்தபின் புதுக்கவிதை படைத்தவர்கள். இலக்கியப் படைப்பு உயிர்ப்புடையதாயிருக்க வேண்டுமாயின், அதுசமகால அனுபவங்களுடன் பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். தனக்கான ஆளுமை வலுவுடன் இலக்கியப் படைப்பு தனித்துவமாக மிளிர வேண்டும். அவசரப்படாமல் சிந்தனையை விரிவாக்கிப் படைபொன்றை உருவாகக் வேண்டும். பதின்மூன்று சிறுகதைகளைப் படைத்த மௌனி இன்றும் பேசப்படுவதைப் புரிந்து கொள்ள வேண்டும். தெரியாததும் புரியாததும் சரியில்லை என்று கருதாது உண்மையின் புரிதலுடன் இலக்கியம் படைக்க வேண்டும் என்பதே எனது விருப்பம்.

ஆரோக்கியமான விமர்சனங்கள் இல்லாது ஒருவரை ஒருவர் முதுகைச் சொறியும் மரபு ஏற்பட்டுவிட்டது புற்றீசல் போல நூல்கள் வெளிவந்து வாசகர்களுக்கு சலிப்பை மூட்டுகின்றன. வாசிப்போர் தொகையும் அருகி வருகிறது. சுத்தமான பவுனைவிட றொக் கோட் வகையின் பளபளப்பு அதிகமானோரை கவருகிறது. இலக்கிய வெற்றிகளில் சார்புத் தன்மை காணப்படுகிறது. நல்லதொரு படைப்புக்கான ஏக்கமும் காத்திருப்பும் ஏற்பட்டுள்ளது. ஆனாலும் இருளின் நடுவே இடைக்கிடை ஒளிக்கீற்றுகளும் பளிச்சிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# வழங்குநர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவுசெய்தல் - 2024

கீழே குறிப்பிட்டுள்ள வழங்கல்களையும் சேவைகளையும் வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழகத்துடன் தம்மை பதிவு செய்துகொள்ள விரும்பும் பிரபல்யமான வழங்குநர்கள் / உற்பத்தியாளர்கள் / ஒப்பந்தகாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் **2023 டிசம்பர் 12ஆம் திகதிவரை** ஏற்றுக்கொள்ளப்படும்.

**1. பாவனைபொருட்கள் காகிதாதிகள்**

1.1 எழுதுபொருட்கள் காகிதாதிகள்.(;.(Stationary, Calculator, Toner, Cartridge, Printer Ribbon, Printer paper, etc…) )
1.2 வெட்டும் கருவிகள் மட்பாண்டங்கள் உட்பட சமையலறைப் பாத்திரங்கள்.
1.3 சுகாதார சேவை வழங்கல்:- தும்புதடி, விளக்குமாறு, கால்துடைப்பங்கள், கழிப்பறை சுத்தம் செய்யும் பொருட்கள், பாத்திரம் சுத்தம் செய்யும் பொருட்கள், சுத்திகரிப்பு மற்றும் மெதுகூட்டல் பொருட்கள் முதலியன.
1.4 மழைக்கோட்டுக்கள், சேற்றுசப்பாத்துக்கள், குடைகள், சப்பாத்துக்கள் முதலியன.

**2. புத்தகம், புத்தகம் கட்டுதல், அச்சிடுதல்.**

2.1 அச்சிடுதல், புளொக் செய்தல், ரப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள்.
2.2 புத்தகங்கள், பருவ வெளியீடுகள் ஏனைய வெளியீடுகள்.
2.3 புத்தகங்களையும், பருவ வெளியீடுகளையும் கோர்த்தல்.

**3. தளபாடங்கள் அலுவலக உபகரணங்கள்.**

3.1 அலுவலக தளபாடம் - மரம் உருக்கு - கணினி மேசை, கதிரைகள்.
3.2 அலுவலக உபகரணங்கள் (பிரதிபண்ணும் இயந்திரங்கள், நிழற் பிரதி இயந்திரங்கள், தொலைநகல் கருவிகள் முதலியன).
3.3 தீயணைப்பு சாதனங்களும், பாதுகாப்பு சாதனங்களும்.

**4. கட்டட பொருட்கள்/ பராமரிப்பு பொருட்கள் மற்றும் கருவிகள்**

4.1 சகல வகையான கட்டட நிர்மாண பொருட்கள்.
a. சகல வகை தீந்தைகளும், தூரிகைகளும், கலப்பான் வகைகளும் அது தொடர்பான ஏனைய பொருட்களும்.
b. சீமெந்து வகைகள், மாபிள் ஒட்டும் சீமெந்து வகைகள், நீர் கசிவு சீமெந்து வகைகள்.
c. கட்டட நிர்மாண வேலைகளுக்கான மணல், சல்லிகள், கற்கள் மற்றும் கிரவல் வகைகள்.
d. இரும்பு கம்பிகள், கல்வனைஸ் பைப்புகள் மற்றும் ஆணிகள்.
e. இரும்பு மற்றும் பித்தளையிலான கட்டட பொருத்துக்களும் பிணைப்புக்களும் பூட்டு வகைகளும். (பிணைச்சல், திறாங்கு, Screw ஆணிகள் போன்றவை)
f. UPVC/CPVC யிலான பைப்பு வகைகளும் அவற்றிற்கான பொருத்துக்களும்.
g. தீராந்தி வகைகள், சலாகை வகைகள் மற்றும் பலகை வகைகளும்.
h. அனைத்து அலுமினிய சட்டங்கள், மற்றும் பொருத்துகள், கண்ணாடிகள், ஒட்டுப்பலகைகள்.
i. குளியலறை மற்றும் கழிப்பறைகளுக்கான மாபிள் பொருத்துகள், சுவர் மற்றும் தரைகளுக்கான மாபிள்கள்.
j. கழிவு நீர் சீராக்கி தொகுதி பராமரிப்பு பொருட்கள்.
k. குடிநீர் சீராக்கி தொகுதி பராமரிப்பு பொருட்கள்.
l. நீர் கசிவு தடுப்பு மற்றும் துருப்பிடித்தல் தடுப்பு இரசாயன பொருட்கள்.

**5. மின்னியல் பொருட்கள்**

5.1 மின்சாரசாதன உபகரணங்களும் மற்றும் உதிரிபாகங்களும்.

**6. ஆய்வு கூட பொருட்கள் / சாதனங்கள்.**

6.1 ஆய்வு கூடச் சாதனங்கள்
6.2 ஆய்வு கூட இரசயனபொருட்களும் கண்ணாடிச் சாதனங்களும்.

**7. வாகன பராமரிப்பு**

7.1 டயர் ரியுப்புகள், பற்றரிகள்.
7.2 மோட்டார் உதிரிப்பாகங்கள், துணை உறுப்புகள்.
7.3 மோட்டார் வாகனம் திருத்துதல்
7.4 மோட்டார் வாகன உள்ளக வேலைகள்.

**8. பொதுசேவைகள் வழங்கல்கள்**

8.1 ஆயுர்வேத மருந்துகள் உட்பட மருந்துகளும், மருத்துவ வழங்கல்களும்
8.2 விளையாட்டு மற்றும் நலன்புரி பொருட்கள்.
8.3 புடைவைகள், ஐவுளிகள், ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைத்துணிகள்.
8.4 தோட்ட வேலைகளுக்கான பசளைகள், இரசாயன கருவிகள், இயற்கை உரம், பூங்கன்றுகள் மற்றும் செடிகள்.
8.5 அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் - தட்டச்சு இயந்திரங்கள, புகைப்பட பிரதிபண்ணும் இயந்திரங்கள், தொலைநகல், கணினி, தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள், மின் தட்டச்சு இயந்திரங்கள் போன்றவற்றின் திருத்தவேலைகள்.
8.6 உருக்கு, மரத் தளபாட திருத்த வேலைகளும் மெருகூட்டல் வேலைகளும்.
8.7 கதிரைகள் பின்னுதல்.
8.8 உடைகள் கதவு ஜன்னல் திரைச்சீலைகள் தைத்தல்.
8.9 உடைகளைச் சலவை செய்தல்.
8.10 சுத்திகரிப்பு சேவை வழங்கல்.
8.11 பாதுகாப்பு சேவை வழங்கல்.
8.12 பொதிகள் பரிமாற்று / சுங்க தீர்வைகள் சேவை.
8.13 நிகழ்வுகள் நிர்வகிப்பு சேவை.
8.14 உணவு வழங்கல் சேவை.
8.15 வீடியோ மற்றும் புகைப்பட சேவை.
8.16 வாடகை அடிப்படையில் ஒலி மற்றும் ஒளி உபகரணங்கள் வழங்கல்.
8.17 பயண முகவர் சேவை.
8.18 மோட்டார் வாகனங்கள் வாடகைக்கு வழங்குதல் (Passenger van-with A/C & without A/C, passenger bus, lorry, tractors with trailer, etc.
8.19 இயந்திரங்கள் வாடகைக்கு வழங்குதல். (JCB, excavator, compressor, pay loader, etc.)

**9. எந்திரவியல் சேவைகள்.**

9.1 பெயர்ப்பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர்ப்பலகைகள் செய்தலும்.
9.2 மின்மோட்டார், நீரிறைக்கும் இயந்திரங்கள், மின்விசிறிகள், திருத்துதல் மற்றும் மீளமுறுக்குதல் (Rewind) உட்பட
9.3 ஜெனரேட்டர்கள் திருத்துதல்.
9.4 குளிரூட்டி, வாகன குளிரூட்டி திருத்துதல்.
9.5 குடிசார் எந்திரவியல் வேலைகள், கட்டடங்கள், வீதிகள், ஏனைய நிர்மாணங்கள் நிர்மாணித்தலும் திருத்தவேலைகளும்.
9.6 மின்சார இணைப்புவேலைகள்.
9.7 நீர் விநியோக தொகுதி, வடிகாலமைப்பு தொகுதி, கழிவு நீர் சீராகி தொகுதி மற்றும் குடிநீர் சீராகி தொகுதி வேலைகளும், பராமரிப்பு மற்றும் திருத்த வேலைகளும்.
9.8 இரும்பு, அலுமினியம் என்பவற்றிலான கட்டடம் சார்ந்த பொருத்துக்கள் செய்தலும் பொருத்தலும்.
9.9 கட்டடங்கள் / கட்டட சேவைகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய (இயந்திர சாதனங்களுக்கான) உசாத்துணை சேவைகள்.
9.10 மின்சார உசாத்துணை சேவைகள்.
9.11 நிலையாக பொருத்தப்பட்ட மரத்தளபாடங்கள் வழங்கல் / பொருத்துதல் /தச்சுவேலை.
9.12 ஏந்திரவியல்சார் வரைதலும் நீலப் பிரதிசெய்தலும்.
9.13 கறையான் / பீடைகள் ஒழிப்புவேலைகள்.
9.14 தொழிலாளர் வழங்கல் (திறன் சார், திறன் சாரா, மற்றும் காவலாளிகள்)
9.15 பராமரிப்பு வேலைக்கான கணிய அளவுச் சிட்டை (B.O.Q) தயாரித்தல்.
9.16 தீயணைப்பு இயந்திர தொகுதி பராமரித்தலும் திருத்த வேலைகளும்.

**10. மின்னனு பொருட்கள்.**

10.1 கணினி மற்றும் கணினி உபகரணங்கள் உட்பட மின்னியல் பொருட்கள்.
10.2 தகவல் தொழில்நுட்ப வன்பொருள் மென்பொருட்களிற்கான வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.3 தொடர்பாடல் சாதனங்களுக்கான உபகரணங்கள் வழங்கலும், சேவைகளும் பராமரிப்புகளும்.
10.4 தொலைபேசி உபகரணங்களும் கையடக்க தொலைபேசிகளும் வழங்கல்.
10.5 கணினி வலைப்பின்னல் ஸ்தாபித்தலும் அதற்கான உபகரணங்களும்.

## பதிவு தொடர்பான நியந்தனைகள்

01. வழங்குநர்களாக பதிவு செய்பவர்கள் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரிவிண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்தல் வேண்டும். ஒவ்வொரு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“வழங்கல்கள் சேவைகளுக்கான பதிவுசெய்தல் 2024”** எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

❖ பதிவுகளுக்கான விண்ணப்பங்கள் மற்றும் வைப்பு சிட்டை பிரதி என்பவற்றினை **நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என முகவரியிடல் வேண்டும்.

02. ஒவ்வொரு வழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல. 850000390000926 **மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்,** எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட்டின் பிரதியை இணைக்கவும்.

03. கம்பனி தவிர்ந்த ஏனைய நிறுவனங்கள் தங்கள் வியாபார பதிவுபத்திரத்தில் குறிப்பிட்ட வியாபாரத்தின் பொது தன்மைக்கு ஏற்ற வழங்கல் / சேவைக்கு மட்டுமே பதிவினை மேற்கொள்ள முடியும். வியாபாரத்தின் பொது தன்மையுடன் தொடர்பற்ற வழங்கல் / சேவைக்கு பதிவினை மேற்கொள்ளும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும்.

04. 2024ம் ஆண்டிற்கான சகல விலைமனுக்களும் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடமிருந்தே கோரப்படும். ஆயினும் பதிவு செய்யப்படாத வழங்குனர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோர பல்கலைக்கழகத்திற்கு உரிமை உண்டு.

05. கோரப்படும் போது விலைமனுக்களை சமர்ப்பிக்கதவறும் அல்லது உரிய நேரத்திற்கு பொருட்கள் / சேவைகளை வழங்க தவறும் அல்லது குறிப்பிடப்படும் மாதிரிகளுடன் ஒத்திராத பொருட்கள் / சேவைகளை வழங்கும் எந்தவொரு வழங்குநரின் பெயரும் முன்னறிவித்தலின்றி பதிவுப் புத்தகத்திலிருந்து நீக்கப்படும்.

06. விண்ணப்பதாரரின் ஸ்தாபனத்தில் நிரந்தரமாக வேலை செய்யும் சகல எந்திரவியலாளர், கட்டடக்கலைஞர் ஆகியோரின் பெயர் அனுபவங்களையும் CIDA பதிவு இலக்கம் மற்றும் தரம் ஆகியவற்றையும் குறிப்பிடுக. (எந்திரவியல் சேவைகள் இலக்கம் 9.5, 9.6, 9.7, 9.8, 9.9, 9.10 மற்றும் 9.16 இற்கு மட்டும்)

07. சேவைகள் / வழங்கல்களுக்கான கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவு செய்யும் பெயரிலேயே வழங்கப்படும். அத்துடன் வழங்குநர்கள் தங்கள் வியாபார பெயரிலேயே வங்கி கணக்கினை வைத்திருக்க வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு உதவி நிதியாளர் (வழங்கல் - II) இனைத் தொடர்புகொள்ளவும். தொ.பே.இல. 021 222 6519.**

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்.**

---

**யாழ்ப்பாணப பலகலைக் கழகம்.**
**வழங்குனர்கள் மற்றும் சேவையாளர்களை பதிவுசெய்தல் - 2024**

**01. தனிப்பட்டதகவல்கள்**

1.1 முழுப்பெயர:…………………………………………
1.2 தே.அ.அ. இல …………………………………………
(தேசிய அடையாள அட்டையில் உள்ளபடி)
1.3 விலாசம்:…………………………………………
…………………………………………
1.4 நிரந்தரதொலைபேசி இல:……………………கைத் தொலைபேசி இல:……………………
தொலைநகல்:…………………………………………

**02. வியாபாரதகவல்கள்**

2.1 முயற்சியாண்மை நிறுவனத்தின் பெயர்:…………………………………………
2.2 வியாபார பதிவு இல:…………………………………………
(வியாபார பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்)
2.3 பெறுமதிசேர் வரி (VAT) இல:…………………………………………
(VAT இல காணப்படின், பெறுமதிசேர் வரி (VAT) பதிவு சான்றிதழ் பிரதியை இணைக்கவும்.CIDA பதிவு இலக்கம்………… தரம்……………… காலாவதி திகதி ……………………
2.4 விலாசம்:…………………………………………
…………………………………………
2.5 நிரந்தர தொலைபேசி இல:………………கைத்தொலைபேசி இல:………………
தொலைநகல் :……………………………
(குறைந்த பட்சம் இரண்டு தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடவும்)
2.6 மின்னஞ்சல் முகவரி:…………………………………………
2.7 மாவட்டம்:…………………………………………
2.8 பிரதேசசெயலர் பிரிவு:…………………………………………

**03. மேலதிக விபரங்கள்**

3.1 வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் :…………………………………………
3.2 கிடைக்கக்கூடிய கடன் வசதிகள் :…………………………………………
3.3 ICTAD பதிவு இல:…………………………………………
(எந்திரவியல் சேவை 9.5 9.9 இற்குமட்டும்.) ICTADபதிவு இல்லாதுவிடின் ரூபா 200,000.00 (இருநூறு ஆயிரம் மட்டும்) க்கு உட்பட்ட வேலைகளுக்கான கூறுவிலை சமர்ப்பிக்கமட்டுமே தகுதியுடையவராவர்.

**04. வழங்கல் சேவைகளுக்கானவிபரங்கள்.**

| தொடர் இல | சேவைகள் /வழங்கல்கள் |
|---|---|
| | |
| | |
| | |

**05 வழங்கப்படும் பொருட்கள் வழங்குனராலேயே பல்கலைக்கழகத்தில் ஒப்படைக்கவேண்டும்**

நான்/ நாங்கள் மேற்படி பதிவு நிபந்தனைகளுக்கு இணங்குகின்றேன் / இணங்குகின்றோம்.

கையொப்பம் :………………………
பெயர் :……………………… திகதி:………………………

**குறிப்பு:**
ஒவ்வொரு வழங்கல் / சேவைகளிற்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துடனும் பதிவுக்கட்டணமாக ரூபா 2,000/= இனை கணக்கு இல. 850000390000926 மக்கள் வங்கி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம். எனும் பெயரில் வைப்பிலிட்டு வைப்பு சீட்டின் பிரதியை இணைக்கவும்.

(CR. 40951) (n.l)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் • 01 • 03 • 1941

இறைவனடியில் • 23 • 10 • 2022

அமரர்

## அப்பாக்குட்டி சண்முகலிங்கம்

திதி: அபரபக்க சதுர்த்தசி (12.11.2023)

அவனிவிட்டு நீங்கள் நீங்கி
ஆண்டு ஒன்று ஆனதப்பா!
அனுதினமும் உங்கள் நினைவில்
ஆறாத்துயரடைகின்றோம் - அப்பாவே
பாசத்தை பொழிந்தீர்கள் - எமக்கு
பக்குவமாய் பல அறிவுரைகள் சொன்னீர்கள்!
பார் புகழ எமை பாராட்டி சீராட்டி
வாழ வைத்த தெய்வம் நீங்கள் அப்பா!
எம் உயிர் உள்ளவரை நின் நினைவோடு
எங்கள் வாழ்வு தொடரும் அப்பா!
உங்கள் ஆத்மா இறையடியில் நித்திய சுகம் பெற நித்தம்
வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(cs52823) (AK.1)

என்றும் தங்கள் நினைவுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்



தோற்றம் • 08 • 06 • 1982

மறைவு • 26 • 11 • 2023

## திருமதி வைஷ்ணவி இளங்கோ

யாழ்ப்பாணம் அல்வாய் வட்டுவத்தையை பிறப்பிடமாகவும், கொழும்பை வாழ்விடமாகவும், ஐக்கிய இராச்சியம் Birmingham இல் வசித்தவருமான திருமதி வைஷ்ணவி இளங்கோ கடந்த மாதம் (26.10.2023) வியாழக்கிழமை மாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆனந்தகுமார் (Bond Master) மற்றும் குகாம்பிகை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும், இளங்கோவின் அன்பு மனைவியும், வைதேகி (Oman), புருஷோத் (UK) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் ஈவா தம்பதிகளின் மருமகளும், சிவகணேசன்-சந்திராதேவி (Sri Lanka), சிவசங்கரன்-ஜெயராணி (Sri Lanka), சிதம்பரநாதன் - அமிர்தகௌரி (Sri Lanka), சுப்ரமணியம், குணநேசன், குணநேசம், விமலா, குணரதனி ஆகியோரின் மருமகளும், முத்துமயில்வாகனம் - அம்பிகை (Germany), தனபாலசிங்கம் - ராதாம்பிகை (Canada), ஸ்ரீநந்தலோஜன்-நவாம்பிகை (Denmark), ஸ்ரீஜெயராமச்சந்திரன் (Canada), நகுலானந்தன் - ஞானாம்பிகை (UK) ஆகியோரின் பெறாமகளும், சிவராகுலன், ராகவி, ரமணீதரன், கேசினி, ஐங்கரன், சிவகணேசன், கோபாலராஜன், அஜந், ஆஷா, நிரோஷன், விவித்தா, சசிகரன், தேவசுவோஜினி ஆகியோரின் மைத்துனியும், மகிந்தன், அபிராமி, ரிஷபி, ரிஷிகர், ஷ°வாபி, பிரதிக்கா, மதுஷன், நிருஷன், விஷ்ணுபிரியா, வேல்முருகா, பிரபா-ரன்ஜன், வினித்தா-டோமினிக், ஜனேஷ், கமலன்-சாரு, அனுசிகா, பிரணவன் ஆகியோரின் சகோதரியும், அமீஷா, அமாயா, சாய்னா ஆகியோரின் மாமியும், கோபிஷா, யாதவ், ஆருஷ், அனுஸ்ரீ ஆகியோரின் சித்தியும், ரோஷேய்ன் துருவனின் பெரியம்மாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (19-11-2023) ஞாயிற்றுகிழமை காலை 9.00 - 11.00 மணியளவில் லண்டனில் உள்ள Hendon Cemetery & Crematorium, Holders (Hill Rd, London NW7 1NB) நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
இளங்கோ (கணவன்) : + 447 3996 04792
புருஷோத் (சகோதரன்): + 447 9606 41315

தகவல்:
சிவகணேசன்
(மாமன்)+947 680 46362

(CS 52821) N-1

# மரண அறிவித்தல்



மலர்வு 25 - 01 - 1962

உதிர்வு 06 - 11 - 2023

## இராமலிங்கம் செல்வநாதன்

யாழ்ப்பாணம் மாட்டீன் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், டென்மார்க் Horsens ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் செல்வநாதன் கடந்த (06-11-2023) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் தவமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான R.S. நடராஜா சிவயோகஇரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சுதாமதியின் அன்புக் கணவரும், லாவண்யன், விதுஷனா, அரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், இரகுநாதன், புனிதவதி, விஜயநாதன், கலாவதி, திலகவதி, இரவீந்திரநாதன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், பிரஷாந் - லக்சியா, பிந்துஜா, இந்துஜா, சாருஜா ஆகியோரின் அன்பு மாமனாரும், சந்திரிகா, ஜனனிகா ஆகியோரின் அன்பு சித்தப்பாவும், விபுஷன், வினோஷன் ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், மனோராணி, யோகராஜா, இந்திரபாலன், புவனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2023) திங்கட்கிழமை 10.00am - 12.00pm Horsens Denmark இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

" கலா பவனம்"
மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

CS 52826 AK.1

தகவல் :
குடும்பத்தினர்
021 221 9501

# மரண அறிவித்தல்



தோற்றம் • 08 • 06 • 1945

மறைவு • 10 • 11 • 2023

## சுந்தரலிங்கம் சந்திரலீலா

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரலிங்கம் சந்திரலீலா 10.11.2023 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் சிவநாயகம் தம்பதியரின் அன்பு மருகமளும், தங்கவடிவேல், கந்தசாமி (சிறி), யோகராசா, யோகராணி, காலஞ்சென்றவர்களான புஸ்பரத்தினம், பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சறோஜா (றதி - ஆசிரியர், யா / குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தியாலயம்), ராஜ்குமார் (ராஜ்குமார் ஸ்ரோர்ஸ் - ஏழாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற ரமேஸ், மதுரா ஆகியோரின் பெரியதாயாரும், ரவிச்சந்திரனின் அன்பு மாமியாரும், நிலக்ஷன், யனோஷன், நிரூபினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடா கடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் கோவிலடி,
சூராவத்தை,
சுன்னாகம்.

(CS 52824) N-1

தகவல்: குடும்பத்தினர்
மகன் : 077 711 0877
மகள் : 077 446 8225

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பு வழிபாடும் நரகா சூரன் போரும் இன்று!

யாழ்ப்பாணம், நவ. 12
தீபாவளி திருநாளை முன்னிட்டு வடமராட்சி, துன்னாலை வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் இன்று சிறப்பு பூசை வழிபாடுகள் இடம்பெற உள்ளதுடன் நரகா சூரன் போரும் இடம் பெற உள்ளது.

தீபாவளி திருநாளை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு அபிஷேகத்துடன் சிறப்பு பூசை வழிபாடுகள் ஆரம்பமாக உள்ளது. தொடர்ந்து காலை 9.30 மணிக்கு வசந்தமண்டப பூசை நடைபெற்று சக்கரத் தாழ்வார் உள்வீதி வலம்வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்க உள்ளார்.


தொடர்ந்து இன்று மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று சக்கரத் தாழ்வார் உள்வீதி சுற்றி வெளி வீதியூடாக வலம்வந்து 6.30 மணிக்கு நரகா சூரன் போர் இடம்பெற உள்ளது. (ஒ-100)

## துர்க்காதேவி ஆலயத்தில் இன்று தீபாவளி வழிபாடு!

யாழ்ப்பாணம், நவ. 12
வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி ஆலயத்தில் தீபாவளித் திருநாளை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

இன்று காலை 8 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி இடம்பெறும். அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு தீபாவளி சிறப்பு நற்சிந்தனையும் இடம்பெறுமென மேற்படி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தெரிவித்தார். (ம-66)

## மரண அறிவித்தல்



தோற்றம் 04 . 03 . 1947

மறைவு 10 . 11 . 2023

### கணபதி பூபாலசிங்கம்

மீசாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி பூபாலசிங்கம் அவர்கள் நேற்றுமுன்தினம் (10.11.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி நாகமுத்து தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான காசிப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகனும், பேரின்பமலரின் அன்புக் கணவரும், இராசேந்திரகுமார், சுபத்திரா (சுவிஸ்), சதீஸ், தர்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், துகிலாதேவி, அஜித்குமார் (சுவிஸ்), ஹறிகரன் (ஜேர்மன்) ஆகியோரின் மாமனாரும், விசாலகன், ஐஸ்விதா, தன்சிகா, யாழ்மதி, தமிழ் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற இந்திராவின் அன்புச் சகோதரனும், ?ர்மபூபதி, துரைராசா, வசந்தமலர், ரவீந்திரராசா, இந்திரமலர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.11.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கார்த்திகேசு வீதி,
மீசாலை

தகவல்:
குடும்பத்தினர்

(cs 52818) (N.1)

## யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது சங்கத்தின் 30.09.2023 ம் திகதியில் முடிவுறுத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் காட்சிப்படுத்தல்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் **2023.09.30** ம் திகதியில் முடிவுறுத்தப்பட்ட வாக்களிக்கத் தகுதியுள்ள வாக்காளர் பட்டியல் விபரம் வருமாறு


| தொ.இல | கிளை இல | கிளையின் பெயர் | அங்கத்தவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | 01 | நாவாந்துறை வடக்கு | 105 |
| 02 | 02 | நாவாந்துறை தெற்கு | 55 |
| 03 | 03சி | முஸ்லீம் | 84 |
| 04 | 04 | ஓட்டுமடம் | 53 |
| 05 | 05 | வண்ணார்பண்ணை | 131 |
| 06 | 07 | வெள்ளாந்தெரு | 274 |
| 07 | 08 | குமரன் | 613 |
| 08 | 09 | கந்தர்டம் | 123 |
| 09 | 10 | யாழ்பாடி | 137 |
| 10 | 11 | நல்லூர் வடக்கு | 88 |
| 11 | 12 | நல்லூர் மத்தி | 155 |
| 12 | 13 | கைலாசபிள்ளையார் | 31 |
| 13 | 14 | ஆனைப்பந்தி | 109 |
| 14 | 15 | ஆரியகுளம் | 37 |
| 15 | 16 | நீராவியடி | 96 |
| 16 | 17 | புங்கன்குளம் | 120 |
| 17 | 18 | அரியாலை மேற்கு | 73 |
| 18 | 19 | அரியாலை மத்தி | 98 |
| 19 | 20 | அரியாலை | 53 |
| 20 | 21 | கொழும்புத்துறை கிழக்கு | 90 |
| 21 | 22 | கொழும்புத்துறை மத்தி | 109 |
| 22 | 23 | பாசையூர் | 113 |
| 23 | 24 | கொய்யாத்தோட்டம் | 51 |
| 24 | 25 | ஈச்சமோட்டை | 141 |
| 25 | 26 | மூர்த்திவிநாயகர் | 95 |
| 26 | 27 | சுண்டுக்குளி | 129 |
| 27 | 28 | ஸ்ரேசன் | 130 |
| 28 | 31 | மவுண்கார்மல் | 160 |
| 29 | 32 | குருநகர் | 139 |
| 30 | 33 | சென்அன்ரனீஸ் | 506 |
| 31 | 35 | சின்னக்கடை | 96 |

மேற்படி **31** கிளைகளுக்குமான வாக்காளர் பட்டியல்கள் **2023.11.13** ம் திகதி தொடக்கம் **2023.11.26** ம் திகதி வரை காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். இதில் இயங்கும் கிளை நிலையங்களுக்கான **01, 02, 05, 07, 08, 09, 11, 12, 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 27, 32** ஆகிய வாக்காளர் பட்டியல்கள் இயங்கும் கிளை நிலையங்களிலும் ஏனைய இயங்காத கிளைகளுக்கான **03 சி. 04, 10, 13, 14, 15, 16, 26, 28, 31, 33, 35** ஆகிய வாக்காளர்பட்டியல்கள் இல. **127** கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள சங்கத்தின் தலைமை அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் என்பதுடன் வாக்காளர் பட்டியல்களில் திருத்தங்கள் மற்றும் ஆட்சேபணைகள் இருப்பின் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்து மூலம் **2023.11.28** ம் திகதிக்கு முன்னர் அறியத் தருமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்,
யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் - வது
13.11.2023

(cr.40985) (N.1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 . 06 . 1956

மறைவு 09 . 11 . 2023

### தொம்மைப்பிள்ளை யேசுரத்தினம்

4ஆம் வட்டாரம், எழுவைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தொம்மைப்பிள்ளை யேசுரத்தினம் அவர்கள் 09.11.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தொம்மைப்பிள்ளை அந்தோனியாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற யோண்பிள்ளை மற்றும் லூர்துதிரேசா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரிகில்டாவின்சி அவர்களின் அன்புக் கணவரும், ஜெசிந்தினி, ஜெவிந்திரன் (பிரான்ஸ்), ஜெயின்சன், றஞ்சினி, புனிதா, அன்ரனிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெனிதா, கோபிநாத், றொமேக்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கோவின்சியா, றொக்சின் ஆகியோரின் அன்புப் பேரனும், அமலோற்பவமரியபுஸ்பம் (அமரர்), பத்திமாபாக்கியராணி (செல்லம்மா), அன்ரனிஇப்போலிற் (ராசா), காலஞ்சென்றவர்களான அந்தோனிதாஸ் (தவம்), பிரானசிஸ் ஆகியோரின் சகோதரரும், அன்ரனியேசுதாசன் (அமரர்), ஜான்சன், குயின், நிக்சன், நெல்சன், கொன்சி (பிரான்ஸ்), ஜான்சி, குயின்சி, றஞ்சி (அமரர்), ஜொய்சி (அமரர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை 14.11.2023 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, எழுவைதீவு புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4 ஆம் வட்டராம்,
எழுவைதீவு.

தகவல்:
குடும்பத்தினர்
076 284 8579
077 8044451

(cr 40971) (N.1)

## மரண அறிவித்தல்



### செல்லத்துரை கந்தசாமி

(கிப்பி கந்தசாமி)

புத்தூரைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி மற்றும் இயக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை கந்தசாமி (கிப்பி கந்தசாமி) அவர்கள் கடந்த 09.11.2023 காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.11.2023) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அச்சுவேலி மடத்தடியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 952490

(CR 40990) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.
இழுத்து பதிக்க ஒரு சதுர அடி - 85 ரூபாய்

077 334 1281

**தேவை**

Hotel க்கு Room Boy தேவை.
சிங்களம் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது.
சமையல் வேலை தெரிந்தவர்களும் தேவை.

0777 242 427
0777 412 713

**மணமகன் தேவை**

றோமன் கத்தோலிக்க குருகுலம் 1985 இல் பிறந்த, கலாநிதி (PhD) சிரேஷ்ட விரிவுரையாளர் மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் எதிர்பாக்கின்றனர்.

077 251 7450

**அறை வாடகைக்கு**

பலாலி வீதி கோண்டாவில் அம்மாச்சி அருகில் பெரிய அறை இணைந்த குளிப்பறை, சமையலறை வாகனத்தரிப்பு வசதிகளுடன் அறை வாடகைக்குண்டு விரிவுரையாளர் / உத்தியோகத்தருக்கு உகந்தது

076 763 1952

**காணி விற்பனைக்கு**

இல.386, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள கடைக்கட்டடம் (210 அடி நீளம், 18 அடி அகலம்) காணி வீடு என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 077 390 2994
077 321 5353

**பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை**

யாழ்ப்பாணம் கைதடி, குருநகர்.
OIC - 1300/-
JSO - 1200/-

தொடர்பு: 075 363 2025

**கடை விற்பனைக்கு**

வண்ணார்பண்ணை சிவன் கோயிலுக்கு முன் வீதியில் கடையொன்று விற்பனைக்குண்டு.

077 138 0670

**காணி விற்பனைக்கு**

சிவப்பிரகாசம் வீதி யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 1 1/4 பரப்பு வெறும் காணி விற்பனைக்கு உண்டு. விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 076 089 1961

**விற்பனைக்கு**

தென்னாங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மாங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

**காணி விற்பனைக்கு**

யாழ். மணிக்கூட்டு வீதியில் (நீராவியடிப் பிள்ளையார் கோயில் பக்கம்) 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 710 2692

**Pick Me மீட்டர் Taxi**

Pick Me Taxi சேவையில் இலவசமாக உங்கள் வாகனங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

077 473 7737

**மணமகன் தேவை**

1992, இந்து, கேட்டை, Development Officer, யாழ்ப்பாணம். மணமகள் பதிவு இல.9830. தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. ஒரு தசாப்தத்துக்கு மேலான சேவை (2012ஆண்டு முதல்)
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை, கொழும்பு - 4.
அழையுங்கள்: 076 664 9401

**மணமகள் தேவை**

1993, இந்து, கார்த்திகை, Team Leader, Australia, மணமகன் பதிவு இல.9844. தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. ஒரு தசாப்தத்துக்கு மேலான சேவை (2012ஆண்டு முதல்)
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை, கொழும்பு - 4.
அழையுங்கள்: 076 664 9401

**மணமகள் தேவை**

1989, இந்து, பூனர்பூசம், Doctor, யாழ்ப்பாணம் மணமகன் பதிவு இல.9815. தரகர்கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. ஒரு தசாப்தத்துக்கு மேலான சேவை (2012ஆண்டு முதல்)
www.EQMarriageService.com
இணையவழி திருமண சேவை, கொழும்பு - 4.
அழையுங்கள்: 076 664 9401


## தீபாவளி கொண்டாட்டமும் ஆண்டு நிறைவும் இன்று

யாழ்ப்பாணம், நவ. 12

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவும் தீபாவளிக் கொண்டாட்டமும் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் சங்கத்தின் தலைவர் நா.சுகந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருமதி.பி.எஸ்.எம். சார்ள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக நெடுந்தீவுப் பிரதேச செயலர் எவ்.சி.சத்தியசோதி, மன்னார் உதவித் தேர்தல் ஆணையாளர் வே.சிவராஜா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

கௌரவிப்புகள், நடன நாட்டியங்கள், கலை,கலாசார ஆற்றுகைகள் என்பன நிகழ்வை சிறப்பிக்கவுள்ளன என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-66)

## குருதிக்கொடை

வவுனியா, நவ.12

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா மாவட்ட அலுவலர்களால் குருதிக்கொடை முகாம் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது. 'உயிர் காப்போம்' என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த முகாமில் 30க்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள், ஆர்வலர்கள் பங்கேற்று குருதிக்கொடையளித்தனர். (ச-75)


**தொடர்மாடிகள் வாடகைக்கு**

பரமேஸ்வரா சந்தியில் புதிதாக அமைக்கப்பட்ட தொடர்மாடிகள் வாடகைக்கு காரியாலயங்கள் விரும்பத்தக்கது.

077 824 9686

**நீர்க்கசிவை தடுப்பதற்கு**

1 சதுர அடி 150/- இல் இருந்து

Finex ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகத்தரமிக்க இரசாயன பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

5% விசேட விலைக்கழிவு

போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்



பரலாஸ்டிக் வெதர்கோட் பிளாற்றினம் பிளக்ஸ்

North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

**BETTA CONSULTANT**

Study in UK
With / without IELTS
- Bachelor's & Master's Programs
- Post study work visa
- Document preparation
- Show money financial sponsor

Work in UK
- IT Company
- Health care
- Food city

Work in Romania
- Work in Romania
- Basic salary US$ 700 - 900

K.K.S. Road, Jaffna.
077 595 1134, 071 040 4773

**ருமேனியாவில் வேலை வாய்ப்புகள்**

BI RECRUITMENT
LICENCE no : 3507
AL/3507/0001/23

- கட்டுமானத் துறையில் வேலை வாய்ப்புகள் (மேசன், தச்சகர்கள், கம்பி பொருத்துபவர்கள், பிளம்பர்கள்)
- பைக் ரைடர் (Bike Riders)
- சுத்தம் செய்பவர்கள் (பெண்)
- சமையல் உதவியாளர்
- கட்டுமான தொழிலாளர்
- தொழிலாளர்கள் (பொது வேலைகள்)



- சம்பளம் 500 யூரோக்கள் மற்றும் அதற்கு மேல் வழங்கப்படும்
- இடம் - Bucharest - ருமேனியா
- ஐரோப்பிய வாழ்க்கை முறை
- உணவு மற்றும் தங்குமிட வசதி இலவசம்
- மருத்துவ வசதிகள் இலவசம்

BI RECRUITMENT
இல.250/3/06, 3ஆம் மாடி,
ஆர். ஏ. டி மெல் மாவத்தை, லிபர்ட்டி ப்ளாஸா.
www.birecruits.com

தொடர்புகளுக்கு
0112 576 656
0117 794 150
0776 929 773


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org